# உஷ்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்புரிமையை வழங்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் கண்டனங்கள் எழுந்துள்ளனவாம். இதனால் எதிர்காலத்தில் தேவையற்ற சர்ச்சைகள் உருவாகலாமென பலரும் தெரிவித்துள்ளனராம்.

அதனால் மீண்டும் பெசில் நாடாளுமன்றம் செல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதாம்.


Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN

தமிலன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 109 சுபகிருது வருடம், ஆடி மாதம் 08ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (24.07.2022) ஹிஜ்ரி-1443, துல்ஹஜ் - 24, 0115886187 - பக்கங்கள் 16+8+8+8

விலை ரூ.100


## நக்கல் நமசிவாயம்




# காலிமுகத்திடல் போராட்டம் மீது அராஜகம்!



## இரவோடிரவாக படையினர் முற்றுகை - கண்மூடித்தனமாக நடந்த தாக்குதல்

- யோ.தர்மராஜ் -

அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனாதிபதி செயலகத்தில் போராட்டம் நடத்திவந்த போராட்டக்காரர்களை இராணுவத்தினர் அடித்து விரட்டியுள்ளதோடு, ஜனாதிபதி செயலகத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

02 ஆம் பக்கம்

## 'வெடி'மணியம்



சும்மா கிடந்த கம்பியை சூலமாக வளைக்கப்போய் அது ஆடு தா, கோழி தா எண்டதாம்!

பூச்சியமாக இருந்த ரணிலை கூப்பிட்டு கோட்டாபய குடுத்த "பதவி" இண்டைக்கு எதுவரை கொண்டுபோய் நிறுத்தியிருக்கிறது எண்டு பாருங்கோ.

சிறிலங்காவின் சனநாயகம் சந்தி சிரிக்கிறது.

ரணில் சொந்த தொகுதியிலேயே மக்களால் புறக்கணிக்கப்பட்டது மட்டுமல்ல, தன்னுடைய சொந்த கட்சியால் கூட புறக்கணிக்கப்பட்டார்.

அப்படியிருந்த ரணில், இறுதியில் தேசியப்பட்டியல் உறுப்பினராக நாடாளுமன்றத்தின் உள்ளே வந்து இண்டைக்கு நாட்டின் சனாதிபதியாக இருக்கிறார்.

மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட ஒருவர் முழு அதிகாரங்களும் கொண்ட நிறைவேற்று சனாதிபதியாக மாறிய கேலிக்கூத்து எந்த சனநாயக நாட்டிலும் நிகழவும் இல்லை. இனிமேல் அப்படி நடக்க வாய்ப்பும் இல்லை.

07 ஆம் பக்கம்



பிரதமர், அமைச்சரவை பதவிப்பிரமாணத்தின் பின்னர் குழு புகைப்படம் எடுக்க முன்னர் பிரதமர் அலுவலக முன்றலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்மாருடன் அளவளாவுகின்றனர். (படப்பிடிப்பு - சமன் அபேசிறிவர்தன)

## இந்திய உதவிகளை இலங்கை முறையாக பயன்படுத்தவில்லை

### புதுடில்லி கருத்து

இந்தியா, இலங்கைக்கு பல வழிகளிலும் உதவிகளை வழங்கியுள்ள போதும் அதில் சில உதவிகள் முழுமையாக பயன்படுத்தப்படவில்லை எனவும் அதனை சீர்செய்வதற்கான வழிமுறை மேற்கொள்ளப்படும் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் பாக்சி தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கம்

## பிரதமராக தினேஷ் குணவர்தன

### அமைச்சரவையும் நியமனம்



இலங்கையின் சிரேஷ்ட அரசியல்வாதிகளுள் ஒருவரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்தன, பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் அவர் வெள்ளிக்கிழமை பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

02 ஆம் பக்கம்

## போராட்டக்காரர்கள் அகற்றப்பட்டமை குறித்து பொலிஸ் ஊடகப் பிரிவு அறிக்கை

ஜனாதிபதி செயலகத்திற்கு அருகிலிருந்த போராட்டக்காரர்கள் அகற்றப்பட்டமை தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

கோட்டை பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்திற்குள்ளும் அதன் பிரதான நுழைவாயில் மற்றும் செயலகத்தை அண்மித்த பகுதிகளிலும் இருந்த ஆர்ப்பாட்டக்காரர்களை முப்படையினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்புடன் அப்புறப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்ததாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கம்

## காலிமுகத்திடல் தாக்குதலுக்கு பல தரப்பிலிருந்தும் கண்டனம்


- யோ.தர்மராஜ் -

ஜனாதிபதி செயலகத்தில் போராட்டம் நடத்திவந்த போராட்டக்காரர்கள் மீது இராணுவத்தினர் தடியடி தாக்குதல் நடத்தி அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றிய சம்பவத்துக்கு பல சர்வதேச நாடுகளின் தூதுவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

02 ஆம் பக்கம்







## இந்திய உதவிகளை...

புதுடில்லியில் வெள்ளிக்கிழமை (22) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைக்கான இந்தியாவின் பொருளாதார உதவிகள் முன்னிலை அடிப்படையில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். இலங்கை மக்களுக்கு தேவையான உதவிகளை இந்தியா அதிகபட்சமாக வழங்கி வருகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

**இந்திய உயர்ஸ்தானிகரகம் அறிக்கை**

இதேவேளை புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில், இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி, இலங்கையின் நாடாளுமன்ற நடைமுறைக்கு ஏற்ப அரசியலமைப்பின் படி ஜனாதிபதி தெரிவு இடம்பெற்றுள்ளது.

இதன் அடிப்படையில் புதிய அரசாங்கம் அமைக்கப்படவுள்ளது. ஏற்கனவே இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளது எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## போராட்டக்காரர்கள்...

இதன்போது, 9 பேர் கைது செய்யப்பட்டதுடன், அவர்களில் இருவர் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

களனி, எம்பிலிப்பிட்டிய, ஜா-எல, இரத்தினபுரி, செவனகல, வெல்லம்பிட்டிய, பிட்டிகல, வாதுவ, நுகேகொடை, ஆகிய பகுதிகளை சேர்ந்த 26 முதல் 58 வயதிற்கு இடைப்பட்டவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் முன்னெடுக்கப்படவுள்ள விசாரணைகளுக்கு தடயவியல் அதிகாரிகள், கைவிரல் அடையாள ஆய்வு அதிகாரிகள் மற்றும் தேவைக்கேற்ப ஏனைய அதிகாரிகளும் அழைக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு மத்திய பிரிவிற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், குறித்த பகுதியில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# மேல்கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து பாடசாலை மாணவியின் சடலம் மீட்பு

(க.கிஷாந்தன்)



தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல்கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து 22.07.2022 அன்று மாலை பாடசாலை மாணவியின் சடலம் ஒன்று மீட்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவத்தனர்.

நீர்த்தேக்கத்தில் சடலமொன்று மிதப்பதைக்கண்டு பிரதேசவாசிகள் தலவாக்கலை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அதன்பின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் லிந்துலை பெயார்பீல்ட் (மிளகுசேனை) தோட்டத்தைச் சேர்ந்த 19 வயதுடைய முத்துரட்ணம் ஜீலோஜினி என்ற லிந்துலை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வெள்ளிக்கிழமை (22.07.2022) காலை தனியார் வகுப்புக்காக தலவாக்கலை நகரத்திற்கு செல்வதாக கூறிவிட்டு வந்ததாக தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் அவரது உறவினர்கள் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

இவர் இந்த வருடம் இடம்பெறவுள்ள க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவி என பொலிஸாரால் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. எனினும், குறித்த மாணவியின் மரணம் தொடர்பாக பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நுவரெலியா நீதிமன்ற நீதிவானின் மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பிரதமராக தினேஷ்...

சிரேஷ்ட இடதுசாரி தலைவர்களுள் ஒருவரான பிலிப் குணவர்தனவின் மகனே, தினேஷ் குணவர்தன ஆவார்.

கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வகுப்புத் தோழன். பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்.

பிலிப் குணவர்தனவின் மறைவின் பின்னர், மஹஜன எக்சத் பெரமுன கட்சியின் தலைமைப்பொறுப்பை ஏற்றார்.

1977 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்டார். எனினும், அவர் வெற்றிபெறவில்லை. 1983 இல் நடைபெற்ற இடைக்கால தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பித்தார். 2 தசாப்தங்களுக்கு மேல் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் 2000 முதல் அவரது கூட்டணி அரசியல் பயணம் தொடர்ந்தது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உதயமான பின்னர் அக்கட்சியுடன் கூட்டணி அமைத்தார்.

கல்வி, வெளிவிவகாரம் உட்பட முக்கிய பல அமைச்சு பதவிகளை வகித்துள்ள அவர், தசாப்தத்துக்கு மேல் சபை முதல்வராகவும் செயற்பட்டு வந்தார். இந்நிலையிலேயே பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் இலங்கையின் புதிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் பிரதமர் அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

பிரதமர், பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் அமைச்சராக தினேஷ் குணவர்த்தன,

நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சராக விஜயதாஸ ராஜபக்ஷ,

கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா,

கல்வி அமைச்சராக சுசில் பிரேம் ஜயந்த,

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடகத்துறை அமைச்சராக பந்துல குணவர்தன,

விவசாய, வன ஜீவராசிகள் மற்றும் வன விலங்கு பாதுகாப்பு அமைச்சராக மஹிந்த அமரவீர,

சுற்றுலா மற்றும் காணி அமைச்சராக ஹரீன் பெர்னாண்டோ,

வெளிவிவகார அமைச்சராக அலி சப்ரி,

சுகாதார, நீர்வழங்கல் அமைச்சராக கெஹெலிய ரம்புக்வெல,

பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் கைத்தொழில் அமைச்சராக ரமேஷ் பத்திரண,

நகர அபிவிருத்தி அமைச்சராக பிரசன்ன ரணதுங்க,

புத்த சாசனம், மத மற்றும் கலாசார விவகார அமைச்சராக விதுர விக்கிரமநாயக்க,

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சராக காஞ்சன விஜயசேகர,

சுற்றுச்சூழல் அமைச்சராக நஸீர் அகமட்,

விளையாட்டு, இளைஞர் விவகார மற்றும் நீர்ப்பாசன அமைச்சராக ரொஷான் ரணசிங்க,

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சராக மனுஷ நாணயக்கார,

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக டிரான் அலஸ்,

வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சராக நளின் ருவன் ஜீவ பெர்னாண்டோ ஆகியோர் பதவிப்பிரமாணம் மேற்கொண்டுள்ளனர்.

## காலிமுகத்திடல் தாக்குதலுக்கு...

புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற மறுநாளே, அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் போராட்டம் நடத்தி வந்த போராட்டக்காரர்கள் இராணுவம் கொண்டு அடித்து விரட்டப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, அச்சம்பவத்துக்கு அமெரிக்க தூதுவர், கனேடிய தூதுவர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட பல தரப்புகளும் கடும் கண்டம் தெரிவித்துள்ளன.

**இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்**

கொழும்பு காலிமுகத்திடலில் எதிர்ப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது அதிகாரிகளால் பலவந்தமாகவும், வன்முறையை தூண்டும் விதத்திலும் நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

காலி முகத்திடலுக்கு மக்கள் பிரவேசிப்பதை தடுக்கும் வகையில் நூற்றுக்கணக்கான பொலிஸாரும், இராணுவத்தினரும் வீதிகளை மறித்துள்ளதை காணக்கூடியதாக உள்ளதென சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறித்த பகுதிக்குள் பிரவேசிப்பதற்கு முயற்சித்த சட்டத்தரணிகளும் தடுக்கப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில் ரீதியில் தலையீடு செய்வதற்கு முயற்சித்த சட்டத்தரணிகளில் குறைந்தபட்சம் இருவர் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நிராயுதபாணிகளான பொதுமக்களை இலக்காகக்கொண்டு ஆயுதமேந்திய இராணுவத்தினர் முன்னெடுக்கும் இந்த நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சட்டவாட்சி மற்றும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது அரசாங்கம் உறுதியளிக்க வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் சங்கம் கோரியுள்ளது.

புதிய ஜனாதிபதி பதவியேற்று முதல் நாளிலேயே பொதுமக்களின் எதிர்ப்பு நடவடிக்கையை ஒடுக்குவதற்கு ஆயுதமேந்திய படையினரை பயன்படுத்தியுள்ளமை நாட்டின் சமூக பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை நடத்துமாறும் தொடர்புடையவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு கட்டளையிட்ட அனைவரும் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**மனித உரிமைகள் ஆணைக்குழு**

காலி முகத்திடலில் அமைதியான முறையில் எதிர்ப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது அதிகாலை வேளையில் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை கண்டிப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த தாக்குதல் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும், மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையிலான சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துமாறும் மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுப்பதாகவும் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**அமெரிக்க தூதுவர்**

காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுக்கு எதிராக அதிகாலை வேளையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி ஜங் தெரிவித்துள்ளார்.

இதன்போது காயமடைந்தவர்களுக்கு மருத்துவ சிகிச்சைகளை வழங்குதவற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளை கேட்டுக்கொள்வதாக அவர் ட்விட்டரில் பதிவிட்டிருந்தார்.

**பிரித்தானிய உயர்ஸ்தானிகர்**

காலிமுகத்திடல் போராட்டக்களம் தொடர்பான செய்திகள் குறித்து உன்னிப்பாக கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் தெரிவித்துள்ளார்.

அமைதியான போராட்டங்களை முன்னெடுப்பதற்குள்ள உரிமைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் எனவும் அவர் ட்விட்டரில் பதிவிட்டிருந்தார்.

**கனேடிய உயர்ஸ்தானிகர்**

அதிகாரிகள் பொறுமையுடனும் வன்முறையிலிருந்து ஒதுங்கி செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னன் வலியுறுத்தியிருந்தார். போராட்டக்களத்தில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அவர் விடுத்துள்ள ட்விட்டர் பதிவில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

**ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர்**

காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க பலாத்காரத்தைப் பயன்படுத்தியமை குறித்து தான் மிகவும் கவலையடைவதாக இலங்கைக்கான ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர்-ஹம்டி தெரிவித்திருந்தார்.

ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு ஆர்ப்பாட்டங்களை கண்காணிக்க உரிமை உண்டு என்றும், அவர்களின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்றும் ட்விட்டரில் கருத்து தெரிவித்திருந்தார்.

எதிர்ப்புகள் மற்றும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையை நசுக்கும் நடவடிக்கைகள் இலங்கையில் பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரமின்மையை மோசமாக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

**சர்வதேச மன்னிப்பு சபையின் தெற்காசிய அலுவலகம்**

கொழும்பில் அமைதியாக போராட்டம் முன்னெடுக்கப்பட்ட பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் நடத்திய தாக்குதல் தொடர்பில் சர்வதேச மன்னிப்பு சபையின் தெற்காசிய அலுவலகம் ட்விட்டரில் பதிவொன்றை பதிவிட்டிருந்தது. சட்டத்திற்கு புறம்பாக கைதுசெய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஹனா சிங்கர்-ஹம்டி, இரு பிரிவினரும் பரந்த பொது ஆலோசனைகளுக்கு இணங்க அமைதியான தீர்வுகளை அடைய அழைப்பு விடுத்தார். அதுதான் முன்னோக்கி செல்லும் ஒரே வழி என்று கூறியுள்ளார்.

**சுதந்திர ஊடக இயக்கம்**

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டு 24 மணித்தியாலங்கள் கூட கடப்பதற்கு முன், கடந்த 22 ஆம் திகதி அதிகாலை காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் பாதுகாப்புப் படையினர் நடத்திய மனிதாபிமானமற்ற தாக்குதலை சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

குறித்த சம்பவங்களை அறிக்கையிட்டுக் கொண்டிருந்த உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டுள்ளதுடன், அவர்களது கெமரா உள்ளிட்ட உபகரணங்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

மதகுருமார், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளி சமூகத்தினர் மீதும் இராணுவத்தினர் கொடூரமாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதலில் ஏராளமானோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களை சிகிச்சைக்காகக் கொண்டு செல்வதை கூடப் பாதுகாப்புப் படையினர் தடுத்துள்ளனர்.

ஜனாதிபதி செயலக வளாகத்தை விட்டு வெளியேறப்போவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் பகிரங்கமாக அறிவித்திருந்த நிலையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், இது போன்ற ஆயுதப் படைகளைப் பிரயோகிப்பதற்கான எவ்வித தேவைப்பாடும் காணப்படவில்லை என்பது தெளிவான விடயமாகும். மேலும், இது இலங்கை எதிர்கொண்டுள்ள துரதிஷ்டவசமான தலைவிதியை மேலும் மோசமாக்கும் ஒரு முட்டாள் செயலாகும்.

இந்தத் தாக்குதல் குடிமக்களின் அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளும் உரிமை, கருத்துக்களை வெளியிடும் உரிமை, சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற கோரமான இம்சைகளிலிருந்து விடுபடுவதற்கான உரிமை, பத்திரிகையாளர்கள் தங்கள் தொழிலில் ஈடுபடும் உரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக வலுவாக வலியுறுத்திக்கொள்ளும் சுதந்திர ஊடக இயக்கம் ஊடக சமூகம் மற்றும் வழக்கறிஞர் சமூகத்துடன் இணைந்து இது தொடர்பாக மேற்கொள்ள முடியுமான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தயங்கப்போவதில்லை.




## காலிமுகத்திடல்...

104 நாட்களுக்கு மேலாக போராட்டத்தில் ஈடுபட்டுவந்த போராட்டக்காரர்களை வெள்ளிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தின் பக்கமிருந்து உள்நுழைந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினரும் போராட்டக்காரர்களையும் அவர்களின் தற்காலிக கூடாரங்களையும் அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தனர்.

நாட்டின் பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவே காரணம் என குற்றம் சாட்டிவந்த நிலையில், அவருடைய ஆட்சியில் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொண்ட ரணில் விக்கிரமசிங்கவை பிரச்சினையின் ஒரு பகுதியாகவே மக்கள் பார்க்கின்றனர். எனினும், அவர் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் வெற்றி பெற்று, கடந்த 21 ஆம் திகதி ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டார். அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டது தொடக்கம் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பதவியேற்ற உடனேயே, அரசாங்கத்தைக் மாற்றுவதற்கு அல்லது ஜனாதிபதி செயலகம், அலுவலகம் போன்றவற்றை ஆக்கிரமிப்பதற்கான எந்தவொரு முயற்சியும் ஜனநாயகமல்ல என்பதோடு, அதனையும் மீறி போராட்டம் என்ற போர்வையில் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது சட்டத்தின்படி கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், போராட்டக்காரர்கள் மீது அடக்குமுறைகள் முன்னெடுக்கப்படலாம் என்பதால் அலரி மாளிகைக்கு முன்பாக இருந்த “நோ டீல் கம” போராட்டக்காரர்கள் அங்கிருந்து கடந்த 21 ஆம் திகதி வெளியேறி இருந்தனர். அத்தோடு, கடந்த 9 ஆம் திகதி போராட்டக்காரர்களினால் கைப்பற்றப்பட்டிருந்த ஜனாதிபதி செயலகத்தின் வளாகம் மாத்திரம் போராட்டக்காரர்களின் வசமிருந்த நிலையில், அதனையும் நேற்று முன்தினம் மாலை அரசாங்கத்திடம் கையளிக்க போராட்டக்காரர்கள் தீர்மானித்திருந்தனர்.

எனினும், ஜனாதிபதி செயலகத்தை கடந்த 104 நாட்களாக முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வந்த போராட்டக்காரர்களை நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் இராணுவத்தினர் அங்கிருந்து அடித்துவிரட்டியதோடு, ஜனாதிபதி செயலகம் மற்றும் அதை அண்மித்த வளாகத்தையும் பாதுகாப்பு தரப்பினர் தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தை அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு திடீரென ஆயிரக்கணக்கான இராணுவம் மற்றும் பொலிஸ் வரழைக்கப்பட்டிருந்தனர். எனினும், அங்கிருந்த போராட்டக்காரர்கள் கடும் அச்சத்துடன் போராட்டத்தை ஒடுக்க முயற்சிக்க வேண்டாம் என கோஷமிட்டனர்.

எனினும், அதனை மீறியும் ஜனாதிபதி செயலகத்திற்குள் பிரவேசிக்கும் அனைத்து வீதிகளையும் இராணுவத்தினர், தடுப்பு வேலிகளை அமைத்து முற்றுகையிட்டனர். பின்னர், திடீரென ஜனாதிபதி செயலக வளாகத்திற்குள் புகுந்த இராணுவத்தினர், அங்கு போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களை அங்கிருந்து கலைந்து செல்லுமாறு அச்சுறுத்தினர்.

இராணுவத்தின் தடியடி தாக்குதலையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர், யுவதிகள், ஜனாதிபதி செயலக வளாகத்தை விட்டு வெளியேறி, அங்கும் இங்கும் ஓடினர். பின்னர், ஜனாதிபதி செயலகத்தை அண்மித்த பகுதியிலிருந்து இளைஞர், யுவதிகள் வெளியேற்றப்பட்டதையடுத்து, அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களை இராணுவத்தினர் உடைத்து அகற்றினர்.

ஜனாதிபதி செயலகம் தொடக்கம் காலிமுகடத்திடலில் போராட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் வரை இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன், அங்கிருந்த அனைத்து தற்காலிக கூடாரங்களும் அகற்றப்பட்டுள்ளன. மேலும், ஜனாதிபதி செயலகத்திற்குள் நுழையும் வீதிகளில் தற்காலிக பாதுகாப்பு தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளதோடு, பாதுகாப்புக்காக இராணுவம் மற்றும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், அங்கிருக்கும் போராட்டக்காரர்கள் தங்களுடைய போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதாகக் கூறி காலிமுகத்திடலில் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர். இதேவேளை, போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியபோது, அங்கு செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்து சர்வதேச மற்றும் தேசிய ஊடகவியலாளர்கள் மீதும் இராணுவத்தினர் தாக்குல் நடத்தியுள்ளனர். இதனால், சில ஊடகவியலாளர்கள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், போராட்டக்காரர்களை அகற்றுவதற்காக நடவடிக்கையின் போது, ஏற்பட்ட முரண்பாடுகளில் 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, அவர்களில் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

# ரணிலின் மறுபக்கம்!

"நானும் சம்பந்தனும் இருக்கும் காலத்தில் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காணவேண்டும்" – இப்படி ஒருமுறை ரணில் தெரிவித்திருந்தார்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட காலத்தில் ஒருநாள் மஹாராஜா நிறுவனத்தின் தலைவர் அமரர் ராஜமகேந்திரன் திடீரென்று என்னை அழைத்து, "நாளை மறுதினம் காலை நானும் நீரும் ஓரிடத்திற்குப் போகிறோம்" என்றார்.

அவர் சொன்ன நாளும் வந்தது.

அன்று அதிகாலை ஐந்தரை மணியளவில் எனக்கு தொலைபேசி அழைப்பெடுத்து காலை வணக்கமும் சொல்லி "வரதராஜன் இன்று நாங்கள் ஓரிடத்துக்குப் போகவுள்ளோம்... அல்லவா" என்று மீண்டும் நினைவூட்டினார்.

அந்தப் பயணத்தில் அவர் அவ்வளவு அக்கறையாகவிருந்தார்.

அவர் சொன்னபடியே அவர் இல்லத்துக்குப்போக வெளியே வந்த அவர் நேராகத் தமது வாகனத்தை நோக்கிச் சென்றார். வழக்கமாகச் சாரதி ஓட்டும் வாகனத்தை அவரே ஓட்டச் சென்றது எனக்கு மேலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.



# யாழ். நகரில் மதத் தலைவர்கள்

[அரியாலை]

நான்கு மத பீடத் தலைவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளார்கள்.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் கர்தினால் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை, கொழும்பு திருமண்டலப் பேராயர் சுவீகின் பெர்னாண்டோ ஆண்டகை, குருநாகலை திருமண்டலப் பேராயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்கா ஆண்டகை, இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அருட்திரு. சோமா பெரேரா அடிகளார் ஆகியோரே யாழ்ப்பாணம் வந்துள்ள மதபீடத் தலைவர்களாவர்.

திருச்சபைகளின் தலைவர்களடங்கிய மகாநாடொன்று யாழ். கத்தோலிக்க திருமறை மாவட்ட பேராயர் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பாதுகாப்பு நெருக்குவாரங்கள் அவருக்கும் அவருடைய ஊடக நிறுவனங்களுக்கும் இருந்த காலமது என்பதால் எனக்கு சற்று யோசனையாகவேயிருந்தது.

இவர் எங்கு போகப்போகிறார் என்று யோசித்தேன்.. "ஏறும் ஐசே" என தாமாகவே முன் கதவைத் திறந்து என்னை ஏறவைத்து தாமே வாகனத்தை ஓட்டினார்.

எங்கு போகிறோம் என்று தெரிகிறதா...? என்று அவரது வழமையான நையாண்டிப் பார்வையால் என்னைச் சங்கடப்படுத்தியபடி கொள்ளுப்பிட்டிப் பகுதிக்குள்ளேயே வாகனத்தை ஓட்டிக்கொண்டு...

நாங்கள் நுழைந்த இடத்தில் பல படைவீரர்கள், பாதுகாப்பு ஊழியர்கள் காணப்பட அவர் பின்னால் நான் தொடர... அங்கு நின்ற அதிகாரிகள் இவருக்கு மரியாதை செய்தபடி விலகி நிற்க நேரே இவர் சென்ற அறையில் ரணில் அமர்ந்திருந்தார். அவருடன் வேறு சிலரும் இருந்தனர்.

காலை வணக்கம் சொன்னபடியே "இவர் வரதராஜன் நான் சொன்னவர்" என என்னை அறிமுகம் செய்த எனது தலைவர் ராஜமகேந்திரன், அந்த அறிமுகத்தில் இன்னுமொரு வசனத்தையும் சொன்னார்.

என்னை நம்புவதுபோல இவரையும் நீங்கள் நம்பலாம்... ஆளை விட்டு விட்டுப் போகிறேன். நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று சொன்னால் அவர் செய்வார். நல்ல கிரியேட்டிவ் ஆள் அரசியல் விடயங்கள், குறிப்பாக தமிழ் அரசியல் விடயங்கள் அறிந்தவன்... என்று எனது தலையைத் தட்டி அவருக்கு அறிமுகம் செய்த நாளாக எனது வாழ்வில் அந்தநாள் அமைந்தது.

இதனை எனது பெருமையாக நான் குறிப்பிடவில்லை. தலைவர் அப்படியான ஒருவராக என்னைக் கணிப்பிட்டிருக்கிறாரே என்று மனதில் நினைத்தேன். பெருமையும் அடைந்தேன் என்று சொல்ல வேண்டாமா? என்ன?

அங்கிருந்து மீண்டும் ராஜமகேந்திரனின் இல்லத்தை நோக்கிப் போகும்போது "நான் வெளியில் பயணம் போகிறேன். நீர்தான் இந்த ஆளின் விளம்பரம், நிகழ்ச்சிகள் என்பவற்றைத் தமிழில் சரியாகப் பார்க்க வேண்டும். அவரை வெல்லப் பண்ணுவது உமது வேலை. பார்ப்போம்..." என்று சொன்னது இன்றும் நினைவில் உள்ளது.

ரணிலுடன் ஜனாதிபதித் தேர்தல்முதல் பின்னர் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்வரை அவரதும் அவரது கட்சியின் தமிழ் விளம்பரங்கள், செய்திக் காண்பியங்கள், குறுங் காணொளிகள், விவரணங்கள் எனப் பணியாற்றும் சந்தர்ப்பம் ஏற்பட்டதால் அவரது ஆளுமை, ஆற்றல், தலைமைத்துவம், தமிழர் விவகாரம் தொடர்பாக அவர் கொண்டிருந்த கவனம் என்பவற்றினை நேரில் அறியவும் உணரவும் கிடைத்த சந்தர்ப்ப வரமாக நான் அந்த நாட்களை நினைக்கிறேன்.

முதன் முதல் அவரது இல்லத்தைப் பார்த்தபோது எனக்கு ஒரு நூலகத்தைப் பார்ப்பது போலவேயிருந்தது.

பருத்தித்துறையில் விலங்கியற் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கத்தின் இல்லத்திற்குப் போனவர்கள் அவர் வீட்டில் நூல்கள் எல்லா இடமும் அடுக்கப்பட்டிருப்பதைப் பற்றிக் கதைக்கத் தவறுவதில்லை. அதற்குப் பின்னர் நான் அப்படிக் கண்ட வீடு தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் கொழும்பு இல்லம். இவற்றுக்குப் பின்னர் நூலகமாக நான் கண்டது ரணிலினுடைய வீடு ஆகும்.

ரணிலின் வீடு எரிக்கப்பட்டபோது எம்மவர் பலர் பலவகையான பதிவுகளையும் இட்டனர். கல்வி அமைச்சிற்கும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சிற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் அரசியல் பதிவிட அதனைக் குரற்படுத்தி ஒலிவடிவமாக டிக்டொக்கிலும் யூடியூப்பிலும் சிலர் இட்டிருந்தனர்.

பொது நூலகங்களுக்கு உள்ளூராட்சித் திணைக்களம் பொறுப்பே தவிர கல்வி அமைச்சு அல்ல என்பது தெரியாமல் பதிவுகள் இடப்படுகின்றன. இவர்களுக்குத் தெரிந்தது யாழ் நூலகம் என்பதும் ஹாட்லிக் கல்லூரி நூலகம் என்பதும் மட்டும் தான்.

அவைபற்றியே இவர்கள் அறிந்து வைத்துள்ளனர் என்பதும் கவலைக்குரியது. இவர்களுக்கு இவை மட்டுமே நினைவுக்கு வரலாம். அதில் தப்பேதுமில்லை. ஆனால் ஐ.தே.கவிலுள்ள வரலாறு தெரிந்தவர்கள் ரணில் விக்ரமசிங்கவின் இல்லத்தின் தீவைப்பின்போது தங்கள் கட்சியின் வரலாற்றை மீட்டுப்பார்த்தால்,

ஐ.தே.க. ஆட்சியின்போது 1977இல் இடம்பெற்ற தீ வைப்புகள், அதை நியாயப்படுத்த ரணிலாரின் மாமனார் ஜே.ஆர். சொன்ன "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்ற உரை, 1983இல் எரிக்கப்பட்ட தமிழர்களின் இல்லங்கள் அவற்றுள் ஒவ்வொரு வீட்டிலும் எரிந்த நூல்கள், இசைக்கருவிகள், பியானோக்கள்,

1987 வடமராட்சி ஒப்பரேசனில் இடம்பெயர்ந்த மக்களின் நூல்கள், வீடுகள் ஒவ்வொன்றின் நூலகங்கள்.

ஐ.தே.கட்சி அரசாங்கம் தொடக்கிவைத்த போரின் தொடர்ச்சியாக இடம்பெற்ற இடப்பெயர்வுகளினால் அழிந்தொழிந்துபோன நூல்கள் என்பன எல்லாம் தமது கட்சியின் தலைவரின் இல்ல நூலகம் எரிக்கப்பட்டபோது வந்திருந்தால் அவர்களின் மனதில் நாட்டின் மாற்றத்துக்கான மாற்றத்தை நிச்சயமாக ஏற்படுத்தியிருக்கக்கூடும்.

ரணில் விக்ரமசிங்க தமது கட்சியின் தலைவராக நாடாளுமன்றத்திலேயே நெருப்பைப் பார்த்தவர். ஆனால் அப்போது அவருக்கு வருத்தமோ கண்ணீரோ வரவில்லை. சந்திரிகா அரசு கொண்டுவந்த அரசியலமைப்பு யோசனையை தமது கட்சிக்காரர் தீ வைத்துக் கொளுத்தும்போது அவர் பார்த்துக் கொண்டிருந்தார்.

அன்று அந்தத் தீ அனர்த்தத்தைத் தவிர்த்து இன்றுள்ளது போல திடமான தலைவராக அவர் நாட்டு நலனுக்காகச் செயற்பட்டிருந்தால், தமது வீடு எரியும் இந்த நாளைக்கூட அவர் தமது வாழ்நாளில் காணும் வாய்ப்புக் கூட ஏற்பட்டிருக்காது. ஆகவே ரணிலின் வீடு எரிப்பை யாழ் நூலகத்துடன் மட்டுமே இணைத்து குறிப்புகளைக் குறுக்கிவிட முடியாது.

சரி, யாழ் நூலக எரிப்புக்கே வருவோம்.

யாழ் நூலகம் எரிக்கப்பட்டது 1981இல். 1984இல் பருத்தித்துறை பொலிஸ் நிலையம் தாக்குதலுக்குள்ளான பின்னர் பாதுகாப்பு துறைமுகம் வரை பெருப்பிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் தாக்குதல் சம்பவம் ஒன்றையடுத்து அருகிலிருந்த கட்டிடங்கள், வீடுகள் உட்பட அப்பாதுகாப்புப் பிரதேசத்திலிருந்த ஹாட்லிக் கல்லூரி நூலகமும் தீ வைக்கப்பட்டது.

1981ஆம் ஆண்டு யாழ். நூலகம் எரிக்கப்பட்டபோது அதில் இன்று ரணில் தலைவராகவிருக்கும் அவரது அதே ஐ.தே.கட்சி ஆட்சியிலிருந்தது. ஐ.தே.க. அமைச்சர்கள் சிலர் அதில் தொடர்புபட்டிருந்தனர்.

நூலகத்துடன் யாழ்ப்பாணத்தில் மேலும் பல தீவைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன. யாழ் அனர்த்தங்கள் தொடர்பாக தமிழர் கூட்டணி ஆறு அம்சக் கோரிக்கையை முன்வைத்தது.

அமைச்சரவையிலும் ஐ.தே.க. உயர்மட்டத்திலும் அதனை ஆதரித்தவர்களில் மூவர் முக்கியமானவர்கள் என அப்போது பேசப்பட்டது. ஒருவர் மருத்துவர் ரஞ்சித் அத்தப்பத்து மற்றவர் ஷெல்டன் ரணராஜா. அடுத்தவர் ரணில் விக்ரமசிங்க.

பிரதமர் பிரேமதாச தான் உள்ளூராட்சி அமைச்சர். அதனால் அவர்தான் உள்ளூராட்சி நூலகங்களுக்குப் பொறுப்பானவர். அவர் யாழ். மேயர் விசுவநாதனை அழைத்து தமது அமைச்சிலிருந்து நிதி வழங்க ஏற்பாடுசெய்தார். (இளம் அரசியற் பதிவாளர்களுக்காக: அமரர் விசுவநாதன் தான் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் உருத்திரகுமாரின் தந்தை ஆவார்.)

யாழ். நூலகம் எரிக்கப்பட்டமையின் கர்த்தாக்கள் என அவ்வேளையில் தேசிய பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்த லலித் அத்துலத் முதலியையும் மகாவலி அபிவிருத்தி, காணி அபிவிருத்தி அமைச்சராகவிருந்த காமினி திசாநாயக்கவையும் பிற்காலத்தில் அவர்கள் பிரேமதாசவுக்கு எதிராகக் குற்றப்பிரேரணை கொண்டுவந்த காலத்தில், பிரேமதாச அவர்கள் மீது குற்றம் சாட்டியமையும் குறிப்பிடத்தக்கது.

இதைவிட, யாழ் நூலகம் எரிக்கப்பட்டு அடுத்த மூன்று நான்கு தினங்களில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த தெற்கின் தலைவர் குருணாகல் திருமண்டலப் (அங்கிளிக்கன் திருச்சபை) பேராயர் லக்ஷ்மன் விக்ரமசிங்க அவர்களாவார். 1983 இனவன்செயலின்போதும் ஜே.ஆரையும் அரசையும் கண்டித்து இந்தப் பாவங்கள் உங்களை சும்மா விடாது என அறிக்கை விட்டவர். இவர் ரணில் விக்ரமசிங்கவின் மாமனார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவர் முதலில் தென்னிலங்கையிலுள்ள ஏனைய கிறிஸ்தவ சபை ஆயர்களையும் அழைத்து ஒருங்கிணைத்து யாழ். ஆயர் தியாகுப்பிள்ளையை சந்தித்தார். எனது நினைவு சரியாயின், அவர் பின்னர் யாழ். ஆயர் தியாகுப்பிள்ளை தலைமையில் பௌத்த மத பீட பிக்குமார்களையும் இஸ்லாமிய மதத்தலைவர்களையும் இணைத்து யாழ் நூலக நிவாரணம் தொடர்பான குழுவை அமைத்தார்.

யாழ் நூலகம், ஈழநாடு அலுவலகம், யோகேஸ் எம்.பியின் அலுவலகம், இல்லம், ஏனைய அனர்த்தச் சம்பவங்கள் ஆகியவற்றின் பின் யாழ்ப்பாணத்துக்கு அடுத்து வந்த தலைவர் இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பீற்றர் கெனமன் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1983 இனவன்செயலின்போதும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஜே.ஆர். ஜயவர்த்தனவுக்கு தமது கண்டனத்தைத் தெரிவித்து, இந்த அழிப்புகளுக்கு ஏற்ற தண்டனையை நீங்கள் பெறுவீர்கள் என அறிக்கை விட்டவர் ரணிலின் மாமனாரான ஆயர் லக்ஸ்மன் விக்ரமசிங்க.

யாழ் நூலகம் எரிக்கப்பட்டமை தொடர்பாக, இதுவரையில் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்ட தெற்கின் தலைவர் ரணில் மட்டுமே என்பதையும் இங்கு குறிப்பிடல் தகும். ரணில், யாழ் நூலகத்தைக் கொளுத்திய ஆட்சியிலும் கட்சியிலுமிருந்தார். அதனால் அவரது வீடும் நூலகமும் எரிந்தமை மகிழ்ச்சி. அவை எரியவேண்டும் எனப் பதிவிடும் இளையவர்களும் "தமிழ்த் தேசிய இளம் ஆர்வலர்களும்" கவனிக்கவேண்டிய ஒரு விடயம் உள்ளது.

இவர்கள் பிறப்பதற்கு முன்னர் 1981, 82இல்... இடம்பெற்ற ஒரு சம்பவத்தை இங்கு தருகிறேன். கரவெட்டி சாமியனரசடி வைரவர் கோவில் முன்றலில் முதன் முறையாக ஓமா முக்தார் என்ற படம் திரையிடப்பட்டது. தமிழர் விடுதலையில் ஆர்வமும் எழுச்சியும் கிளர்ந்தெழுந்த காலத்தில் ஊர் ஊராக எந்த இயக்கம் என இல்லாமல்... இப்படிப் படங்கள் காட்டப்பட்ட நேரம் அது.

இப்படியான திரைப்படங்களைப் பார்த்த பலர் இன்று எம்முடன் இல்லை. அவர்களிற் பலர் விடுதலை இயக்கங்களில் இணைந்து பணியாற்றியவர்கள். போராடியவர்கள். ஓமார் முக்தார் திரைப்படம் பின்னர் ரூபவாஹினியிலும் (தணிக்கையுடன்), ஐ.ரி.என்னில் தணிக்கையின்றியும் ஒளிபரப்பானது.

அதில் இடம்பெறும் சில காட்சிகள் இன்றும் நினைவில் பலருக்கு இருக்கலாம். குறிப்பாக மூத்த தமிழ் இயக்கங்களின் மூத்த பிரமுகர்களுக்கு நிச்சயம் இருக்கும். என்னுடன் அண்மையில் இந்தப்படத்தைப் பற்றிப் பேசிய மூத்த போராளி ஒருவர், அவர் அழகியல், அரசியல், சமூகவியல் தொடர்பான பரந்த அறிவுள்ள ஊடகருமாவார்.

அவர் அந்தப்படம் பற்றி ஒருமுறை பேசும்போது குறிப்பிட்ட காட்சியை இங்கு பகிர்ந்து கொள்வது ரணிலின் வீடு எரிந்தமை பற்றிப் பதிவிடும் நம்மவர்களுக்கு மிகவும் பொருத்தமானது என்பேன்.

அந்தத் திரைப்படத்தில் ஓமார் முக்தாரிடம் அவரது போராளிகள் "தாம் கைதுசெய்த எதிரிகளைக் கொண்டு வருவார்கள். அவர்களுக்கு உரிய முறையில் தண்டனை வழங்க வேண்டும்" என்று கூறுவார்கள்.

"இவர்கள் போர்க்குற்றம் செய்தவர்கள். இவர்கள் எம்மவர்க்குச் செய்ததுபோல் இவர்களுக்கும் நாம் செய்யவேண்டும்! – என்பார்கள். சற்று அமைதியாகவிருந்த ஓமார் முக்தார்... சில விநாடிகளில் அவர்களுக்குச் சொல்லும் பதில் இது...

"எதிரிகள் எங்கள் எதிரிகளே. அவர்களிடம் கற்றுக்கொள்ள அவர்கள் எங்கள் ஆசிரியர்கள் அல்ல!" ஓமார் முக்தார் திரைப்படத்தில் வரும் காட்சியது.

யாழ் நூலகத்தை எரித்த பழி ஐக்கிய தேசியக் கட்சிக்குரியது. அதன் தலைமை என்றும் அதனைச் சுமந்து நிற்கிறது. அதன் இன்றைய தலைவர் ரணில் அதனைச் சுமக்கிறார் என தமிழர்கள் சொல்லலாம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்புக்காகவும் தொடக்கத்தில் உழைத்த தமிழர்கள் காலப்போக்கில் அதனைவிட்டு விலகியமை அதன் பாவங்களில் ஒன்று.

இலங்கையின் இன்றைய பேரவலத்தின் தீ நாக்கான சிங்களச் சட்டம் 1956இல் அறிமுகமானபோது ஐ.தே.கட்சி அதனை ஆதரிக்க, அதனால் வெறுப்படைந்து, மனமுடைந்து வெளியேறி ஜீ.ஜீ.யுடன் தமிழ்க் காங்கிரஸில் இணைந்தவர் கனகநாயகம். அவரின் புதல்வரே சட்ட அறிஞர் கனகேஸ்வரன் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படியான பாவங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உண்டு.



பேராயர் லக்ஸ்மன் விக்ரமசிங்க

தமது வீடு தீவைக்கப்பட்ட பின்னர் ரணில் ஆற்றிய உரையின் கடைசி வரிகளில், "தமது முன்னோர்களதும் ஊழ்வினைப் பயன் இது" என்பதை அவர் குறிப்பிடுவதிலிருந்து தாம் கற்றுக்கொண்ட பாடத்தை உணர்ந்துள்ளார் என்பது தெரிகிறது. அவர் எவை எவற்றை நினைத்துச் சொன்னாரோ என்பது அவருக்குத்தான் தெரியும்.

நான் அவருடன் தேர்தல் காலத்தில் பணியாற்றியபோது கண்ட, கேட்ட அனுபவங்கள் பல. அவற்றில் ஒன்றை மட்டும் குறிப்பிட்டு இப்பதிவை முடிவுசெய்கிறேன். அந்த நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் விடுத்த அறிக்கை பற்றி திஸ்ஸ அத்தநாயக்க ரணிலிடம் வந்துசொன்னார். அவர் சொன்ன விடயம் சம்பந்தனுடைய அறிக்கை தொடர்பாக ரணில் ஓர் அறிக்கை விடவேண்டும் – என்பதாக இருந்தது.

அதற்கு ரணில் சொன்ன பதில் அது சம்பந்தனின் அறிக்கை அல்ல என்பதாகவும் அதனைக் கருத்தில் எடுக்கவேண்டிய அவசியமில்லை என்பதாகவுமிருந்தது. சமாதான விடயத்தில் அவர் அக்கறையாகவும் அவதானமாகவுமிருந்ததை அவதானிக்க முடிந்தது.

அவ்வேளை அவ்விடத்திலிருந்த நான் ரணிலிடம் "லீடர் நீங்களும் சம்பந்தனும் ஒரே நாளிற் தானே நாடாளுமன்றம் போனீர்கள் சேர்" என்றேன். ஆம் என்று தலையாட்டிய அவர் படாரென "இராஜலிங்கம், சூசைதாசன், கணேசலிங்கம், யோகேஸ்... எல்லோரும் ஒன்றாக வந்தவர்கள். அவர்கள் நல்ல திறமைசாலிகள். நல்ல பேச்சாளர்கள் நல்ல விடயங்களைப் பேசுவார்கள்" என்று சொல்லிவிட்டு அருகிலிருந்த ருக்மன் சேனநாயக்கவைப் பார்த்து "நானும் சம்பந்தனும் ஒன்றாக வந்தோம். நாமிருவரும் இருக்கும் காலத்திலேயே இனப்பிரச்சினைக்கும் தீர்வைக் காணவேண்டும்" என்றார்! காலம் வந்துள்ளது. அதனைச் செய்வாரா என்பதைக் காலம் தான் சொல்ல வேண்டும்!



**(மரியாம்பிள்ளை வரதராஜன் நியூசிலாந்திலிருந்து...)**

வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 12.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

# ஜனநாயகப் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்கலாமா?

நாட்டின் எட்டாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள ரணில் விக்ரமசிங்க குறித்து எதிர்பார்ப்புகள் அதிகமாயிருந்த நிலையில், அவற்றுக்கு நேரெதிராக தனது பலத்தை போராட்டக்காரர்கள் மீது பயன்படுத்தியிருக்கிறார்.

நாடாளுமன்ற வளாகத்தில், பிரதம நீதியரசர் முன்னிலையில் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் மேற்கொண்டு 24 மணித்தியாலங்களுக்குள் ஜனநாயகப் போராளிகள் மீது தாக்குதல் நடத்தும் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

காலி முகத்திடலில் நூறு நாட்களுக்கும் அதிகமாக போராட்டக்காரர்கள் தங்கியிருந்து அரசாங்கத்துக்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இந்நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில், பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப்படை உள்ளடங்கலாக முப்படையினர் காலி முகத்திடலுக்கு வரவழைக்கப்பட்டு போராட்டக்காரர்கள் பலவந்தமாக அங்கிருந்து அகற்றப்பட்டார்கள்.

அவர்களில் பலர் படையினரின் கடுமையான தாக்குதலுக்கு உள்ளானதுடன், ஊடகவியலாளர்களும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளார்கள்.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் இருந்த அனைவரையும் பாதுகாப்புப் படை அகற்றியது. இந்த ஆக்கிரமிப்பை சற்றும் எதிர்பாராத போராட்டக்காரர்கள் கதிகலங்கிப் போயிருந்தார்கள். ஏனென்றால், ஏதோ எதிரி நாட்டுப் படைகளைத் தாக்கும் தோரணையில் கோபத்துடனும், ஆவேசத்துடனும் படையினர் காணப்பட்டார்கள்.

அங்கிருந்தவர்களை வீதியில் இழுத்துச் சென்று, தாக்கி கண்மூடித்தனமான முறையில் செயற்பட்டார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கடந்த வாரம் நாடு முழுவதற்குமான அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியிருந்தார். அவர் பதவியேற்ற கையோடு பொலிஸ் உள்ளிட்ட முப்படையினருக்கு அதிகாரம் வழங்கும் வகையிலான வர்த்தமானியை வெளியிட்டார்.

அதன் பின்னரே இரவோடிரவாக பாதுகாப்புப் படையினர் காலி முகத்திடல் பகுதிக்கு வரவழைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தின்போது ஒன்பது பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக அடக்க முயல்வது எந்த வகையில் நியாயம்? இந்த அதிகாரத்தைக் கொண்டு தன்னிச்சையாக தீர்மானங்களை மேற்கொண்டு நாட்டை அராஜக நிலைக்கு இட்டுச்சென்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தமது சக்தி என்னவென்பதை மக்கள் காட்டியிருக்கிறார்கள்.

இந்த நிலையில், பதவி கிடைக்கும் வரை தன்னை ஒரு ஜனநாயகவாதியாக சித்திரித்துக்கொண்டிருந்த ரணில் விக்ரமசிங்க, அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டதில் உண்மை முகத்தை வெளிக்காட்டியிருக்கிறார்.

போராட்டக்காரர்கள் மீது நள்ளிரவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து கவலை வெளியிட்டுள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி சங், அதிகாரிகள் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

மேலும், காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் பற்றிய செய்தியால் தாம் கவலை கொள்வதாகவும், அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதற்கான உரிமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாகவும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வன்முறை தவிர்க்கப்பட வேண்டியது என கனேடிய தூதுவர் டேவிட் மெக்கினொன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றத்துக்கு கருத்துச் சுதந்திரம் இன்றியமையாததாகக் காணப்படுகிறது. அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதில் கட்டுப்பாடுகள் எவ்வாறு உதவும் என்பது கடினமானதாகும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, காலி முகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் போராட்டக்காரர்கள் மீது வன்முறை பிரயோகிக்கப்பட்டமையை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டித்துள்ளது.

“சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர் நுவன் போபகே உள்ளிட்ட போராட்டக்காரர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், அவர்கள் தாக்கப்பட்டுள்ளதாகவும் எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. இதன்போது கைதுசெய்யப்பட்டவர்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படவேண்டும் என்பதுடன், அவர்கள் இருக்கும் இடம் தெரியப்படுத்தப்பட வேண்டும். இது தொடர்பில் பொலிஸ்மா அதிபர், இராணுவத்தளபதி ஆகியோருக்கு செய்தி அனுப்பியுள்ளேன். இந்தச் சம்பவமானது இலங்கைக்கு தலைகுனிவை ஏற்படுத்தும்” இவ்வாறு சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சர்வதேசத்தின் மத்தியிலும், உள்நாட்டிலும் எதிர்ப்புகள் எழும் என்று தெரிந்தும் ரணில் தனது அதிகார பலத்தை போராட்டக்காரர்கள் மீது காட்டியிருக்கிறார். இந்த நிலைமையானது இலங்கை மீதுள்ள சர்வதேசத்தின் நன்மதிப்புக்குக் குந்தகம் விளைவிப்பதாகவே அமையும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது.

அதிகார ஆசைகொண்டு, அதனை அப்பாவிப் போராட்டக்காரர்கள் மீது ஆயுதம், படைபலம் மூலம் வெளிக்காட்ட முற்படும் ஜனாதிபதி ரணிலின் செயற்பாடு கண்டிக்கத்தக்கது. இவ்வாறான நிலைமை தொடருமானால் மக்களின் எதிர்ப்பினால் சரித்திரத்தில் கறுப்புப் பட்டியலில் இடம்பெற்று வெளியேற்றப்படும் அடுத்த தலைவராக ரணில் விக்ரமசிங்க இடம்பிடிப்பதைத் தவிர்க்க முடியாது என்பதை அழுத்தமாக சொல்லிவைக்க விரும்புகிறோம்.

# இந்திய ஜனாதிபதித் தேர்தலில் வென்றது பாரதீய ஜனதா





இந்தியாவின் புதிய ஜனாதிபதியாக தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளர் திரௌபதி முர்மு, [வயது 64] தேர்வுசெய்யப்பட்டுள்ளார். ஆளும் மத்திய அரசின் ஜனாதிபதி வேட்பாளர் வெற்றி பெறுவது இந்திய அரசியலில் புதுமையானதல்ல.

இந்திய எதிர்க்கட்சிகள் போட்டி வேட்பாளரைக் களமிறக்குவதும், அவர் தோல்வியடைவதும் தொடர்கதையாக உள்ளது. இம்முறையும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் தோல்வியடைந்தார்.

ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் நாளை (25) முடிவுக்கு வருவதையடுத்து, புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் கடந்த 18 ஆம் திகதி நடந்தது. பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில், பழங்குடியினத்தைச் சேர்ந்தவரும், ஜார்க்கண்ட் மாநில முன்னாள் ஆளுநருமான திரௌபதி முர்மு போட்டியிட்டார். காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் சார்பில் முன்னாள் மத்திய அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா போட்டியிட்டார். நாடாளுமன்ற வளாகத்தில் நடந்த வாக்குப்பதிவில், லோக்சபா மற்றும் ராஜ்யசபாவைச் சேர்ந்த 788 எம்.பிக்கள் வாக்களித்தனர். அந்தந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நடந்த வாக்குப்பதிவில் எம்.எல்.ஏக்கள் வாக்களித்தனர். கடந்த 18 ஆம் திகதி தேர்தல் முடிந்த நிலையில், புதுடில்லியில் வாக்கு எண்ணிக்கை கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றபோது திரௌபதி முர்மு 540 வாக்குகளைப் பெற்றார். யஷ்வந்த் சின்ஹாவுக்கு 208 வாக்குகள் கிடைத்தன. 15 வாக்குகள் செல்லாதவையாக அறிவிக்கப்பட்டன. எட்டு எம்.பிக்கள் வாக்களிக்கவில்லை.

ஜனாதிபதி தேர்தலில் எம்.பிக்கள் அளிக்கும் ஒரு வாக்குக்கு 700 மதிப்புகள் அளிக்கப்படுகின்றன. இதனடிப்படையில் திரௌபதி முர்மு பெற்ற வாக்குகளின் மதிப்பு 5 இலட்சத்து 23 ஆயிரத்து 600 ஆகும். இது எம்.பிக்களின் மொத்த வாக்குகளில் 72.19 சதவீதமாக உள்ளது. யஷ்வந்த் சின்ஹா பெற்ற வாக்குகளின் மதிப்பு, 1 இலட்சத்து 45 ஆயிரத்து 600 ஆகும். இது மொத்த வாக்குகளில் 27.81 சதவீதமாகும். பல்வேறு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 17 எம்.பிக்கள் கட்சி மாறி முர்முவுக்கு வாக்களித்ததாகக் கூறப்படுகிறது. இரண்டாவது சுற்றில் இருந்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் பதிவான எம்.எல்.ஏக்களின் வாக்குகள் எண்ணப்பட்டன. மொத்தம் நான்கு சுற்றுகள் எண்ணப்பட்டன. ஒவ்வொரு சுற்றிலும் திரௌபதி முர்முவுக்கு மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் கிடைத்தன. இறுதியில், திரௌபதி முர்மு பெற்ற வாக்கு மதிப்பு, 6 இலட்சத்து 76 ஆயிரத்து 803 ஆக அறிவிக்கப்பட்டது.



இது மொத்த வாக்குகளில் 64 சதவீதமாகும். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட யஷ்வந்த் சின்ஹா பெற்ற வாக்கு மதிப்பு, 3 இலட்சத்து 80 ஆயிரத்து 177 ஆக அறிவிக்கப்பட்டது. இது மொத்த வாக்குகளில் 36 சதவீதமாகும். பதிவான மொத்த வாக்குகளில் செல்லாதவையாக 53 வாக்குகள் அறிவிக்கப்பட்டன.

புதுடில்லியில் நாளை (25) நடக்கவுள்ள விழாவில் அவர் பதவியேற்கவுள்ள நிலையில், பிரம்மாண்ட விழாவுக்கான ஏற்பாடுகளை மத்திய அரசு செய்து வருகிறது.

ஒடிசா மாநிலத்தை சேர்ந்தவரான திரௌபதி முர்மு பழங்குடியின வகுப்பை சேர்ந்தவர். ஜனாதிபதியாகத் தேர்வுசெய்யப்பட்ட இவர் இந்தியாவின் முதல் பழங்குடியினப் பெண் என்ற பெருமையை பெற்றுள்ளார். ஒடிசாவின் மாயுர்பஞ்ச் மாவட்டத்தில் கடந்த 1958 ஆம் ஆண்டு ஜுன் 20 ஆம் திகதி பிறந்தார் திரௌபதி முர்மு. கடந்த 2017 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போதும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளராக இவரது பெயர் பரிசீலிக்கப்பட்டது. ஆனால், பீகாரை சேர்ந்த ராம்நாத் கோவிந்துக்கு பா.ஜ.க. தலைமை வாய்ப்பு வழங்கியது.

ஒடிசா தலைநகர் புவனேஷ்வரில் உள்ள ரமா தேவி மகளிர் கல்லூரியில் பட்டம் பெற்ற இவர் 20 ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் மற்றும் சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார். பட்டப்படிப்பை முடித்த பிறகு ஆசிரியராக பணியாற்றிய இவர், அதன் பின்னர் அரசு ஊழியராக நீர்வளம் மற்றும் மின்சாரத்துறையில் இளநிலை உதவியாளராக பணியாற்றியவர். பின்னர் ஒரு சாதாரண கவுன்சிலராக தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய திரௌபதி முர்மு 2 முறை ஒடிசா மாநில சட்டமன்ற உறுப்பினராக பதவி வகித்து இருக்கிறார். பா.ஜ.கவைச் சேர்ந்த இவர் கடந்த 2000 ஆவது ஆண்டில் ஒடிசாவில் பா.ஜ.க, பிஜு ஜனதா தளம் கட்சிகளின் கூட்டணி ஆட்சி நடைபெற்றபோது அமைச்சராக பதவியேற்றார். ஒடிசா மாநிலத்தில் வர்த்தகம் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சராகவும், அதைத் தொடர்ந்து மீன்வளம் மற்றும் விலங்குகள் நல மேம்பாட்டுத்துறை அமைச்சராகவும் திரௌபதி முர்மு பதவி வகித்துள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டதன் மூலம், ஒடிசாவிலிருந்து ஆளுநராக நியமிக்கப்பட்ட முதல் பெண் மற்றும் முதல் பழங்குடியின ஆளுநர் என்ற பெருமையை அவர் பெற்றார்.





★ ராஜேந்திர பிரசாத் மட்டுமே இருமுறை ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர் (1952, 1957 தேர்தல்கள்). அதிக நாட்கள் (4490) பதவி வகித்தவர், பதிவான வாக்குகளில் அதிக சதவீதம் (98.99%) பெற்றவர்.

★ போட்டியின்றித் தேர்வான ஒரே ஜனாதிபதி நீலம் சஞ்சீவ ரெட்டி (1977).

★ 1967இல் 3ஆவது ஜனாதிபதியாக இருந்த ஜாகிர் ஹுசேன், குறைந்த காலம் (ஓராண்டு, 355 நாட்கள்) பதவி வகித்தவர். இவர் பதவியிலிருக்கும் போதே (1969, மே 3) மறைந்தார். 5ஆவது ஜனாதிபதி பக்ருதீன் அலி அகமதுவும் பதவிக்காலத்தில் மறைந்தார்.

★ துணை ஜனாதிபதியாக இருந்த ஆறு பேர், பின்னர் ஜனாதிபதியாக பதவியேற்றனர்.

★ ஜனாதிபதி தேர்தலில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் (9,05,659) வென்றவர் கே.ஆர்.நாராயணன். 2ஆவது இடத்தில் அப்துல் கலாம் (8,15,518) உள்ளார்.

★ குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் (87,967) வென்றவர் வி.வி.கிரி.


★ அதிக வயதில் (77) ஜனாதிபதியாகப் பதவியேற்றவர் கே.ஆர்.நாராயணன். இளம் வயதில் (64 ஆண்டு, 67 நாள்) பதவியேற்றவர் நீலம் சஞ்சீவ ரெட்டி.

★ ஒருமுறை மட்டுமே ஆளும் அரசின் வேட்பாளர் தோல்வியடைந்தார். 1969 தேர்தலில் நீலம் சஞ்சீவ ரெட்டி (காங்கிரஸ்), வி.வி.கிரியிடம் தோல்வி அடைந்தார்.

★ 15 ஜனாதிபதிகளில் காங்கிரஸ் 7, பா.ஜ.க., 2 (ராம்நாத் கோவிந்த், திரௌபதி முர்மு), ஜனதா கட்சி 1, சுயேச்சை 5 பேர்.

★ இந்தியாவின் உயரிய பாரத ரத்னா விருது ஆறு ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டது. ராஜேந்திர பிரசாத், ராதாகிருஷ்ணன், ஜாகிர் ஹுசேன், அப்துல் கலாம், வி.வி.கிரி, பிரணாப் முகர்ஜி ஆகியோரே பாரத ரத்னா விருது வழங்கப்பட்ட ஜனாதிபதிகள் ஆவர்.


அபி



# சண்டே சாம்பார்



## ★ ரணிலின் வெற்றிக்கு உதவிய பெசில்
## ★ திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்ட டலஸ்
## ★ கூட்டமைப்புக்கு அழுத்தம் வழங்கிய இந்திய இராஜதந்திரி
## ★ பாதுகாப்பமைச்சில் தளபதிகள் முன் கோபத்தில் தாண்டவமாடிய ரணில்





ஜனாதிபதியாக ஒருவரை தேர்ந்தெடுக்க கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நடந்த இறுதி வாக்கெடுப்பில் ரணில் வெற்றி பெற்றார்.அதன்படி, இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதற்காக நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் (20) நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக 134 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர்.

ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்ட டலஸ் அலகப்பெருமவுக்கு 82 வாக்குகளும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு 3 வாக்குகளும் அளிக்கப்பட்டன. நான்கு வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு எம்.பிக்கள் வாக்களிப்பை புறக்கணித்தனர்.

இலங்கையின் 7ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவி வகித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்ததால், பதவிக்காலம் முடிவடைய இன்னும் இரண்டரை வருடங்கள் எஞ்சியுள்ள நிலையில், ஜூலை 14ஆம் திகதி அவர் பதவி விலகினார். வெளிநாட்டுக்குத் தப்பியோடிய பின்னரே பதவி விலகல் கடிதத்தை சபாநாயகருக்கு அனுப்பிவைத்திருந்தார்.

இதனால் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்யும் பொறுப்பு, நாடாளுமன்றம் வசமானது. இதன்படி ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுபவர்களின் வேட்புமனுக்கள் ஜூலை 19ஆம் திகதி (நேற்று) ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெரும மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர். போட்டியிலிருந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பின்வாங்கினார். தமது கட்சி - கூட்டணியின் ஆதரவு டலஸ் அலகப்பெருமவுக்கு என அறிவிப்பு விடுத்தார்.

இந்நிலையில், 134 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார். செல்லுபடியான வாக்குகளில் 50 வீதத்துக்கும் மேல் ரணில் பெற்றதால், அடுத்த தெரிவுகளுக்கு செல்ல வேண்டிய தேவை எழவில்லை.

வாக்கெடுப்பு தினத்தில் சபைக்கு கட்டாயம் வருமாறு தமது கட்சி எம்.பிக்களுக்கு கட்சிகள் பணிப்புரை விடுத்திருந்தன. வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த எம்.பிக்கள்கூட அழைத்து வரப்பட்டிருந்தனர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த இரு எம்.பிக்கள், சபைக்கு வந்து, வாக்களித்து திரும்பிச்சென்றனர். இதில் சமன்பிரிய ஹேரத் எம்.பி. சேலைன் போத்தலுடன் சபைக்கு வந்திருந்தார். வாக்களித்த கையோடு வைத்தியசாலை சென்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, சுயாதீன அணிகள், மொட்டு கட்சியின் ஒரு பிரிவு தமது ஆதரவை டலஸ் அலகப்பெருமவுக்கு நேற்று வெளிப்படுத்தியிருந்தன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈபிடிபி, தேசிய காங்கிரஸ், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்பன ரணிலுக்கு ஆதரவளிக்கப் போவதாக முன்னதாக அறிவித்திருந்தன.

இலங்கை அரசியல் வரலாற்றில் 1993இல் ஜனாதிபதி பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது. புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்யும் பொறுப்பு நாடாளுமன்றம் வசமானது. பதில் ஜனாதிபதியாக இருந்த டி.பி.விஜேதுங்க ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். இந்நிலையில், நாடாளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்டமை இதுவே முதன்முறையாகும்.

### போட்டி இருந்ததா?

ரணிலுக்கும், டலஸுக்குமிடையில் போட்டி இருந்ததா என்று கூறினால் அது தவறு. ஆரம்பத்திலேயே டலஸ் அணி வீக்காக இருப்பதை ரணில் அறிந்துகொண்டார். அதற்குக் காரணம், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவு அவருக்கு இல்லை. அதேபோல் டலஸ் போட்டியிடுவதற்கு ஐடியா கொடுத்த ஜீ.எல்.பீரிஸின் பலம் கட்சிக்குள் இல்லை. வெளிவிவகார அமைச்சராக இருந்த பீரிஸின் அமைச்சுப் பொறுப்பை மாற்ற முனைந்தார் ரணில். அதனால் ரணிலுக்கு செய்கிறேன் பார் வேலை என்று புறப்பட்ட பீரிஸ், மூக்குடைபடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

தவிர, ராஜபக்ஷக்களுக்கு எதிராகவோ அல்லது கட்சிக்கு எதிராகவோ செயற்படமாட்டேன் என மஹிந்த ராஜபக்ஷவிடம் கூறியிருந்த டலஸ், இப்போதுள்ள நிலைமையில் கட்சிக்குள் கிளர்ச்சி ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டமையும் அதிருப்தியை உண்டுபண்ணியது.

இவற்றையெல்லாம் கூட்டிக்கழித்த ரணில் வியூகங்களை வகுத்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 எம்.பிக்கள் ரணிலுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி என்று பல கட்சிகளின் எம்.பிக்களை கையாளும் பொறுப்பு ஹரீன் பெர்னாண்டோவிடமும், நிமல் லான்சாவிடமும் ஒப்படைக்கப்பட்டது. முஸ்லிம் எம்.பிக்கள் 11 பேர் ரணிலுக்கு ஆதரவளிக்க முன்வந்தனர். இவர்களில் பலர் இராஜாங்க அமைச்சு பொறுப்புகள் மற்றும் வேறு பல தேவைகளை முன்வைத்து ஆதரவை வழங்க விருப்பை வெளியிட்டனர்.

அதேசமயம், எதிர்க்கட்சியில் அங்கம் வகித்த பல முக்கியஸ்தர்கள் ரணிலுக்கு தகவலொன்றை அனுப்பி தமது ஆதரவு ரணிலுக்கே என்றும் அறிவித்தனர். டலஸுக்கு ஆதரவளிப்பதாக நாங்கள் பகிரங்கமாக அறிவித்தாலும் வாக்கெடுப்பில் உங்களுக்கு வாக்களிப்போம் என்றும் சிலர் ரணிலிடம் உறுதியளித்தனர். போராட்டக்காரர்களிடமிருந்து தப்பிக்க அவர்கள் கையாண்ட யுக்தி இது.

வாக்கெடுப்புக்கு முதல் நாள் பொதுஜன பெரமுனவின் எம்.பிக்களையும் , ஆளுங்கட்சியின் தலைவர்களையும் ரணில் சந்தித்து ஆதரவை உறுதிப்படுத்திக்கொண்டார். அதேபோல் பெசில் ராஜபக்ஷவும் தங்கள் எம்.பிக்களின் ஆதரவை ரணிலுக்கு வழங்க உள்ளக ஏற்பாடுகளை செய்தார்.

ரணில் வந்தால் தங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும், மே மாதம் நடந்த கலவரத்தில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் கிடைக்கும், பொதுஜன பெரமுனவின் இருப்புக்கு பாதிப்பு ஏற்படாது, முன்னாள் ஜனாதிபதி நாடு திரும்பினால் அவருக்குரிய பாதுகாப்பு, தேவைப்பட்டால் ராஜபக்ஷக்களின் மீள் வருகை போன்ற காரணங்களால் டலஸை விட ரணிலின் வருகையே சிறந்ததென பொதுஜன பெரமுனவில் கருதப்பட்டது.

இதற்கிடையில், டலஸின் தீவிர ஆதரவாளர்களான விமல், கம்மன்பில ஆகியோர் முதல்நாள் நடத்திய செய்தியாளர் மாநாடு, அவர்கள் விட்ட வாய்ச்சவடால்கள், டலஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காலடிக்கே சென்று எழுத்துமூல ஒப்பந்தத்துடன் ஆதரவை கேட்டமை போன்ற செயற்பாடுகளால் டலஸுக்கு ஆதரவளிக்கவிருந்த பொதுஜன பெரமுன எம்.பிக்களின் தீர்மானத்தில் மாற்றம் ஏற்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக டலஸ் மீது பெசில் கொண்டிருந்த கோபம் இன்னொரு பக்கம். டலஸ் தெரிவானால் தெற்கில் அவர் பலம்வாய்ந்த சக்தியாக உருவாகுவார் என்பதால் அவரை முளையிலேயே கிள்ளிவிட பெரமுன தீர்மானித்தது. ஏற்கனவே மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரியின் மகனான மாத்தறை எம்.பி. நிபுண ராஜபக்ஷவிற்கும், டலஸுக்குமிடையில் பெரும் பனிப்போர் நிலவுகிறது. கடந்த பொதுத் தேர்தலில் அதிகளவு வாக்குகளைப் பெற்ற நிபுண ராஜபக்ஷவுக்கும் டலஸக்கும் இடையில் நிலவும் முரண்பாடுகளும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் டலஸுக்கு எதிரான விளைவுகளைத் தோற்றுவித்தன. இந்தக் காரணங்களால் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டார் டலஸ்.

இவற்றுக்கெல்லாம் அப்பால் டலஸ் அணியில் இருந்தவர்கள் தீவிர சீன, ரஷ்ய ஆதரவாளர்கள். எனவே, அந்த அணி வெல்லுமாயின் இன்னும் சில காலத்திற்கு இலங்கையில் வேலைகளை செய்யமுடியாது என்று கருதி அமெரிக்காவும், இந்தியாவும் வேறு வழியில் செக் வைத்ததாக சொல்லப்படுகிறது. தமிழ், முஸ்லிம் எம்.பிக்களூடாக அந்த காய்நகர்த்தல் செய்யப்பட்டதாக தெரிகிறது.

### சிலிண்டர் விநியோகத்திற்கு உத்தரவிட்ட ரணில்

நாடாளுமன்ற வாக்கெடுப்பில் ரணிலுக்கு கொஞ்ச எம்.பிக்களின் ஆதரவு கிடைத்த காரணமொன்றை இங்கு குறிப்பிடலாமென்று நினைக்கிறேன்..

இதை வாசிக்கும்போது நகைப்பாக இருந்தாலும், உண்மையில் இப்படியொரு சம்பவம் பதிவாகியது..

19ஆம் திகதி மாலை மாதிவெல எம்.பிக்கள் விடுதி வளாகத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர்களோடு லொறியொன்று வந்து நின்றது... அதிலிருந்து எல்லா எம்.பிக்களின் வீடுகளுக்கும் கட்டணத்துடன் சிலிண்டர் விநியோகம்...

பல எம்.பிக்களின் வீட்டு ஆட்கள் இன்ப அதிர்ச்சியில் ஆழ்ந்தனர். ..

கோட்டாவும் இருந்தாரே... இப்படி என்றைக்காவது செய்திருப்பாரா... பேசாம இவருக்கே சப்போர்ட் பண்ணி ஏதாவது நல்லது கிடைக்க வழி செய்யுங்க... என்று எம்.பிமாரின் வீடுகளில் உபதேசம் ஆரம்பித்தது.

நாடாளுமன்ற வாக்கெடுப்புக்கு முதல் நாள் ரணிலின் பணிப்பின்பேரில் நடந்த இந்த சிலிண்டர் விநியோகம் குறைந்தது 5 அல்லது 6 எம்.பிக்களின் வாக்குகளையாவது ரணிலுக்கு பெற்றுத் தந்திருக்குமென சொல்லப்படுகிறது.

### ஜீ.எல்லுக்கு நடந்த அர்ச்சனை!

டலஸ் அலகப்பெருமவை போட்டிக்கு கொண்டுவந்தமை குறித்து கேள்விப்பட்ட கையோடு முன்னாள் அமைச்சர் பீரிஸை தொலைபேசியில் தொடர்புகொண்ட மஹிந்த ராஜபக்ஷ, அது தொடர்பான தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார். இதைப்பற்றி பேச வருமாறு மஹிந்த அழைத்தபோதும் பீரிஸ் அதனை தவிர்த்துவிட்டார்.

இதன்பின்னர் கடந்த 20ஆம் திகதி நாடாளுமன்ற வாக்கெடுப்புக்கு மஹிந்த வந்தபோது பீரிஸ் அருகிலுள்ள தனது ஆசனத்தில் அமர்ந்து பேச்சு கொடுக்கத் தொடங்கினார்.

கதையோடு கதையாக டலஸை கொண்டுவர ஏன் தீர்மானித்தீர்கள்? என்று ஜீ.எல்.பீரிஸிடம் மஹிந்த கேட்டாராம்.

கட்சிக்குள் அவரைத்தான் பெரும்பான்மையினர் விரும்புகிறார்கள். நான் என்ன செய்வது? அதனால்தான் டலஸின் பெயரை அறிவித்தேன் என்று பதிலளித்தாராம் ஜீ.எல்.

அப்படியோ என்று கூறி சிரித்துக்கொண்டே பீரிஸை கடும் வார்த்தைகளால் வறுத்தெடுத்தாராம் மஹிந்த...

அப்போது அருகில் அமர்ந்திருந்த சமல் ராஜபக்ஷவும் செம கடுப்பில் இருந்தாராம்...

பீரிஸ் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருந்திருந்தால் அவர் பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கக்கூடுமென நேற்று முக்கியமான தரப்பொன்று தெரிவித்தது.

### இந்தியாவின் தலையீடு?

இலங்கையின் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் இந்தியாவின் தலையீடு இருக்கவில்லையென கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் கடந்த வாரம் மறுப்பு தெரிவித்திருந்தது.

இந்தியத் தூதரகம் இப்படியொரு மறுப்பை ஏன் வெளியிட வேண்டி ஏற்பட்டது என்ற கேள்வி வாசகர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். அதனால், ஜனாதிபதி தெரிவிற்கு முதல்நாள் - 19ஆம் திகதி நடந்த சுவாரஸ்யமான சம்பவத்தை இங்கு தருகிறேன்.

ஜனாதிபதி தெரிவில் யாரை ஆதரிப்பது என்பதை தீர்மானிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக்கூட்டம், 19ஆம் திகதி மாலை இரா.சம்பந்தனின் வீட்டில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகிய மூன்று பேர் மாத்திரமே, டலஸ் அலகப்பெருமவை ஆதரிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், கோவிந்தன் கருணாகரம், வினோநோகராதலிங்கம், சி.சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், த.கலையரசன் ஆகியோர் யாரையும் ஆதரிக்காமல் இருக்கலாம் எனத் தெரிவித்தனர்.

போராட்டக்காரர்களுடன் பேசினோம், அவர்களும் டலஸை ஆதரிக்கச் சொல்கிறார்கள் என சுமந்திரன் இங்கு தெரிவித்தார்.

மாலை 5.30 மணிக்கு தொடங்கிய கலந்துரையாடல் கிட்டத்தட்ட 2 மணித்தியாலங்களாக இழுபட்டபடி சென்றது.

இரவு 7.30இற்கு அண்மித்த சமயத்தில் எம்.ஏ.சுமந்திரன் இன்னொரு தகவலை தெரிவித்தார். இந்தியா, அமெரிக்கத் தூதரகங்களும் சஜித் தரப்பையே ஆதரிக்கின்றன எனத் தெரிவித்தார்.

அத்துடன், சித்தார்த்தனை பார்த்து, "இந்தியா உங்களுக்கு இதுபற்றி சொல்லவில்லையா?" எனக் கேட்டார்.

தனக்கு இந்தியத் தூதரகத்திலிருந்து அப்படியொரு தகவல் தரப்படவில்லையென சித்தார்த்தன் தெரிவித்தார்.

இதையடுத்து, செல்வம் அடைக்கலநாதனை பார்த்து, "உங்களுக்கும் சொல்லப்படவில்லையா?" எனக் கேட்டார் சுமந்திரன் ..

இந்தியத் தூதரகத்தின் அதிகாரியொருவர் தொடர்புகொண்டு சஜித்திற்கு ஆதரவளிக்குமாறு தெரிவித்ததாக செல்வம் குறிப்பிட்டார்.

"அவர் சஜித்திற்கு வாக்களிக்குமாறே குறிப்பிட்டார். இப்பொழுது சஜித் போட்டியிடவேயில்லையே" என்றார் செல்வம்.

இந்தியத் தூதரகம், சஜித் தரப்பையே ஆதரிக்கச் சொன்னதே தவிர, சஜித்தை ஆதரிக்கச் சொல்லவில்லையென சுமந்திரன் தெரிவித்தார்.

தமக்கு அப்படி சொல்லவில்லை என செல்வம் மறுத்தார்.

இப்படியே பேச்சு நீண்டுகொண்டிருந்த சமயத்தில், சட்டென சுமந்திரன் தொலைபேசியில் அழைப்பேற்படுத்தினார். இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் கே.ஜேக்கப்பிற்கே அழைப்பை ஏற்படுத்தினார்.

தொலைபேசி அழைப்பிற்கு பதிலளித்த பிரதி உயர்ஸ்தானிகரிடம், "நீங்கள் சஜித்தை ஆதரிக்க சொன்னீர்களா அல்லது சஜித் தரப்பை ஆதரிக்க சொன்னீர்களா?" என சுமந்திரன் கேட்டார்.

அவர் பதிலளித்த பின்னர், அங்கு எழுந்த சர்ச்சையை குறிப்பிட்ட சுமந்திரன், "தொலைபேசியை ஸ்பீக்கரில் விடுகிறேன்" என குறிப்பிட்டதுடன், தொலைபேசியை செல்வம் அடைக்கலநாதனிடம் கொடுத்தார்.

சஜித் தரப்பையே ஆதரிக்கச் சொன்னதாக பிரதி உயர்ஸ்தானிகர் ஜேக்கப், செல்வம் அடைக்கலநாதனிடம் தெரிவித்தார். (அன்று காலையே செல்வம் அடைக்கலநாதனுக்கு தொலைபேசி ஊடாக இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது)

அதுவரை, வாக்கெடுப்பை புறக்கணிக்கும் நிலைப்பாட்டில் இருந்த 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டமைக்கு முதலாவது காரணம் இதுதான்.

9ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில், டலஸை ஆதரிப்பதாக தீர்மானம் எடுக்கப்பட்டபோதும், 10 நாடாளுமன்ற உறுப்பினர்களும் டலஸிற்கு வாக்களிக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் திகதி நிர்ணயிக்கப்பட்ட பின்னர், 19ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பல்வேறு நாட்களில் குறைந்தது 4 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தாம் ரணிலையே ஆதரிப்போம் கட்சி என்ன தீர்மானம் எடுத்தாலும் இரகசிய வாக்கெடுப்பினால் எம்மை யாரும் கட்டுப்படுத்த முடியாதென தமக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்திருந்தனர்.

எனினும், 20ஆம் திகதி வாக்கெடுப்பில் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலை ஆதரித்தும், ஒருவர் வாக்கை செல்லுபடியற்றதாக்கியதாகவும் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

19ஆம் திகதி இரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் முடிந்த பின்னர், இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவர், ரணில் விக்ரமசிங்கவை இரகசியமாக சந்தித்து இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் தெரிவித்த கருத்துகளை ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்ததாக சந்தேகம் எழுந்துள்ளது.

இந்தத் தகவல் கிடைத்ததும், அன்றிரவே, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கரை தொலைபேசியில் தொடர்புகொண்டு ரணில் விக்ரமசிங்க பேசியுள்ளார்.

மிகவும் விசனத்துடன், கடுந்தொனியில் பேசிய ரணில், தனக்கு எதிராக இந்தியா ஏன் செயற்படுகிறதென வினவியதுடன், கூட்டமைப்பு தொடர்புடைய விடயத்தையும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஜனநாயக ரீதியில் இடம்பெறும் ஆட்சி மாற்றங்களில் இந்தியா தலையிடாது, இலங்கையில் நிலையான ஆட்சி அமைய வேண்டுமென்பது மட்டும்தான் இந்தியாவின் விருப்பம். எந்தத் தரப்பையும் இந்தியா ஆதரிக்கவில்லையென எஸ்.ஜெய்ஷங்கர் அதன்போது பதிலளித்துள்ளார்.

இதன்பின்னர், கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகருடனும், ஜெய்ஷங்கர் பேசியதையடுத்தே இலங்கைத் தேர்தலில் இந்தியா தலையிடவில்லையென அறிக்கை வெளியிடப்பட்டது.

தற்போது, இந்தச் சம்பவம் பற்றிய விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி, கொழும்பிலுள்ள உயர்ஸ்தானிகருக்கு இந்திய வெளிவிவகார அமைச்சு உத்தரவிட்டுள்ளதாக அறியப்படுகிறது. அநேகமாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரத்தின் இரண்டு இராஜதந்திரிகள் மீண்டும் இந்தியாவுக்கு திருப்பியழைக்கப்படும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

### பாதுகாப்பமைச்சில் அதிரடி காட்டிய ரணில்

ஜனாதிபதியாக பதவியேற்ற தினமன்று நாடாளுமன்றத்திலிருந்து நேரடியாக கொழும்பு விஜேராம மாவத்தையிலுள்ள முன்னாள் பிரதமர் மஹிந்தவின் வீட்டுக்கு வந்த ஜனாதிபதி ரணில், அங்கு மஹிந்தவுடன் நீண்டநேரம் உரையாடிவிட்டு ஹோக்கந்தர, ஹக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பமைச்சுக்கு சென்றார். அவரை வரவேற்று அழைத்துச் சென்றார் பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன.

பாதுகாப்பமைச்சில் உயர்நிலை அதிகாரிகள் மத்தியில் பேசிய ரணில், படை அதிகாரிகள் பொறுப்பற்ற நிலையில் இருப்பதாக கடுமையாக சாடினார் என்று அறியமுடிந்தது.

சட்டம், ஒழுங்கை கடைப்பிடிப்பதில் ஏன் தாமதம்? என்னிடம் சாக்குப்போக்கு சொல்ல வேண்டாம். நான் வெள்ளிக்கிழமை அமைச்சரவையை நியமிக்கிறேன். திங்கட்கிழமை நான் எனது அலுவலகத்திற்கு செல்லவேண்டும். என்ன செய்வீர்களோ, எது செய்வீர்களோ தெரியாது. நான் ஜனாதிபதி செயலகம் செல்வதற்குரிய வேலைகளை உடனடியாக செய்யுங்கள். ஜனாதிபதி ஒருவரை பாதுகாக்க முடியாத நிலைமை இருந்ததைபோன்ற நிலைமை இருக்க முடியாது. பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள் தங்களை பாதுகாத்துக்கொள்ள 10, 15 கூடுதல் வாகனங்களை எடுத்துச் செல்வது போன்ற விடயங்கள் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. எனக்கு வேலை செய்து காட்டுங்கள். கதைகளை சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம் என்று அங்கு அதிரடியாக உத்தரவிட்டாராம் ஜனாதிபதி.

ஜனாதிபதியின் இந்த உத்தரவையடுத்தே வியாழன் மாலை நூற்றுக்கணக்கான துருப்புகள் காலிமுகத்திடல் சென்று அங்குள்ள போராட்டக்காரர்களை அப்புறப்படுத்தின.

பாதுகாப்புத்துறையின் உயர்மட்ட பதவிகளில் மாற்றங்களை செய்யவும் ரணில் தீர்மானித்துள்ளதாக அறியமுடிகின்றது.

இனி அடுத்தவாரம் புதிய அமைச்சரவையை நியமிக்கவுள்ளார் ரணில். அதற்கு முன்னர் சஜித் உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசவிருக்கிறார். அனைத்துக் கட்சித் தலைவர்கள்கொண்ட அமைச்சரவை வர வேண்டும் என்பது ரணிலின் அவா. நிதியமைச்சுப் பொறுப்பை ஹர்ஷ டி சில்வாவுக்கு வழங்குவதற்காகத்தான் அதனை யாருக்கும் கொடுக்காமல் ரணில் வைத்திருப்பதாக தெரிகிறது. ஐக்கிய மக்கள் சக்தியில் கபீர் ஹாஷிம் உட்பட்ட சிலரையும் ரணில் அழைத்திருப்பதாக தெரிகிறது.


மனோ, ரிஷாத், ரவூப் ஹக்கீம், ஜீவன் தொண்டமான், திகாம்பரம் , அதாவுல்லாஹ், பிள்ளையான் ஆகியோரையும் அமைச்சரவைக்குள் உள்வாங்க ரணில் விரும்புவதாக சொல்லப்பட்டது.

தொழிலதிபர் தம்மிக்க பெரேராவின் இராஜினாமாவால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு பெசில் மீண்டும் நாடாளுமன்றம் செல்லவேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்பட் டுள்ளது. ஆனால், சிங்கப்பூரிலிருந்து நாடு திரும்பவுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு அதனை வழங்குமாறு இன்னொரு தரப்பு கேட்டிருக்கிறது. கோட்டாவின் பாதுகாப்பு மற்றும் பிரயாணங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கைகொடுக்கும் என்று அதற்குக் காரணம் சொல்லப்பட்டுள்ளது.

**ஆர்.சிவராஜா**
mesivaraj@yahoo.com

**அக்கினியான்**

# கூட்டமைப்பு தவறு செய்துவிட்டதா?



இலங்கையின் 8ஆவது ஜனாதிபதியை தெரிவுசெய்யும் சம்பிரதாயம் கடந்த 20ஆம் திகதி நிறைவேற்றப்பட்டு, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க வெற்றிவாகை சூடியுள்ளார். இவரின் தெரிவுக்குப்பின் நாட்டின் அனைத்துப் போராட்டங்களுக்கும் முடிவு கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை ஒருபுறமும், சாணக்கியமும் அரசியல் அனுபவமும் கொண்ட ஒருவர் நாட்டின் தலைவராக்கப்பட்டிருக்கிறார் என்பதை வெளிப்படுத்தும் வகையிலும் நாட்டின் பல இடங்களில் வெற்றியை வெடி கொளுத்தியும் வாழ்த்துத் தெரிவித்தும் கொண்டாடியிருக்கிறார்கள்.

இதேவேளை, இந்தத் தெரிவில் குளறுபடிகள் இடம்பெற்றிருப்பதாக எதிர்க்கட்சியினரும் டலஸ் அலகப் பெருமவை ஆதரித்தவர்களும் தெரிவித்து வருகிறார்கள். குறிப்பாக, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் சில விடயங்களை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்தினம் கட்சிகளின் பல உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் டலஸ் அலகப்பெரும வுக்கு வாக்களிப்போம் என்று ஆதரவு தெரிவித்திருந்த நிலையில், ரணில் விக்ரமசிங்க 134 வாக்குகளையும், டலஸ் அலகப்பெரும 82 வாக்குகளை மட்டும் பெற்றிருந்த நிலையில், இலங்கையின் 8ஆவது ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவுசெய்யப்பட்டுள்ளார். வரலாற்றில் முதல் தடவையாக நாடாளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் இந்த நிகழ்வு நடந்திருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

நாடாளுமன்றம் வியாபார கூடமாக மாறிவிட்டதா? கட்சியின் தீர்மானத்துக்கு அமைய அதன் உறுப்பினர்கள் வாக்களிக்காமல் மாறி வாக்களித்து துரோகம் இழைத்துள்ளனரா? என்ற கேள்வியை நாடாளுமன்றில் வைத்து எழுப்பியுள்ளார் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட அநுரகுமார திஸாநாயக்க. இதற்கு ஓர் உதாரணத்தையும் எடுத்துக்காட்டியுள்ளார். கிராமங்களில் மரக்குற்றிகளை விற்பது போல் நாடாளுமன்றிலும் நடைபெற்றிருக்கிறது என்று ஒப்பிட்டும் உள்ளார்.

இந்த குற்றச்சாட்டுகளுக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மாட்டிக்கொண்டு விட்டதோ என்ற சந்தேகமும் எழுப்பப்படுகிறது. வழமைபோல் பெரியதொரு வரலாற்றுத் தவறை கூட்டமைப்பு இழைத்துவிட்டது என்ற பழியும் சுமத்தப்பட்டிருக்கிறது. கூட்டமைப்பினர் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான ரணிலுக்கு வாக்களிக்காமை ஒரு வரலாற்றுத் தவறு என்பது ஒருபுறம் இருக்க, கூட்டமைப்பின் தலைமைப்பீடத்தின் நம்பிக்கைக்கு துரோகம்செய்து டலஸுக்கு வாக்களிக்காமல், மாறி ரணிலுக்கு வாக்களித்துள்ளார்கள் கூட்டமைப்பின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற சந்தேகமும் எழுப்பப்பட்டுள்ளது. இதேபோன்றே ஐக்கிய மக்கள் சக்தியின் 14 உறுப்பினர்கள் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களித்துள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவும் அஸாத் சாலியும் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி தெரிவில் மும்முனைப் போட்டி நிலவியபோதும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ரணில் விக்ரமசிங்கவுக்கும் பொதுஜன பெரமுன வேட்பாளரான டலஸ் அலகப்பெருமவுக்கும் இடையில்தான் பலத்த போட்டி நிலவுகிறது என்பது அனைவராலும் அறியப்பட்ட விடயம். ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான சஜித் பிரேமதாச போட்டியிலிருந்து பின்வாங்கியதைத் தொடர்ந்து இது உறுதிசெய்யப்பட்டது.

இப்போட்டி நிலை வெளிப்படையாக தெரியவந்தபோது, டலஸ் அலகப்பெருமவுக்கு பின்வரும் கட்சிகளின் ஆதரவின் பின்னணியில் வாக்கு அளிக்கப்படும். அந்தவகையில் ஐக்கிய மக்கள் சக்தியைச் சோந்த 52 உறுப்பினர்களும், எதிர்த்தரப்பினரான விமல் வீரவங்ச குழுவின் 11 உறுப்பினர்களும், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 14 பேரும், மனோ கணேசன் தலைமையிலுள்ள 4 உறுப்பினர்களும், முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மக்கள் காங்கிரஸ் 8 பேரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சோந்த 11 உறுப்பினர்களும், டலஸ் அலகப்பெரும குழுவைச்சேர்ந்த 21 உறுப்பினர்களுமாக 120 பேரின் ஆதரவுடன் டலஸ் அலகப்பெரும வெற்றிபெற வாய்ப்புண்டு என்ற ஆரூடம் கூறப்பட்டபோதும் வாக்கெடுப்பில் ரணில் விக்ரமசிங்க 52 மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றதுடன், டலஸ் 82 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார்.

என்னதான் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக ரணில் போட்டியிட்டாலும் அவர் பொதுஜன பெரமுனவின் ஆதரவின் பின்னணியிலும், டலஸ் அலகப்பெரும பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக களமிறங்கினாலும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் கலப்பு எதிரணியின் வேட்பாளர்களாகவே பார்க்கப்பட்டார்கள்.

கடந்த 20ஆம் திகதி நாடாளுமன்றில் இடம்பெற்ற வாக்கெடுப்பின்போது ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக பிரேரித்தவர் பொதுஜன பெரமுனவின் முதுகெலும்பு என்று அழைக்கப்படுகிற தினேஷ் குணவர்தன. ஆமோதித்தவர் மனுஷ நாணயக்கார. இதேவேளை, டலஸ் அலகப்பெருமவை பிரேரித்தவர் வேறு யாருமல்ல, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச. ஆமோதித்தவர் பொதுஜன பெரமுனவின் தூணாக விளங்கும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ். இலங்கை வரலாற்றில் இத்தகையதொரு சம்பவமும் திரிபும் நடைபெற்றதாக எந்தப் பதிவுமில்லை.

ஜனாதிபதி வேட்பாளர்களை ஆதரிப்பதில் இடம்பெற்ற குளறுபடிகளும் துரோகங்களும் மக்கள் விருப்பத்துக்கு மாறான ஒருவரை ஜனாதிபதியாக்க நாடாளுமன்றம் இடம்கொடுத்துள்ளது என்பது தேசிய மக்கள் சக்தி மற்றும் எதிர்த்தரப்பினரின் குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டுக்குள் கூட்டமைப்பு அகப்பட்டுப்போயுள்ளது என்பது கட்சியின் நீண்டகால நேர்மைத் தன்மைக்கும் ஒழுங்கு தன்மைக்கும் கட்டமைப்புக்கும் குந்தகம் விளைவித்துவிட்டது என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதி வேட்பாளர்களாக நான்கு பேர் வேட்புமனுவை தாக்கல் செய்திருந்தபோதும் இறுதிநேரத்தில் சஜித் பின்வாங்கிக்கொண்டமை பல விமர்சனங்களுக்கு ஆளாக்கப்பட்டபோதும், நாட்டின் நன்மை கருதி நான் வாபஸ் பெற்றுள்ளேன் என்று காரணத்தை கூறியிருந்த சஜித், டலஸ் அலகப்பெருமவுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுப்பதற்காக கூட்டமைப்பின் தலைவரிடம் ஆதரவு கேட்டதுடன், கூட்டமைப்பு ஆதரவு நல்கும் என்றும் பகிரங்கமாக தெரியப்படுத்தியிருந்தார். இதன்பிரகாரம் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 19ஆம் திகதி இரா.சம்பந்தன் தலைமையில் கூடி டலஸ் அலகப்பெருமவுக்கு வாக்களிக்க முடிவும் எடுத்திருந்தனர். இது தொடர்பாக கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் ஊடகங்களுக்கு பகிரங்கமாக இச்செய்தியை தெரிவித்திருந்தார். கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது இந்திய நாட்டு முக்கிய அதிகாரி ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும் இந்தத் தொடர்பின் காரணமாகவே தீர்மானத்துக்கு மாறாக கூட்டமைப்பைச் சோந்த ஐந்து உறுப்பினர்கள் ரணிலுக்கு வாக்களித்த தாகவும் அஸாத் சாலி தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே சுமந்திரன், ரணில் விக்ரமசிங்க பதவி விலகவேண்டும், அவர் ராஜபக்ஷ கம்பனிகளை காப்பாற்றும் நோக்கத்துடன் செயற்பட்டு வருகிறார்,கோட்டாபயவைப்போல் ரணிலும் பதவி விலகவேண்டும் என கடுமையாக சாடியிருந்தார். அவரின் முடிவுக்கமையவே கூட்டமைப்பு டலஸ் அலகப்பெருமவுக்கு வாக்களிக்க தீர்மானித்திருந்தது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டு வருகிறது.

ஆனால், நடந்த வாக்களிப்பின்போது கூட்டமைப்பிலுள்ள சுமார் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தீர்மானத்துக்கு மாறாக வாக்களித்துள்ளனர். இதன்காரணமாகவே டலஸ் அலகப்பெரும வெற்றி வாய்ப்பை இழந்துள்ளார். கூட்டமைப்பு மாத்திரமல்ல, இவர்களைப் போலவே மைத்ரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர், டலஸ் அலகப்பெருமவை ஆதரிப்பதாக கூறிவந்த குழுவினர் மற்றும் முஸ்லிம் காங்கிரஸும் ரிஷாட் பதியுதீன் தலைமையிலான மக்கள் காங்கிரஸை சேர்ந்த உறுப்பினர்கள் சிலரும் தமது கட்சிக்கு துரோகம் செய்துவிட்டு மாறி வாக்களித்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டு வருகிறது. இது எந்தளவு உண்மை கொண்டது, பொய்மை உடையது என்பதை நிரூபிப்பது சாத்தியமான விடயமல்ல.

கூட்டமைப்பினர் மாறி வாக்களித்துள்ளனரா அதில் உண்மையுள்ளதா என்பதும் நேரடியாக நிரூபிக்க முடியாத உண்மை. காரணம், நாடாளுமன்றில் இடம்பெற்றது இரகசிய வாக்கெடுப்பாகும். அது தொடர்பில் உத்தியோகபூர்வமாக யாரும் நிரூபிக்க முடியாது. இருந்தபோதிலும் அவ்வாறு வாக்களித்திருப்பார்களாக இருந்தால் அது கட்சிக்கும் கட்சி தலைமைக்கும் செய்துள்ள ராஜதுரோகம் மாத்திரமல்ல, எதிர்காலத்தில் கூட்டமைப்பின் ஒற்றுமைக்கும் பலத்துக்கும் பங்கமும் பலவீனமும் உண்டாக்கும் சதி முயற்சியாகவே போய்விடும்.

ரணில் விக்ரமசிங்கவுக்கும் கூட்டமைப்புக்கும் இடையேயுள்ள விரிசலும் விலகுதலும் மிக அண்மைக்காலமாக ஏற்பட்டிருந்தாலும் கடந்த கால அனுபவத்தின்பால் இந்த விரிசல் ஏற்பட்டதற்கான காரணம் அறியப்படவேண்டும்.

2015ஆம் ஆண்டு மைத்ரிபால சிறிசேன பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டு, ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது, ராஜபக்ஷக்களின் அரசியல் பயணத்தில் தடங்கலும் சறுக்கலும் ஏற்பட்டன. ஆனால், ரணிலுக்கு மிகப் பெரிய வெற்றிவாய்ப்பை இந்தத் தேர்தல் தந்ததுடன், பிரதமராகும் வாய்ப்பையும் தொடர்ந்து இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மிகப்பெரிய வரலாற்று வெற்றியைப்பெற ரணிலுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தது. 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் மூலம் நாட்டின் பிரதமராக்கப்பட்டார் ரணில். புதிய அரசியல் சாசனத்தினூடாக தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வை அடைய ரணில் உதவுவார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் கூட்டமைப்பினர் ரணிலுக்கு ஒத்தாசை புரிந்தனர். ஒட்டியும் இருந்தனர். ஆனால், நடந்ததென்ன புதிய அரசியல் சாசனமும் கொண்டுவரப்படவில்லை, தமிழர்களுக்குத் தீர்வும் கிடைக்கவில்லை. இதற்குரிய காரணம், ஓர் ஆய்வாளர் குறிப்பிட்டதுபோல் ஜனாதிபதி ஆக வேண்டும் என்ற தனது கனவை நிர்மூலமாக்கியதில் கூட்டமைப்பின் தலைவர் பிரதான பங்காளர் என்பதை மனதில் வைத்துக்கொண்டே ரணில் அரசியல் சாசன உருவாக்கத்தில் இழுத்தடிப்பு செய்யும் சூத்திரத்தை கையாண்டார்.

ஜனாதிபதி பொது வேட்பாளராக மைத்ரிபால சிறிசேன 2015 தேர்தலில் நிறுத்தப்பட்டமைக்கு கூட்டமைப்பினர் ஒரு காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதும், ரணிலின் அரசியல் கனவில் ஒரு தடங்கலாக கூட்டமைப்பு இருந்தது என்பதை அவர் மறந்துவிடவில்லை. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடனும் எம்.ஏ.சுமந்திரனுடனும் தனது உறவைப் பலப்படுத்திக்கொண்டதாக ரணில் காட்டிக்கொண்டாலும் தனது ஜனாதிபதிக் கனவை தவிடுபொடியாக்கியவர்கள் இவர்கள் என்பது அவரால் மறக்கக்கூடிய விடயமாக இருக்கவில்லை என்பது நீறுபூத்த நெருப்பாகவே இருந்துள்ளது.

2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரணிலின் நிர்வாகத்துக்கும் மைத்ரிபால சிறிசேனவின் அதிகாரத்துக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள், அதிகார பரிவர்த்தனை இடைவெளி காரணமாக யாரும் எதிர்பாராத வேளையில், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கி ரணிலை தூக்கி எறிந்தார் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன. இந்தத் திடீர் திருப்பம் இலங்கை அரசியலை செயலிழக்கச் செய்ததுடன், தமிழ் மக்கள் குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்ற முடியாமல் போனதற்கு இதுவும் காரணமாகியது. மஹிந்தவை பிரதமராக்கிய ஜனாதிபதி சிறிசேன தனது நியாயத்தை கூறுகையில், தேசிய அரசாங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து அதனை சிதைக்கும் வகையிலேயே ரணில் செயற்பட்டு வந்தார். பல சந்தர்ப்பங்களில் நான் பொறுமையுடன் இருந்தேன். இவ்வாறான அனைத்து செயற்பாடுகளுக்கும் எனக்கிருந்த ஒரே மாற்று வழி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவதும் புதிய அரசாங்கத்தை அமைப்பதும் மாத்திரமே எனக் கூறியதை இங்கு ஞாபகப்படுத்த வேண்டும்.

ரணில், ஜனாதிபதியால் தூக்கி எறியப்பட்டபோதும் அவர்மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டபோதும் அதற்காக வாதாடியது மாத்திரமல்ல, கைகொடுத்து உதவியவர்களும் கூட்டமைப்பினரே. 2019ஆம் ஆண்டு நவம்பரில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவதன் மூலம் இலங்கையின் எட்டாவது ஜனாதிபதியாக தான் முடிசூடிக்கொள்ளலாம் என்ற கனவோடு அவர் இருந்தபோதும் தனது கனவை கொண்டுசெல்ல முடியாத அளவுக்கு உட்கட்சி மோதல்கள், பிளவுகள் முரண்பாடுகளை சந்திக்கவேண்டிய நிலைக்கு ரணில் தள்ளப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சி 1947ஆம் ஆண்டு சுதந்திர இலங்கையின் முதலாவது தேர்தலில் இறங்கிய காலந்தொடக்கம் அக்கட்சியின் பிரதான நடத்துனராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்தனா (ரணிலின் தாய் வழி மாமன்) நாட்டின் பிரதமராக வரவேண்டுமென்று கனவுகண்டு பல முறை முயற்சி செய்தும் அது முடியாமல் போனது. உதாரணமாக டி.எஸ். சேனநாயக்கா மரித்தபோதும், டட்லி சேனநாயக்கா மரணித்தபோதும் தனது பிரதமர் கனவை நிறைவேற்ற பல தடவைகள் அவர் முயற்சி செய்தபோதும் அவரால் நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில்தான், 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் யாரும் எதிர்பார்க்காத வெற்றியை ஜெயவர்தனா அடைந்தார். அதேபோன்றுதான் ரணிலின் ஜனாதிபதிக் கனவும் பல தடவைகள் பகீரதப்பிரயத்தனங்கள் செய்தபோதும் அது முடியாமல் போனது.

ரணிலை எதிர்த்துக்கொண்டு 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய சஜித்தால் வெற்றிபெற முடியவில்லை. கட்சியும் இரண்டாக பிளவுபட்டது. ஜனாபதித் தேர்தலில் நின்ற சஜித் பிரேமதாசவின் வெற்றிக்கு ரணிலால் மானசீகமாக உழைக்கவும் முடியவில்லை, ஒத்துழைப்பு நல்கவும் முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்களின் வாக்கு வங்கியாக கருதப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதைத் தவிர மாற்றுத் தெரிவு இருக்கவில்லை. கூட்டமைப்பு நேரடியாகவே சஜித்தை ஆதரிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. விரும்பியோ விரும்பாமலோ ரணில் ஏற்றுக்கொள்ளாத ஒருவருக்கு ஆதரவை கூட்டமைப்பு வழங்கவேண்டியிருந்தது. அதேவேளை, 2019ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் ரணிலுக்கு படுதோல்வியான பாடத்தைக் கற்றுத்தந்தது. ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்றில் இத்தகையதொரு நிலையையும் தோல்வியையும் சந்திக்கவில்லை என்பது வரலாற்றுப் பாடமாக எழுதப்பட்டது.

டலஸ் அலகப்பெருமவுக்கு கூட்டமைப்பு ஆதரவு நல்கியது வரலாற்று தவறாகிவிட்டது. ரணில் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டது ஆச்சரியமானதல்ல. ஆனால், இந்த முக்கியமான காலகட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடந்துகொண்டது யதார்த்தத்தை புரிந்துகொள்ள முடியாத முடிவு என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. கூட்டமைப்பின் இந்தத் தவறான முடிவானது புதிய ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் எந்தவொரு தீர்வுத்திட்டத்தையும் தமிழர்கள் எதிர்பார்க்க முடியாது எனவும் அத்தகைய சந்தர்ப்பத்தை கூட்டமைப்பு தனது தீர்க்கத்தரிசனமற்ற முடிவின் பிரகாரம் பெற்றுள்ளது எனவும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த விமர்சனங்களை கூட்டமைப்பு காதுகொடுத்து கேட்கவில்லையாயினும் தமிழர்களின் அபிலாஷைகளை எதிர்பார்ப்புகளை அல்லது நீண்டகால பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் அளவுக்கு ஜனாதிபதியின் அதிகாரமும் ஆளுமையும் அமைய முடியுமா என்பது ஒரு வகைக் கேள்வியாகவும் ரணிலின் பதவி என்னும் இரும்புத் திரைக்குப் பின்னால் இருப்பவர்கள் யார் என்பதும் குழந்தைக்குக்கூட சொல்லக்கூடிய விடை.

ஜனாதிபதியின் வெறறிக்குப் பின்னால் அணிவகுத்து நிற்பவர்கள் ராஜ்பக்ஷவினரும் பொதுஜன பெரமுனவினர் என்பதும் உள்ளங்கையில் நெல்லிக்கனி போன்றது. அக்கட்சியின் தீவிர செயற்பாட்டாளர்களே மறைமுகமாக இருக்கிறார்கள். இன்னுமொரு வகை சூத்திரத்தால் சொல்வதானால், ஜனாதிபதியை தெரிவு செய்தவர்கள் முன்னாள் ஆட்சியாளர்களான ராஜபக்ஷக்களின் தீவிர தொண்டர்கள்.

அவர்களே மீண்டும் மீள் எழுச்சி பெற்றவர்களாக ரணில் தலைமையில் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். ஏலவே புதிய ஜனாதிபதி பற்றி ஒரு பழைமையான பார்வையுண்டு. இவர் ராஜபக்ஷவினரை காப்பாற்றும் அநாதரட்சகன் என்ற பட்டப்பெயரை 2015ஆம் ஆண்டு தேர்தல் முடிவு காலத்திலிருந்தே வாங்கி வைத்துள்ளார். இவ்வாறானதொரு நிலையே மீண்டும் மீள் வடிவம் பெற்றுள்ளது. இவ்வாறு இருக்கும்போது தமிழர்களின் அபிலாஷைகளுக்கு அல்லது நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வை எங்கிருந்து பெற முடியும் என்பது நிதானமாக யோசிக்கவேண்டிய விடயம். காலிமுகத்திடல் போராட்டக்காரார்கள் தேசியப் போராட்டத்தை நடத்தினார்கள் என்பது உண்மை. அது வெற்றியும் பெற்றுள்ளதாக ஏற்றுக்கொள்வோம். ஆனால், தமிழ் மக்களுடைய நீண்டகாலப் பிரச்சினைகளை அங்கீகரிப்பவர்களாக அவர்கள் உள்ளனரா என்பது இன்னொரு வகை கேள்வி. அதை பேசுவதற்கும் அவர்களுக்கு நேரமிருக்கவில்லை என்பதும் உண்மையென ஏற்றுக் கொண்டாலும், இலங்கையின் கொதிநிலைப்பட்ட அரசியல் போக்கில் எந்தப் பாதையை தமிழ் மக்கள் தேர்ந்தெடுப்பது என்பது ஒரு தர்மசங்கடமான நிலையே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதே சிங்கள மக்களுக்கு செய்யும் துரோகம் என்றும், அதுமட்டுமன்றி, இது சிங்கள தேசம், பெரும்பான்மை ஆதிக்கத்தைத் தவிர எந்த அதிகாரப்பகிர்வுக்கும் இடமில்லை என்றும் வாதிட்டு வருகிறவர்களின் படைப்பிரிவுக்கு தலைமை தாங்கிக் கொண்டிருப்பவராக புதிய ஜனாதிபதி ஆக்கப்பட்டுள்ளார்.

எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் சங்கமமாகி புதிய பிரவேசம் ஒன்று இடம்பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# 21ஆவது திருத்தச் சட்டம்



இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது உச்சந்தொட்டு இருக்கின்ற வேளையில் பொதுமக்கள் ஆட்சியாளரை பதவியிலிருந்து விலகக்கோரி நாடளாவிய ரீதியில் போராட்டம் மேற்கொண்டு வருகின்றபோது போராட்டங்களை வலுவற்றதாக்குவதற்கும் போராட்டங்களை திசை திருப்புவதற்கும் அரசாங்கமானது மேற்கொண்ட முதல் நடவடிக்கையாக 21ஆவது திருத்தச் சட்டத்திற்கான நகல் அமைந்திருந்தது. இச்செயற்பாட்டினால் அரசாங்கத்தால் ஒருபோதும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியாது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமாயின், இலங்கையின் அரசியல் யாப்பை மாற்றியமைக்க வேண்டும் என்று காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் தமது குரலை உயர்த்தியமையைக் காணலாம். அந்தவகையில் இலங்கையின் இன்றைய அரசியல் யாப்பானது இதுவரைக்கும் பல தடவைகள் மாற்றப்பட்டிருக்கும் வகையில் மீண்டும் 21ஆவது அரசியல் யாப்பிற்கான திருத்த ஆயத்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் இந்த நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மாற்றுவழியைக் காணமுடியாதபோது அரசாங்கமானது 21ஆவது திருத்தச் சட்டத்தினை முன்வைத்துள்ளது. அரசியல் யாப்பின் இருபதாவது திருத்தச் சட்டமானது கொண்டுவரப்பட்டு ஒன்றரை வருடங்கள் – அதாவது, 18 மாதங்கள் முடிவடைந்த கையோடு இந்த 21ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றமை ஒரு விசித்திரமான நடவடிக்கையாக இலங்கை அரசியலில் நோக்கப்படுகின்றது. இலங்கையின் அரசியல் யாப்பிற்கு கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் பல்வேறு வகையிலும் நாட்டில் இடம்பெற்ற பல்வேறு பிரச்சினைகளை மையமாகக்கொண்டே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக இலங்கை – இந்திய அரசாங்கங்களுக்கு இடையில் இடம்பெற்ற ஒப்பந்தத்தின்பிரகாரம் 13ஆவது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பில் 1988ஆம் ஆண்டு நவம்பரில் கொண்டுவரப்பட்டது. அதே ஆண்டு நவம்பர் மாதம் 15ஆவது திருத்தச் சட்டமும் டிசம்பர் மாதம் 16ஆவது திருத்தச்சட்டமும் கொண்டுவரப்பட்டன. அத்துடன், 2001ஆம் ஆண்டு ஒக்டோபரில் 17ஆவது திருத்தச் சட்டம், 2010ஆம் ஆண்டு 18ஆவது திருத்தச் சட்டம், 2015ஆம் ஆண்டு 19ஆவது திருத்தச் சட்டம், 2020இல் 20ஆவது திருத்தச் சட்டம் என இலங்கையின் அரசியல் யாப்பு பல தடவைகள் திருத்தப்பட்டதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையில் பதவிக்கு வருகின்ற ஆட்சியாளர்கள் அனைவரும் கொடுக்கின்ற மிக முக்கியமான வாக்குறுதிகளில் ஒன்றாக நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதாகவே உள்ளது. உதாரணமாக, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க இலங்கையின் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர், அவர் ஜனாதிபதியானால் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதாகவே கூறியிருந்தார். ஆனால், அவர் அதனை ஒழிக்கத் தவறியிருந்தார். அதேபோல் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வரும்போது இந்த நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாகக் கூறியிருந்தார். மைத்ரிபால சிறிசேனவும் ஆட்சிக்கு வரும்போது இந்த நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாகவே கூறியிருந்தார். ஆனால், எந்த ஜனாதிபதியும் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு முன்வராமல் சில அதிகாரங்களை அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் வாயிலாக மாற்றம் செய்திருந்தனர்.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கும் முகமாக 20ஆவது திருத்தச் சட்டமானது, 23.05.2002அன்று நீதி சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த 21ஆவது திருத்தச் சட்டமானது இலங்கையின் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது, அரசியலமைப்புப் பேரவையையும் சுயாதீன ஆணைக்குழுக்களையும் உருவாக்குவதென அவர் நாடாளுமன்றத்தில் விளக்கியிருந்தார். இந்த 21ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தமானது முற்றுமுழுதாக 19ஆவது திருத்தச் சட்டத்தினை அடியொற்றியதாகவே காணப்பட்டது. அது19ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் அல்லது 17ஆவது திருத்தச் சட்டத்தை அடியொற்றியதாகவே அமைந்திருந்தது.

இலங்கை அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 17ஆவது திருத்தச் சட்டமானது சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டதாகவும் 18ஆவது திருத்தச் சட்டமானது மஹிந்த ராஜபக்ஷ இலங்கை ஜனாதிபதியாக இருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டதாகவும் 19ஆவது திருத்தச் சட்டமானது மைத்திரி – ரணில் கூட்டு அரசாங்கம் ஆட்சியில் இருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டதாகவும் காணப்படுகின்றது. 19ஆவது திருத்தச் சட்டமானது முக்கியமாக இரு விடயங்களை கரிசனை எடுத்ததாக காணப்படுகின்றது. அதாவது, ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைத்தல் அல்லது மட்டுப்படுத்தல், மேலும் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுதல் என்பனவாகும்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியைக் காரணங்காட்டி காலிமுகத்திடலிலுள்ள இளைஞர்களின் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் விஸ்வரூபம் எடுத்துள்ளமையால் ஜனாதிபதிக்கு நெருக்கடி அதிகமாகியது. இது நாட்டின் அரசியல் பிறழ்வு ஏற்படுவதற்கு அறிகுறியாகவும் தென்பட்டது. இதனால் ஜனாதிபதி 21ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதற்குரிய உடன்பாட்டை எட்டியிருந்தார். இந்த திருத்தச் சட்டமானது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்றது. மேலும் மே மாதம் 11ஆம் திகதி நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி, நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கியிருந்தார்.

அந்தவகையில் இந்த 20ஆவது திருத்தச் சட்டமானது பின்வரும் சிறப்பம்சங்களை கொண்டிருந்ததோடு, 17 மற்றும் 19ஆவது திருத்தச் சட்டங்களை ஒத்ததாகக் காணப்பட்டது.

★ நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தல்.

★ அரசியலமைப்பு பேரவையைத் தாபித்தல்.

★ இந்த அரசியலமைப்புப் பேரவை 17ஆவது திருத்தச் சட்டம் மற்றும் 19ஆவது திருத்தச்சட்டத்தில் காணப்பட்டது. அரசியலமைப்புப் பேரவையின் சிபார்சுக் கமைவாகவே இலங்கையின் பல்வேறு உயர் பதவி நியமனங்கள் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமனம் மேற்கொள்ளப்பட்டது. இது 18ஆவது திருத்தச் சட்டத்தில் நாடாளுமன்றப் பேரவையாக மாற்றப்பட்டு ஜனாதிபதி விரும்பினால் நாடாளுமன்றப் பேரவையின் ஆலோசனைக்கமைய நியமனங்களை மேற்கொள்ளலாம் என்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஏற்பாடானது 19ஆவது திருத்தச் சட்டத்திலும் காணப்பட்டபோதும் 20ஆவது திருத்தச் சட்டத்தில் அரசியலமைப்புப் பேரவை ஒழிக்கப்பட்டது.

★ மேலும் அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுக்கமைய ஆணைக்குழுக்களை நியமித்தல், ஆணைக்குழுக்களுக்குரிய நபர்களை நியமித்தல்.

★ இரட்டைப் பிரஜாவுரிமை உடையோர் நாடாளுமன்றம் செல்வதை தடுத்தல்.

★ நாடாளுமன்றத்தைப் பலப்படுத்தல்.

இந்த 21ஆவது திருத்தச் சட்டத்திற்கான வரைவு தொடர்பாக சட்டத்தரணிகள் சங்கம் கருத்து தெரிவிக்கையில், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் 19ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள ஏற்பாடுகள் உள்ளடக்கப்படவில்லை என்றும் கூறுகின்றனர். 21ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த துடிக்கின்ற ராஜபக்ஷ அரசாங்கமானது 13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தினை பூரணமாக அமுல்படுத்துவதற்கு ஒருபோதும் முன்வரவில்லை என்று தமிழ்த் தரப்பினர் பல்வேறு வகையிலும் குற்றஞ்சாட்டி வருகின்றனர். இதனால் அரசாங்கமானது தற்போது இடம்பெற்று வருகின்ற போராட்டத்தினை பலி கொடுப்பதற்கும் சிங்கள இளைஞர்களை திருப்திப்படுத்துவதற்காகவும் இந்த 21ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர எத்தனிக்கின்றது. ஆனாலும் அந்த 21ஆவது திருத்தச் சட்டத்தினூடாக பூரண அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு இருக்கின்றதா என்பது ஒரு கேள்விக்குறியான விடயமாக காணப்படுகின்றது.

ஏனெனில், 19ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்பட்ட பல்வேறு விடயங்கள் இங்கு உள்ளடக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் சட்டத்தரணிகள் சங்கத்தினால் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இதனால் இந்த 21ஆவது திருத்தச் சட்டத்திற்கு உத்தேச நகலானது எந்தவகையிலும் தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வகையினை கூறவில்லை.

இலங்கையின் அரசியல் யாப்பு இலங்கையில் பதவிக்கு வருபவர்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கும் ஊழல் மோசடிகளில் ஈடுபடவும் வாய்ப்பு வழங்கியுள்ளது என்று நாம் குறிப்பிட முடியும். அப்படி வாய்ப்புகளை அரசியல் யாப்பிலிருந்து இல்லாமல் செய்ய காலிமுகத்திடலில் போராட்டம் மேற்கொள்ளும் போராட்டக் குழுவினர் அரசாங்கத்திற்கு அழுத்தங்களை மேற்கொண்டிருந்தனர். ஆனால், அரசாங்கமானது இந்த நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு இந்த 21ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக உத்தேசித்திருக்கின்றது. ஆனாலும் இந்த நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை 20ஆவது திருத்தச் சட்டத்தின் வாயிலாக மேலும் வலுவானதாக ஆக்கியிருந்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. எவ்வாறாயினும், இலங்கை அரசியலில் காலத்திற்கு காலம் வருகின்ற அரசியல்வாதிகள் மற்றும் ஜனாதிபதிகள் இலங்கையின் அரசியல் யாப்பினை ஒருதரம் புரட்டிப்போட்டுச் சென்ற வரலாற்றையே காணமுடிகின்றது. ஏனெனில், சிலவேளைகளில் இலங்கையின் அந்த அரசியல் யாப்பினை சத்திரசிகிச்சைக்கு கூட உட்படுத்திச் சென்ற வரலாறு உண்டு. ஆனாலும் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கும், இனப் பிரச்சினைக்கும், கலாசார உடன்பாட்டிற்கும் அடிப்படை காரணமாக இருக்கின்ற அரசியல் யாப்பினை மாற்றியமைத்து ஒரு சமாதானமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஆட்சியாளர்களும் முன்வரவில்லை. இதனால் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் பெரும்பான்மை சிங்கள மக்களின் நலன்களை மேம்படுத்த இருப்பார்களேயானால், இந்த பொருளாதார நெருக்கடியாயினும் சரி, இலங்கையின் இன முரண்பாடாயினும் சரி எந்தவகையிலும் தீர்த்துக்கொள்ள முடியாததொரு தொடர்கதையாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. 21ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுமா எனப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

– சி. குகதாசன் –
(அரசறிவியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.)

# 'வெடி'மணியம்

தொடர்ச்சி

இதுக்கிடையில் எங்கட ஆக்கள் சனாதிபதித் தேர்தலில் செய்த "திருக்கூத்துகளை" சனம் கடும் கோபத்துடன் பாத்துக்கொண்டிருக்குது.

சம்பந்தர் அண்ணர் மீண்டும் மீண்டும் தமிழ்மக்களின் அரசியல் எதிர்காலத்தை சூனியமாக்கும் செயலைத்தான் செய்துகொண்டிருக்கிறார்.

சனாதிபதித் தேர்தல் என்பது நாடாளுமன்றத்தில் "ரகசிய வாக்கெடுப்பின்" மூலமே நிகழும்.

இந்த நிலையில் இந்த சனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒண்டுல் நடுநிலையாக இருந்திருக்கோணும்.

அல்லது ஆருக்கு வேணுமெண்டாலும் வாக்களித்து இருக்கலாம். அதை வெளியில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

ரணிலோடும் டலஸோடும் பேரம் பேசியதில் தப்பில்லை. இறுதியில் டலஸோடு செய்த அந்த எழுத்துமூல பேரம் என்னவெண்டு சொல்லாமல் விட்டது போல;

ஆருக்கு வாக்களித்தோம் என்பதையும் சொல்லாமலே விட்டிருக்கலாம்.

அரசியல் முதிர்ச்சியில்லாமல் சம்பந்தர் அண்ணர் செய்த இந்த தவறான செயல்;

தமிழ்மக்களின் அரசியல் பயணத்தில் மீண்டும் ஒரு கறுப்பு புள்ளியை வைத்திருக்கிறது.

ரணில் மிகச்சாதுரியமாக மஹிந்த கட்சியை ரண்டாக பிளந்ததுபோல;

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பையும் இரண்டாக பிளந்துள்ளார் என்பதே யதார்த்தம்.

சுமந்திரனும் சாணக்கியனும் ரணிலுக்கு எதிராக போர்க்கொடி தூக்கி சன்னதம் ஆடும் அதே வேளையில்;

தங்கள் சொந்தக் கட்சியைச் சேர்ந்த மற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை வைப்பது சிறுபிள்ளைத்தனமானது.

கூட்டமைப்பின் மற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலுக்கு வாக்களித்தார்களா? அல்லது டலஸுக்கு வாக்களித்தார்களா? என்று ஆருக்கும் தெரியாது.

ரகசிய வாக்கெடுப்பில் ஆர் ஆர் ஆருக்கு வாக்குப்போட்டவை எண்டு சுமந்திரனுக்கும் சாணக்கியனுக்கும் எப்படி தெரிந்தது?

புதினமாக் கிடக்கு !!!!

கடந்த தேர்தல் காலங்களில் சுமந்திரன் மீது பல ஆயிரம் குற்றச்சாட்டுகள் வந்தன. அதையெல்லாம் மிகக் கடுமையாக "ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகள்" எண்டு மிகக்கடுமையான தொனியில் கூவிய சுமந்திரன் இன்று செய்வது என்ன?

சொந்த கட்சி உறுப்பினர்கள் மீது தேள்வையில்லாத அபாண்டமான குற்றச்சாட்டுகள் வைப்பது கட்சியை இரண்டாக பிளப்பதற்கு சமன்.

சுமந்திரனும் சாணக்கியனும் ரணிலின் "டபுள் ஏஜெண்ட்" எண்டு பொதுவெளியில் மக்கள் வைக்கும் ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரா?

இல்லை எண்டால் ஏன் இந்த தேள்வையில்லாத விசர் வேலை?

இப்ப நாடு இருக்கும் சூழ்நிலையில் சிங்கள தேசத்தின் சனாதிபதியாக டலஸ் வந்தால் என்ன ? ரணில் வந்தால் என்ன?

அதால் தமிழ்மக்களுக்கு என்ன பயன்?

இப்போதைய சூழ்நிலையில் பெரும்பான்மை சிங்கள மக்களின் தலைவனாக ரணிலை விட்டால் அவர்களுக்கு வேறு தலைவன் இல்லை.

நாளைக்கு மீண்டும் ஒரு தேர்தல் வந்தால் அவர்களின் தெரிவு என்ன?

ரணில் அல்லது மஹிந்த மட்டும்தான்!

அதைத்தாண்டி அவர்களால் தங்களின் பேரினவாத மனநிலையில் இருந்து இப்போதைக்கு வெளியே வரமுடியாது.

அழியாத பேரினவாத மனநிலையோடு இருக்கும் 200இக்கும் அதிகமான சிங்களத் தலைவர்களை நாட்டை ஆளுவதற்கு தெரிவுசெய்து அனுப்பிய சிங்கள மக்களின் மனநிலையில் மாற்றம் வந்தால் மட்டுமே;

சிறிலங்காவுக்கு ஒரு நல்லகாலம் பிறக்கும்.

அல்லது அவர்களின் அடுத்த சனாதிபதியாக நாமல் ராஜபக்ஷவும், அவரது தம்பி யோசித ராஜபக்ஷ பிரதமராகவும் வருவார் என்பதில் எந்த ஐயமும் எங்களுக்கு இல்லை.

ஆக;

சிங்களதேசம் எந்தக் காலத்திலும் தங்களின் சுயநல அரசியல் புத்தியில் இருந்து தன்னை மாற்றிக்கொள்ள வாய்ப்பேயில்லை.

ஆதலால்....

எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ்த்தரப்பு சிங்களத் தலைவர்களை வெளிப்படையாக ஆதரிக்கும்போது ஒண்டுக்கு நூறுமுறை நிண்டு நிதானித்து யோசிக்கவேணும்.

வெளிப்படையாக....

சரத் பொன்சேகாவை ஆதரிச்சம். என்ன நடந்தது?

மைத்திரியையும் ரணிலையும் ஆதரிச்சம். என்ன நடந்தது?

டலஸை ஆதரிச்சம். என்ன நடந்தது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சம்பந்தர் அண்ணரும் மீண்டும் மீண்டும் தமிழ்மக்களின் ஆணையை இழந்துகொண்டே போகிறார்கள்.

சுமந்திரன், சாணக்கியனின் ரணில் எதிர்ப்பு எண்ட "சிறுபிள்ளை வேளாண்மை" வீடுவந்து சேராது.

ரணிலை ஏற்கனவே தமிழ்மக்கள் புறக்கணித்துவிட்டார்கள்.

செத்த பாம்பை அடிக்க பொல்லுத்தடியோடு கிளம்பியிருக்கும் சுமந்திரனையும் சாணக்கியனையும் பார்த்து சிரிப்பதா அல்லது கோபப்படுவதா எண்டு தெரியவில்லை.

ரணில் தன்னுடைய ஆட்டத்தை கொழும்பில் ஆரம்பித்துவிட்டார்.

இதுக்கு "கோட்டாவே" பறுவாயில்லை எண்டு சிங்களவர்கள் முணுமுணுக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை.

திகதி 21.07.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4823
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,110,860.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 9 2 7 8 4 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,859,805.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1301
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,404,660.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 0 3 9 9 7 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,444,374.40

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3065
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,213,480.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 17 27 47 69
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,819,060.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 853
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,723,900.00
வெற்றி இலக்கினம் Z வெற்றி இலக்கங்கள் 08 20 56 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 118,599,513.20

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 132
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,168,320.00
இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 17 40 42 57
விசேட இலக்கினம் மிதுனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,303,101.20

Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1171
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,616,960.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 261,691,174.00
Z 26 01 32 50 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# சவால்விடும் நெருக்கடிகள்! முறியடிப்பாரா ரணில்?



கட்டுரையாளர்:
யோ.தர்மராஜ்
dharmarajmayuran@gmail.com

"நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய்" என சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிறார். அது அப்படியே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்குப் பொருந்தியுள்ளதோ என எண்ணத் தோன்றுகின்றது. 45 வருடங்களாக நாடாளுமன்றத்திற்குள் பிரவேசித்த அவர், 6 தடவைகள் பிரதமராக நியமிக்கப்பட்டு, இலங்கை வரலாற்றில் சாதானையும் புரிந்துள்ளார். இத்தனை தடவைகள் பிரதமராக இருந்தும் ஒரு முறையேனும் ஜனாதிபதி கதிரையில் அவர் அமர்ந்ததே கிடையாது.

1995 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போதிலும் அவரால் அக்கதிரையில் அமர்வதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. பின்னரான ஆண்டுகளில் வெவ்வேறு நபர்களுக்கு ஜனாதிபதி வேட்பாளர் வாய்ப்பைக் கொடுத்திருந்த போதிலும், ஜனாதிபதி பதவியில் அமர வேண்டும் என்ற கனவு அவர் மனதில் இருந்துகொண்டே இருந்தது. "இன்னும் நீங்கள் ஜனாதிபதியாக வேண்டும் என்ற கனவிலா இருக்கின்றீர்கள்?" என்ற ஒரு கேள்விக்கு, "அது உங்களுக்குக் கனவாகத் தெரிகின்றதா?" என ஊடகமொன்றுக்கு பதிலளித்திருப்பார்.

இரு முறை தோல்வி, மூன்று முறை தியாகம் செய்தாலும் 2019 ஆம் ஆண்டு கட்சிக்கு கிடைத்த தேசியப் பட்டியலில் தனியொருவராக நாடாளுமன்றம் வந்து, 2022 மே மாதம் மக்கள் புரட்சியால் பிரதமராகி, 2022 ஜூலை மாதம் நாட்டின் 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதனால்தான், "நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்" என்ற கருத்தை நினைவு கூர்ந்தேன்.

தனியொருவராக நாடாளுமன்றம் நுழைந்து, முதன்முறையாக அரியாசனம் ஏறியுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. நாடு சாதாரணமான நிலையில் இருக்கும்போது, அதிகாரத்துக்கு வரவில்லை. பொருளாதார, அரசியல் மற்றும் சமூக ரீதியாக நாடு பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் போதே அவர் ஆட்சிபீடம் ஏறியுள்ளார்.

69 இலட்சம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி, நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அதிகாரமுள்ள ஓர் அரசாங்கத்தையும் கொண்டு நாட்டை சரி செய்ய முடியாது, திணறிப்போய், ஆட்சி அதிகாரத்தை இழந்துள்ள நிலையில், நாடாளுமன்றத்தில் ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனத்தை வைத்துக்கொண்டு, நாட்டிலுள்ள சவாலை எதிர்கொள்ள முடியுமா? பொருளாதார, அரசியல் ரீதியாக நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வை வழங்கி, நாட்டை சாதாரண நிலைமைக்கு கொண்டுவந்து, மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் முடியுமா?

45 வருடங்களுக்கு மேலான அரசியல் அனுபவம், சர்வதேச நாடுகளுடனான தொடர்புகள், நெருக்கடிகளைக் கையாளும் திறமைகளைக் கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்றத்திலுள்ள ஏனையோரின் ஒத்துழைப்பைப் பெற்று, வரலாற்றில் இல்லாதவாறான நாட்டின் நெருக்கடியை எவ்வாறு சமாளிப்பார் என்பது ஒரு பக்கமிருந்தாலும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஏற்றுக்கொள்ளவே முடியாது, அவர் பதவி விலகும் வரை போராட்டத்தைத் தொடர்வோம் என போராட்டக்காரர்களின் எச்சரிக்கைக்கு மத்தியில், அவரால் இந்த சவாலை வெல்ல முடியுமா என்பது மிகபெரும் கேள்விகுறியே..

நாடு பொருளாதார ரீதியில் எழுச்சி பெற வேண்டுமாயின், நாட்டில் சட்டம் ஒழுங்கு முறையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். ஆட்சியில் இருக்கும் தலைவர்களும் மக்களின் கருத்துகளுக்கு செவிசாய்க்க வேண்டும். மக்களின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காதபட்சத்தில் மக்கள் கிளர்த்தெழுவார்கள். அதுவே, நாட்டில் நடக்கின்றது. அரசியலில் அனுபவமிக்கவராகவும், இராஜதந்திர நரி என்றும் புகழப்படும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்து, தான் நினைத்த வெற்றியைப் பெற முடியுமா? அல்லது சர்வாதிகார தலைவராக செயற்படுவதற்கு முற்படும்போது, நாடு அராஜகத்தை நோக்கிப் பயணிக்குமா என்பது அவரின் நடத்தையிலேயே தங்கியுள்ளது.

ஒரு தரப்பு அவரால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் எனக் கூறினாலும் மற்றொரு தரப்பு அவரால் முடியாது. அவர் ஒரு ராஜபக்ஷக்களின் பாதுகாவலன். அவரால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. மாறாக, ராஜபக்ஷக்களை பாதுகாப்பதுடன், அவர்களின் அரசியல் பிரதிநிதியாகவே செயற்படுவார் என்றும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இவ்வாறான, விமர்சனங்களுக்கு மத்தியில் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை சற்றுப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

துணிந்து பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்கு ரணில் விக்கிரமசிங்கவை பாராட்டினாலும், அவருக்கு முன்னாலிருக்கும் சவால் இலகுவானதல்ல. அவர் எடுக்கும் ஒவ்வொரு முடிவும், ஒவ்வொரு நகர்வும் நாட்டின் தலை எழுத்தையே தீர்மானிக்கும் சக்தியாக மாறும். மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கத் தவறினால் கடந்த முறை மக்கள் நிராகரித்தும் அரசியலுக்கு வர முடிந்த ரணிலால் இனி வாழ்நாள் முழுவதும் மக்கள் முன் வந்து நிற்க முடியாத நிலைமை ஏற்படும். உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறும் பட்சத்தில் அதிகாரத்திலிருந்து அவரை நீக்கும் மக்கள் புரட்சியும் ஆரம்பமாகலாம். என்ன செய்யப் போகின்றார்? தனக்கு முன்னாலிருக்கும் சவாலை வெற்றிகொள்வாரா? காலமே தீர்மானிக்க வேண்டும்.

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம்**



நாடு தற்போதிருக்கும் நிலைமை என்ன என்பதை நாங்கள் சிந்தித்தோம். நாட்டில் நீதி சீர்குலைந்துள்ளது. நீதி நடைமுறைப்படுத்தப்படவில்லை. சட்டம், ஒழுங்கு முற்றாக சீர்குலைந்துள்ளது. நீதியை மக்கள் தங்களுடைய கைகளில் எடுத்து செயற்படுகின்றனர். நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், முதலில் நாடு நீதியை நிலைநாட்டும் இடமாக மாற்றப்பட வேண்டும். அவ்வாறில்லையேல் நாடு எப்போதும் வளர்ச்சியடையாது.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகளிலிருந்து மீள வேண்டுமாயின், சுற்றுலாப் பயணிகள் வருகை தர வேண்டுமாயின், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வர வேண்டுமாயின் முதலில், நாட்டில் நீதி நிலைநாட்டப்படவும், நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டும். அதுவே நாட்டுக்கு தற்போதுள்ள முக்கிய தேவையாகும்.

நாட்டில் நீதி நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது. கடந்த நாட்களில் நாட்டில் நீதி நடைமுறைப்படுத்தப்படவில்லை. நாட்டிலுள்ள ஏனைய பிரச்சினைகளுக்கு முன்னர், மக்கள் பாதுகாப்பாக வீதியில் செல்லக்கூடிய சூழல், அரசியல் கருத்துகளை தெரிவிக்கக் கூடிய உரிமைகள், சுதந்திரம் போன்றவற்றை உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறான உரிமைகள் இல்லாது போனால், நாட்டில் பொருளாதார வளர்ச்சி காணப்படாது. எனவே, பொருளாதாரத்தை மீட்பதற்கு முன்னர், நாட்டில் நீதியை நிலைநாட்ட வேண்டும். அதனை செய்வதற்கு உரிய நபர் ரணில் விக்ரமசிங்க என்றே நாங்கள் அவரை ஜனாதிபதியாக தெரிவுசெய்தோம்.

அவருக்கிருக்கும் அனுபவம், சர்வதேச உறவுகள், இராஜதந்திர நடவடிக்கைகளால் நாட்டை கட்டியெழுப்பக் கூடிய ஒரே நபரும், தகுதியானவரும் ரணில் விக்ரமசிங்க என்பதாலேயே, அவரை நாங்கள் தேர்ந்தெடுத்தோம்.

**ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க**



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களால் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டமையினால், அவருடைய தெரிவு அரசியலமைப்புக்கு உட்பட்டதாகும். அதனை சட்டவிரோதமானது எனக் கூற முடியாது. அவரின் தெரிவின்போது, மக்களின் எதிர்பார்ப்புகள் பிரதிபலிக்கவில்லை. ரணில் விக்ரமசிங்கவையும் பதவி விலகுமாறே மக்கள் கூறுகின்றனர்.

ரணில் – கோட்டாவுக்கு எதிரான எதிர்ப்புகள் நாடாளுமன்றத்திற்கு வெளியிலும் அழுத்தமாக ஒலித்தன. நாடாளுமன்றத்தில் இன்னும் மொட்டுக்கட்சியினரின் அதிகாரம் ஓங்கியுள்ளதால், அவர்களின் ஆதரவில் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகியுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமைத்துவம் இல்லாது தடுமாறிக் கொண்டிருக்கின்றமையினாலேயே ரணிலை ஏற்றுக்கொண்டுள்ளனர். கடந்த வன்முறையின் போது பாதிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு நட்டஈடு வழங்குவதாகவும், நாடாளுமன்றத்தை உரிய நேரத்துக்கு முன்னர் கலைக்கமாட்டேன் என அவர்களுக்கு உறுதியளித்துள்ளதாலும் அவை ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்கு முக்கிய காரணங்களாக இருந்தன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு நாடாளுமன்றத்திலிருந்து 151 என்ற அதிகாரம் 134 ஆக குறைவடைந்து, எங்களுக்கிருந்த 69 என்ற அதிகாரம் 82 ஆக உயர்ந்துள்ளது. இந்த ஒருமித்த நிலைப்பாட்டையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். மாறாக, மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படவில்லை என்பதே வருத்தமான விடயம்.

ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டாலும் அவருக்கு முன்னாலிருக்கும் சவால் இலகுவானதல்ல. வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரம், ஸ்திரமற்ற அரசியல் நெருக்கடியால் எரிபொருள், எரிவாயு, மருந்துப்பொருட்களின் விலை அதிகரிப்பு, மின்தடை, உரப்பிரச்சினை போன்றவற்றுக்கு விரைவில் தீர்வுகாண வேண்டிய பாரிய சவால் அவருக்கு முன்னாலுள்ளது. நாட்டின் அந்நிய செலாவணியை அதிகரித்து, சுற்றுலாத்துறையை கட்டியெழுப்ப வேண்டிய பாரிய சவாலுக்கும் அவர் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இந்த சவால்களை வெற்றிகொள்ள முடியுமா, முடியாதா என்பது அவரின் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட ஏனைய நிதி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படும் போது, விரைவில் தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் பலவுள்ளன. செலவுகளைக் குறைத்தல், ஊழல், மோசடிகளை ஒழித்தல் போன்ற மறுசீரமைப்பு நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுக்க வேண்டியுள்ளது. இவற்றை செய்வதற்கு அவரால் எந்தளவு முடியும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

**மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க**




நாடாளுமன்றத்தின் ஊடாக ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதானது, இலங்கை வரலாற்றின் மற்றொரு மோசடி அரசியலின் கொடுக்கல் வாங்கல்களின் பிரதிபலனாகும். மக்களாணை இல்லாத ரணிலை, ராஜபக்ஷக்களின் பாதுகாப்புக்காகவும், அவர்களின் அரசியல் பிரதிநிதியாகவுமே பிரதமர் கதிரையில் அமர்த்தினர். அவர்களின் அரசியல் பலத்துக்காகவே இப்போது ஜனாதிபதியாக நியமித்துள்ளனர்.

2019 ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்கவை தோற்கடிப்பதற்காக மக்களாணையில் நாடாளுமன்றம் வந்துள்ள மொட்டுக்கட்சியினர், தோற்கடிக்கப்பட்ட அதே ரணிலை ஜனாதிபதி கதிரையில் அமர்த்தியுள்ளனர். இதுவே, நாடாளுமன்றத்தில் மக்களாணையை காட்டிக்கொடுத்த முதல் சந்தர்ப்பமாகும். 69 இலட்சம் வாக்குகளைப் பெற்ற கோட்டாபயவையும், அவரின் கீழுள்ள அரசாங்கத்தையும் வீட்டுக்கு விரட்டிய மக்கள் பலம் வெளியில் இருக்கும் போது, அரசியலமைப்புக்குள் ஒளிந்துகொண்டு டீல் அரசியல் ஊடாக ஜனாதிபதி ஒருவரை நியமிப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை.

மக்களாணையைக் காட்டிக்கொடுத்த நாடாளுமன்றம் உடனடியாக கலைக்கப்பட்டு, புதிய மக்களாணைக்கு இடமளிக்க, புதிய பொதுத் தேர்தலை நடத்தவேண்டும். அவ்வாறில்லாது, டீல் அரசியல், பழைய கலாசாரத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது.

ரணில் விக்ரமசிங்க என்பவர் மெஜிக் காரரல்ல. அவரின் தனிப்பட்ட சகோதரத்துக்காக சர்வதேச நாணய நிதியமல்ல, உலகின் எந்தவொரு நிதி நிறுவனமும் இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்காது. பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்புக்கூற வேண்டிய ரணில் தரப்பும், ராஜபக்ஷ தரப்பும் இன்று ஒன்றாக இணைந்துள்ளன. நாட்டை ஏமாற்றியவர்கள் எவ்வாறு மீண்டும் அதனைக் கட்டியெழுப்ப முடியும்? இரு தரப்பும் நாட்டை சீரழித்தமைக்கும், ஊழல்வாதிகளை பாதுகாத்தமைக்கும் பொறுப்புக்கூற வேண்டும்.

நாட்டை சீரழிப்பதற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் ஒன்றாக இணைந்துள்ளதால் நாட்டை மீட்க முடியாது. மக்களாணையைக் காட்டிக்கொடுத்த நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, புதிய நாடாளுமன்றம் தெரிவு செய்யும் அரசாங்கத்துக்கே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.



**மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கத் தவறினால் கடந்த முறை மக்கள் நிராகரித்தும் அரசியலுக்கு வர முடிந்த ரணிலால் இனி வாழ்நாள் முழுவதும் மக்கள் முன் வந்து நிற்க முடியாத நிலைமை ஏற்படும். உரிய நடவடிக்கைகளை எடுக்க தவறும் பட்சத்தில் அதிகாரத்திலிருந்து அவரை நீக்கும் மக்கள் புரட்சியும் ஆரம்பமாகலாம். என்ன செய்யப் போகின்றார்? தனக்கு முன்னாலிருக்கும் சவாலை வெற்றி கொள்வாரா? காலமே தீர்மானிக்க வேண்டும்**



# ரணிலுக்கு கிடைத்த பதவியும் கூட்டமைப்பு எடுத்த முடிவும்

“நாடாளுமன்றத்தில் புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பொதுவாக இதுதான் நடக்குமென்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவுசெய்யப்படுவாரென எதிர்பார்க்கப்பட்டவேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டலஸை ஆதரிக்க எடுத்த முடிவு வரலாற்றுத் தவறு என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்”



பா.அரியநேத்திரன்

இலங்கையின் 8ஆவது ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க 134 வாக்குளைப் பெற்று தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவருடன் நேரடியாக எதிர்த்துப் போராடிய டலஸ் அலகப்பெரும 82 வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளார். அநுரகுமார திசாநாயக்கா 3 வாக்குகளை பெற்று படுதோல்வி கண்டார்.

உண்மையில், ரணில் விக்ரமசிங்கவுக்கு 2022ஆம் ஆண்டு யோகம் நிறைந்த ஆண்டாகவே உள்ளது. தனித்து நாடாளுமன்ற உறுப்பினராக தேசியப் பட்டியல் மூலம் சென்று பிரதமராக, பதில் ஜனாதிபதியாக, இப்போது இடைக்கால ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளமை அவருக்குக் கிடைத்ததோர் அதிர்ஷ்டமாகவே பார்க்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி தெரிவில் டலஸை ஆதரிக்க எடுத்த முடிவு தவறான அணுகுமுறை என பலரும் சமூக வலைத்தளங்களில் விமர்சனம் செய்வதை காணமுடிகிறது.

நாடாளுமன்றத்தில் புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார், பொதுவாக இதுதான் நடக்குமென்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவுசெய்யப்படுவாரென எதிர்பார்க்கப்பட்டவேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டலஸை ஆதரிக்க எடுத்த முடிவு வரலாற்றுத் தவறு என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் எழுத்து மூலமான சில கோரிக்கைகளை டலஸ் ஏற்றமையினாலேயே தாம் அவரை ஆதரிக்கும் முடிவுக்கு வந்ததாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவர் எந்தவகையில் தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவார் என்பது கேள்விக்குறியாக இருக்கும் நிலையில், எப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த முடிவுகளை எடுத்தது எனவும் பலர் குற்றஞ்சுமத்துகின்றனர்.

இதில் உண்மை என்னவெனில், கோட்டாபயவை காப்பாற்றவே ரணில் பிரதமராக செயற்படுகிறார். கோட்டாவை போன்று ரணிலையும் வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்ற எண்ணம் காலிமுகத்திடலில் போராட்டம் நடத்திய சிங்களப் பெரும்பான்மை போராட்டக்காரர்களிடம் இருந்தது.

இதுதொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரன் மற்றும் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாணாக்கியன் ஆகியோருடன் போராட்டக் குழு உறுப்பினர்கள் அடிக்கடி சந்திப்புகளை நடத்தி, தாம் ரணிலை ஜனாதிபதியாக தெரிவுசெய்ய விடமாட்டோம் என்ற வாக்குறுதிகளை வழங்கவிருந்ததாக தெரிகிறது.

இந்த நம்பிக்கையில் பெரும்பாலான சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலுக்கு எதிராகவே வாக்களிப்பார்கள். அப்படி அவர் வெற்றிபெற்றாலும் தாம் ஆதரிப்பதில் பிரயோசனம் இல்லை என்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாற்றுவழியாக டலஸை ஆதரிப்பது என்ற முடிவை எடுத்திருக்கலாம்.

இன்னும் சொல்வதானால், ரணிலை தோற்கடிக்க கருவியாக டலஸை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயன்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்வாக்கை குறைத்துள்ளதென்பது உண்மைதான்.

வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களாக மூன்று கட்சிகளிலிருந்து 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இந்த 13 பேரும் இணைந்து ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலை உள்ளதை கடந்த ஜனாதிபதித் தெரிவில் நிருபித்துள்ளது.

மூன்று கட்சிகளும் மூன்று நிலைப்பாடுகளை இந்த ஜனாதிபதித் தெரிவில் எடுத்திருப்பது தமிழர்களின் ஒற்றுமை எவ்வாறு உள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது.

பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலகப்பெருமவை ஆதரித்தும், இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கொண்ட் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தாம் ஜனாதிபதித் தேர்தலில் விலகியிருப்பதாக எடுத்த முடிவும், முன்னாள் நீதியரசர் விக்கினேஸ்வரன் ரணிலை ஆதரிக்க எடுத்த முடிவும் ஒற்றுமை எப்படி என்பதை நிருபித்துள்ளது.

இதேபோலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் முடிவு ஒன்றாக டலஸை ஆதரிப்பதாக எடுத்தாலும் பல மணிநேர வாதப்பிரதிவாதங்கள் அங்கும் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. ஒருசாரார் டலஸை ஆதரிக்கவோ, ரணிலை ஆதரிக்கவோ விரும்பவில்லை. தாமும் இந்தத் தேர்தலை பகிஷ்கரிப்பது நல்லதென வாதிட்டபோதும் அதனை டலஸை ஆதரிக்கவேண்டுமென ஒற்றைக்காலில் நின்ற சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கவில்லை.

சரி. இதற்கு இதுதான் ஒரேவழி என டலஸை ஆதரிப்பதானால் எழுத்துமூலமாக 13 கோரிக்கைகளை முன்வைத்து அதனை அவர்கள் ஏற்றால் ஆதரிப்போம் என்ற முடிவு எட்டப்பட்டதும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அதை செய்யலாம் எனக் கூறி டலஸ், எதிர்க்கட்சித் தலைவர் சஜீத், முன்னாள் அமைச்சர் பீரீஸ் ஆகியோரை சம்பந்தன் இல்லத்திற்கு வரவழைத்து 13 கோரிக்கைகளிலும் கையொப்பம் வாங்கினார்.

“இடைக்கால ஜனாதிபதியாக ரணில் தெரிவானாலும் சிங்கள மக்களின் ஆதரவு இவருக்கு அறவே இல்லை. மொட்டுக் கட்சி சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு மட்டுமே இவருக்கு உள்ளதால் தற்போது அமையப்போகும் அமைச்சரவை கோட்டாவின் நிழல் அரசாங்கமாகவே செயல்படும்”

அதனால் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் டலஸை ஆதரிக்கும் முடிவை எடுத்ததாக சொல்லப்படுகிறது.

இரகசிய வாக்களிப்பு என்பதால் டலஸை ஆதரிக்க ஏற்கனவே வாக்குறுதியளித்த சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ரணிலுக்கே வாக்களித்துள்ளனர்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுக்கு வாக்குறுதி கொடுத்த மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் போராட்டக்காரர்களுக்கு தண்ணீர் காட்டியுள்ளனர்.

போராட்டக்காரர்களின் சொல்லை நம்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏமாந்துள்ளது என்பதை மறுதலிக்க முடியாது.

சரியோ தவறோ இனி ஜனாதிபதி ரணில்தான். அவரையும் ஏற்கனவே காலிமுகத்திடல் போராட்டம் போன்று “ரணில் கோ கம” என்ற போராட்டத்தை நடத்தி ரணிலையும் பதவி விலக வைப்பார்களா, இல்லையா என்பது புதிய ஜனாதிபதி ரணிலின் பொருளாதார திட்டங்களைப் பொறுத்தே அமையும்.

எரிபொருள் தடை, வரிசை என மக்களை மீண்டும் வீதிகளுக்கு வர வைத்தால் ரணிலுக்கு எதிராக மீண்டும் மக்கள் போராட்டம் தொடர வாய்ப்புகள் உள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை தாம் ரணிலுக்கு எதிராக வாக்களித்தாலும் நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியில் அவருடன் வடக்கு, கிழக்கு தமிழ்மக்களின் அடிப்படை பிரச்சினைகள், அரசியல் கைதிகள் விடுதலை, காணி அபகரிப்பு, கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக தரம் உயர்தல் என பல விடயங்களை பேசவேண்டிய தேவை தமிழ்தேசிய் கூட்டமைப்புக்கு உண்டு.

ரணிலை பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன் இருவருடன் மட்டுமே சில கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் ஏனைய எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேரடியாக எந்த முரண்பாடுகளும் இல்லை என்பதே உண்மை.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் பகிரங்கமாக ரணிலை ஆதரித்தாலும் வடக்கு, கிழக்கு மக்களின் அரசியல் தீர்வு அடிப்படை பிரச்சினை விடயங்களை தனியாக ரணிலுடன் கையாளக்கூடிய ஆற்றல் இருந்தாலும் அனுபவம் அவருக்கு இல்லை என்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணிலுடன் பேசவேண்டிய தேவைகள் உள்ளன.

ஆனால், ரணிலின் நரித்தந்திரம் கடந்த 2004இல் புலிநீக்க அரசியலிலும், 2015இல் தமிழ்த் தேசிய நீக்க அரசியலிலும் வெற்றி கண்டவர் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் புரிதல் நல்லது.

இடைக்கால ஜனாதிபதியாக ரணில் தெரிவானாலும் சிங்கள மக்களுடைய ஆதரவு இவருக்கு அறவே இல்லை. மொட்டுக் கட்சி சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு மட்டுமே இவருக்கு உள்ளதால் தற்போது அமையப்போகும் அமைச்சரவை கோட்டாவின்நிழல் அரசாங்கமாகவே செயல்படும்.

சிலவேளை, சிங்கப்பூருக்கு சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை மீண்டும் மாலை மரியாதையுடன் இலங்கைக்கு ரணில் அழைத்து அடைக்கலம் வழங்கினாலும் ஆச்சரியம் இல்லை.

அனுபவமும் ஆற்றலும் அரசியல் முதிர்ச்சியும் நரித்தந்திரமும் கொண்ட ரணில் விக்ரமசிங்க கடந்த 2005இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறக்கூடிய வாய்ப்புகள் இருந்தும் அன்றைய அரசியல் நிலைமை காரணமாக வடக்கு, கிழக்கில் ரணிலை ஆதரிக்காமல் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு விடுதலைப் புலிகள் கூறியதால் ரணில் தோல்வி கண்டும் மஹிந்த வெற்றிபெற்றதும் வரலாறு.

காலம் கடந்து தற்போது இடைக்கால ஜனாதிபதியாக ரணிலை நேரடியாக கடந்த 2005 ஜனாதிபதித் தேர்தலில் எதிர்த்துப் போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ஷவும் அவரின் கட்சியும் இன்று ஆதரவாக ரணிலை வெற்றிபெற வைத்துள்ளனர்.

ரணில் விக்ரமசிங்க கனவில்கூட நினைக்காத பதவி அவருக்கு கிடைத்துள்ளது என்பதே உண்மை.

காலம் மாறும் கோலம் மாறும் காட்சி மாறும். இதுதான் அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை, நிரந்தர நண்பனும் இல்லை என்பதற்கு நல்ல உதாரணமாகும்.

# இ.தொ.காவின் ஆதரவு ஏன் ரணிலுக்கு?

புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு இ.தொ.கா. ஆதரவு வழங்கியது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் பின்வரும் விடயங்களை முன்வைத்துள்ளார்.

எனது தலைமையின்கீழ் எடுக்கப்பட்ட முடிவுகள் அனைத்தும் மிகவும் வெளிப்படையாகவும் அனைவரது கருத்துகளையும் செவிசாய்த்து எமது கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அனைவருடனும் கலந்தாலோசித்து எடுக்கப்பட்ட முடிவுகளாகும்.

மேலும், இவ்வாறான ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில், ஒருவரின் பிரபல்யத்தன்மை மட்டும் கருத்திற்கொள்ளப்படாது, நாட்டின் தற்போதைய சூழ்நிலை மற்றும் எதிர்காலம் தொடர்பாக பகுப்பாய்வு செய்யப்பட்டு எடுக்கப்பட்ட ஒரு தீர்மானமாகும்.

இதன்போது பின்வரும் முக்கியமான விடயங்களும் கருத்திற்கொள்ளப்பட்டன.

தற்போதைய நாடாளுமன்ற பெரும்பான்மை ஒருசாராரிடம் காணப்படுகின்றது. அவர்களின் நடவடிக்கைகளில் திருப்தி இல்லாவிடின் அவர்களுக்கு எதிர்வரும் காலங்களில் தேர்தல்களில் வாக்களிக்காது எதிர்ப்பை வெளிப்படுத்தும் கலாசாரத்தை எமது வாக்காளர்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

மேலும், நாட்டில் தற்பொழுது காணப்படும் ஸ்தீரமற்ற சூழ்நிலைகளில் எதிர்வரும் சில மாதங்களுக்கு எமது தேவைப்பாடு பரீட்சார்த்த விடயங்களை மேற்கொள்ளும். பிரச்சினைகளை நுட்பமாக கையாளும் திறமைகளைக்கொண்ட ஒரு



அனுபவசாலியே தலைவராவார். ரணில் விக்ரமசிங்க ஓர் இனத்தவருக்கான தலைவராக இல்லாது நாட்டின் சகல இனங்களுக்கான தலைவராக காணப்படுவார்.

போட்டியிட்ட ஏனைய நபர்கள் நிர்வாக மற்றும் அரசியல் ரீதியாக சிறப்பானவர்களாக காணப்பட்டாலும், இவ்வாறானதொரு சூழ்நிலையில் பல கடினமான பிரச்சினைகளுக்கு மத்தியில் தற்போதுள்ள அரசியல் நலன், மானியங்கள், தனியார்மயமாக்கல் தொடர்பாக கடுமையான முடிவுகளை எடுக்கக்கூடியவர்களா என்பது சந்தேகமே.

ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி மலையக சமூகத்துடன் கொண்டிருந்த உறவு மற்றும் தொடர்புகள், அத்துடன், 2003ஆம் ஆண்டில் ஏறக்குறைய சுமார் 3,00,000 பேருக்கு குடியுரிமை பெற்றுக்கொடுத்த நிகழ்வுகள் மற்றும் மலையக மக்களுக்கான தனிவீட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் என்பன அவர்கள் எம்முடன் இணைந்து எமது மக்களுக்கு ஆற்றிய சேவைகளில் சிலவாகும்.

இந்த முடிவானது புத்திஜீவிகள், வியாபார சமூகம், அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியவர்களுடன் கலந்துரையாடி பல்வேறு ஆலோசனைகள் பெறப்பட்டு கட்சி உறுப்பினர்களின் ஒப்புதலுடன் நாடாளுமன்றத்தின் தற்போதைய சூழ்நிலை மற்றும் தேயிலை கைத்தொழில், பெருந்தோட்ட சமூகத்துடனான அவரது அனுபவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட முடிவாகும்.

இறுதியாக இரகசிய வாக்கெடுப்பொன்று இடம்பெற்றாலும், நான் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கு மிகவும் வெளிப்படையாக எமது தீர்மானத்தை முன்கூட்டியே அறிவித்து வாக்களித்தோம். ஜனாதிபதி தெரிவு சம்பந்தமாகவும் வாக்களிப்பு சம்பந்தமாகவும் இந்தத் தெளிவூட்டல் இறுதியானதாகக் காணப்படும் அதேவேளை, ஜனாதிபதியுடன் கைகோர்த்து எமது நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன் - என தெரிவித்துக் கொள்கின்றேன்.



எம்.எஸ்.அமீர் ஹுசைன்



# ஊழல் இல்லாத ஆட்சியை ஜனாதிபதி ரணிலால் உறுதிப்படுத்த முடியுமா?

இலங்கையில் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக, 46 வருட கால அரசியல் அனுபவத்தைப் பெற்றுள்ள, 06 முறை பிரதமராக பதவி வகித்துள்ள ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். ஜூலை 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் 134 வாக்குகளைப் பெற்றுக்கொண்டதோடு, அவரை எதிர்த்து போட்டியிட்ட டலஸ் அலகப்பெருமவை விட மேலதிகமாக 52 வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக தெரிவானார். முன்னாள் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்‌ஷ ஜூலை 09ஆம் திகதி நாட்டை விட்டுஓடியதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பவே ரணில் விக்ரமசிங்க இவ்வாறு நாடாளுமன்றத்தால் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார்.

இவ்வாறாக நாடாளுமன்றத்தில் தீர்மானிக்கப்பட்ட இரண்டாவது ஜனாதிபதி என்ற பெருமையை ரணில் பெறுகின்றார். இதற்கு முன்னர் 1993ஆம் ஆண்டு மே மாதம் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஆர்.பிரேமதாச மே தின நிகழ்வில் பங்குபற்றிய நிலையில், இடம்பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதலால் கொல்லப்பட்டபோது ஜனாதிபதி வெற்றிடம் ஏற்பட்டதற்கு அப்போதைய பிரதமராக இருந்த டி.பி.விஜேதுங்க நாடாளுமன்றம்மூலம் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார். ஆனாலும் அவருக்கு போட்டியாக எவரும் இருக்காததால் வாக்களிப்பு இடம்பெறவில்லை. ஆனால் ரணிலுக்கு போட்டியாக மேலும் இரண்டு வேட்பாளர்கள் இருந்ததால் வாக்கெடுப்பு நடைபெற்றது. இவரை எதிர்த்து போட்டியிட்ட டலஸ் அலகப்பெரும 82வாக்குகளையும் அநுரகுமார திசாநாயக்க 03 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர்.

எது எவ்வாறோ, ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்‌ஷ அவரது ஆட்சியில் பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்‌ஷ மக்கள் எதிர்ப்பை சமாளிக்க முடியாமல் பதவி விலகியபோது நெருக்கடியான நிலையை சமாளிக்க எவரும் முன்வராததால் நாடாளுமன்றத்தில் எந்தவொரு ஆசனமும் இல்லாத 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் படுதோல்வி அடைந்த கட்சியான ஐ.தே.க. உறுப்பினரை அழைத்து பிரதமர் பதவியை கொடுத்தார். ஆனாலும் சில தினங்களில் கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கும் எதிராக மக்கள் எதிர்ப்பு பலமடைந்ததால் அவரும் நாட்டை விட்டே ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது. கோட்டாபய ராஜபக்‌ஷ தம்மையும் ஆட்சியையும் தக்கவைத்துக் கொள்வதற்காக காவலுக்கு கொண்டு வந்தவரை ஜனாதிபதியாக்கும் வரத்தை கொடுத்துவிட்டு, நாட்டை விட்டே வெளியேறும் அவல நிலை ஏற்பட்டது. எல்லாம் ரணிலின் அதிர்ஷ்டம் என்று சொல்வதா அல்லது தோல்விகளைக் கண்டும் துவண்டு போகாத ரணிலின் விடாமுயற்சி என்று கூறுவதா?

கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து முழு நாடுமே ரணிலை வெறுத்து ஒதுக்கி வந்த நிலையில், மீண்டும் அவரே ஜனாதிபதியாக பொறுப்பேற்று எதிர்வரும் 2024 ஓகஸ்ட் மாதம் வரையில் இந்த நாட்டை ஆட்சிசெய்யும் வரத்தைப் பெற்றுள்ளார். 2024 நவம்பர் மாதத்திற்கு முன்னர் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதேநேரம் ஏற்கனவே 'கோட்டா கோ ஹோம்' பின்னர் 'ரணில் கோ ஹோம்' என்று முழங்கிக் கொண்டிருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இப்போது ஓரளவிற்கு அடங்கிப்போகும் நிலையை காணமுடிகின்றது. ஆனாலும் 2015 – 2019 காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி பிணைமுறி விற்பனை நடவடிக்கையில் 1300 கோடி ரூபாவை மோசடி செய்ததாக மிக மோசமாக குற்றம் சுமத்திய அதே பொதுஜன பெரமுன கட்சிக்காரர்கள் ரணிலுடன் கை கோர்த்து ஆட்சியிலும் பங்காளர்களாகி அமைச்சர் பதவிகளையும் பகிர்ந்து அதிகாரங்களை அனுபவிக்கும் நிலைக்கு உஷாரடைந்துள்ளனர். இதில் ரணிலை மிக மோசமாக தூற்றியவர்களாக முன்னாள் அமைச்சர்களாக இருந்த விமல் வீரவங்ச, உதய கம்மன்பில, நிமல் சிறிபால டி சில்வா, தினேஷ் குணவர்தன, சுசில் பிரேம ஜயந்த, விஜேதாச ராஜபக்‌ஷ, பந்துல குணவர்தன உட்பட பலரை குறிப்பிடலாம்.

இனி இரண்டு வருடங்களுக்கு ரணில் தான் ஜனாதிபதியாக இருப்பார். எதிர்வரும் இரண்டு வருட காலப்பகுதி எவ்வாறு அமையப் போகின்றது என்பது நாட்டு மக்களது ஒரே கவலையாகும். இந்த காலப்பகுதிக்குள் ஏற்கனவே இந்த நாட்டு மக்களால் துரத்தப்பட்டும் பதவி இறக்கப்பட்டும் உள்ள ராஜபக்‌ஷ குடும்பத்தின் காவலனாக ரணில் இருப்பாரா அல்லது அந்த குடும்பம் சூறையாடியதாக மக்களால் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நாட்டின் தேசிய சொத்துகளையும் வளங்களையும் தேடிக் கண்டுபிடிக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதே மக்களது எதிர்பார்ப்பாகும்.

தற்போதைய நிலையில், ரணிலும் 'ராஜபக்‌ஷ குடும்பத்தின் காவலன்' என்றே மக்கள் கருதுகின்றனர். ஆனால் கோட்டாபய ராஜபக்‌ஷவால் ரணில் களத்திற்குகொண்டு வரப்பட்டாலும் தான் ராஜபக்‌ஷ குடும்பத்தின் நண்பன் அல்ல என்பதை ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர், ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியபோது உறுதியாக தெரிவித்துள்ளார். அதேநேரம், முன்னாள் பிரதமராக இருந்து பதவி விலகிய மஹிந்த ராஜபக்‌ஷவும் ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின் பின்னர் பகிரங்கமாக ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில், டலஸ் அலகப்பெருமவை ஜனாதிபதியாக்க தாமும் வாக்களித்ததாகவும் அவர் தெரிவாகவில்லை என்பது கவலையாக இருப்பதாகவும் தெரிவித்தார். ரணில், ராஜபக்‌ஷவாதியாக இருப்பார் என்பதற்கு இந்த இரண்டு கருத்துகளும் எதிர் முரணாக அமைகின்றன. அவ்வாறாயின், மக்கள் எதிர்பார்க்கின்றபடி ரணில், ராஜபக்‌ஷவாதியாக இருக்க மாட்டாரோ? உண்மையாகவே ரணில் ராஜபக்‌ஷ குடும்பத்தின் எதிரியாக அமைந்தால் எதிர்வரும் இரண்டு வருட காலப்பகுதிக்குள் நாட்டில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை எதிர்பார்க்க முடியும் என்ற நம்பிக்கை பிறக்க இடமிருக்கின்றது.

குறிப்பாக மக்கள் எதிர்பார்ப்பது நாட்டில் ஊழல், சுரண்டல்கள் இல்லாத ஆட்சியையாகும். அத்துடன் மக்கள் ராஜபக்‌ஷ குடும்பம் மீது ஏன் வெறுப்படைந்தார்கள், ஏன் அந்த குடும்ப ஆட்சியை ஒழித்துக்கட்டி மாற்றத்தை தேடி வீதிக்கு இறங்கினார்கள், மலரும் புதிய ஆட்சியில் எதனை எதிர்பார்க்கின்றார்கள் என்பதை ஜனாதிபதி ரணில் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். நாடு மிக மோசமான பொருளாதாரப் பின்னடைவை சந்தித்து, அதன் சுமை மக்களது தலைகள் மீது சுமத்தப்பட்டு, சுமக்க முடியா பொருளாதார கஷ்டத்தால் துன்பப்பட ஆரம்பித்தபோது ராஜபக்‌ஷ குடும்ப ஆட்சிதான் இந்த நாட்டிற்கு சாபக்கேடாக அமைந்துவிட்டது. இந்த குடும்பம் நாட்டின் பொருளாதார வளங்களையும் செல்வங்களையும் சூறையாடி வெளிநாடுகளில் முதலீடுகளை செய்து தங்களது குடும்பத்தின் பொருளாதார வளத்தை செழுமைப்படுத்தியதாக புரிந்துகொள்ள ஆரம்பித்தனர். படிப்படியாக வாழ்க்கைச்செலவு உயர்வடைந்தது. இலங்கை மத்திய வங்கியில் இருக்க வேண்டிய ஐக்கிய அமெரிக்க டொலர்களிலான விசேட ஒதுக்கு முற்றாக காலியாக்கப்பட்டிருந்ததை உணர்ந்தனர்.

அதன் பின்னரே, ஏப்ரல் 03ஆம் திகதி ராஜபக்‌ஷ குடும்பத்திற்கு எதிராக வீதிக்கு இறங்கினர். அதுவும் மஹிந்த ராஜபக்‌ஷவை இந்த நாட்டின் 'தந்தை' என்றும் 'மஹிந்த மாமா' என்றும் நேசித்து வந்த பெரும்பான்மை சிங்கள மக்களே இந்த குடும்ப ஆட்சிக்கு எதிராக வீதிக்கு வந்து 'மஹிந்த குடும்பம் போ' என்று போராட்டத்தை ஆரம்பித்தனர். தற்போதைய நிலையில், புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ரணில் விக்ரமசிங்கவும் அதே மஹிந்தவின் குடும்ப நண்பர்களாக இருந்த பலரை புதிய அமைச்சரவையிலும் சேர்த்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருக்கின்றார். இவர்களில் பலர் கடந்த 2005ஆம் ஆண்டிலிருந்து இதே மஹிந்த குடும்ப ஆட்சியில் பல முறை அமைச்சர்களாக இருந்து வெவ்வேறு வழிகளில் இந்த நாட்டை சூறையாடியவர்களாக உள்ளனர்.

2015 – 2019ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் ரணிலும் மைத்ரிபால சிறிசேனவும் இணைந்து நடத்திய நல்லாட்சியிலும் இதேபோன்ற திருட்டு கும்பல் அமைச்சர்களாக பதவியில் இருந்தனர். அதன் காரணமாக அப்போதைய சூழ்நிலையிலும் அதற்கு முற்பட்ட கால ஊழல்கள், சூறையாடல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் போயிற்று. அப்போதைய பிரதமராக இருந்த ரணிலும் ஜனாதிபதியாக இருந்த மைத்ரிபால சிறிசேனவும் இணைந்து இந்த திருட்டு அமைச்சர் கும்பலையும் மஹிந்த குடும்பத்தையும் பாதுகாத்தனர் என்ற வெறுப்பும் அதிருப்தியும் இந்த நாட்டு மக்கள் மனங்களில் ஆழமாக பதிவாகி இருக்கின்றது. 2015ஆம் ஆண்டும் மக்கள் இந்த மஹிந்த குடும்பத்தில் வெறுப்படைந்தே புதிய மாற்றம் ஒன்றை நாடி வாக்களித்து மைத்ரியை ஜனாதிபதியாகக் கொண்ட ஆட்சி மாற்றம் ஒன்றிற்கு வழிவகுத்தனர்.

ஆனாலும், அந்த ஆட்சியில் மக்கள் முழுமையாக ஏமாற்றப்பட்டனர். அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மைத்ரி, பிரதமராக இருந்த ரணில் ஆகிய இருவருக்கும் அதற்கு முற்பட்ட கால ஊழல்களுக்கும் சூறையாடல்களுக்கும் எதிராக ஒருவரைக் கூட தண்டிப்பதற்கான ஆளுமையோ முதுகெலும்போ இருக்கவில்லை. பின்னர் நடந்ததென்ன என்றால் அதே மஹிந்த குடும்பம் மீண்டும் ஆட்சியை கைப்பற்றும் நிலை உருவாகியது. அதே நிலை எதிர்வரும் ரணிலின் இரண்டு வருட காலப்பகுதியிலும் ஏற்படக்கூடாது. துரத்தப்பட்ட கோட்டாபயவும் மஹிந்தவும் மீண்டும் மக்கள் ஆதரவை கட்டியெழுப்பி, இந்த நாட்டில் அரியணை ஏறும் நிலையை ஜனாதிபதி ரணில் தோற்றுவித்தால் அதுபோன்ற துர்ப்பாக்கிய நிலை வேறு இருக்க முடியாது.

தற்போதைய நிலையில் ரணிலின் முதலாவது நடவடிக்கை பாதாளத்தில் விழுந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்ப தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அசுர வேகத்தில் உயர்வடைந்துள்ள அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். நாட்டில் நிலவும் பெற்றோல், டீசல் தட்டுப்பாடு காரணமாக பாரிய நெருக்கடி நிலை உருவாகி இருக்கின்றது. அனைத்து வகையான பொருட்கள் மற்றும் சேவைகளதும் விலைகள் உயர்வடைய பிரதான காரணம் இந்த எரிபொருள் தட்டுப்பாடாகும்.

அனைத்து விதமான சேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்றன. கல்வி, மருத்துவ, சுகாதார, பொதுப் போக்குவரத்து, அரச நிர்வாக சேவைகள் அனைத்தும் இயங்காமல் உள்ளன. இந்த நிலையை சரிசெய்ய வேண்டும். அதற்கு தேவையான அமெரிக்க டொலர்களை நாட்டிற்குள் கொண்டுவர தேவையான நடவடிக்கைகளை எடுத்தால் ஓரளவிற்கு பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண முடியும். வெறுமனே நாட்டிற்குள் டொலர் வரும் துறை என்று உல்லாசப் பிரயாணத்துறையை மாத்திரம் நம்பி இருக்காது தற்போது விழுந்துள்ள நாட்டின் முதுகெலும்பாக உள்ள ஏற்றுமதித் துறைகளை மீண்டும் ஊக்குவித்து முன்னேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக, மஹிந்த குடும்பத்தின் ஊழல்களை கண்டுபிடித்து சூறையாடியதாக கூறப்படும் பில்லியன் கணக்கிலான தேசிய செல்வத்தை மீளப்பெற நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனாலும் மஹிந்த குடும்பத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் பாரிய சவாலை சந்திக்க வேண்டியிருக்கின்றது. ஆட்சியில் பங்காளிகளாக இருக்கின்ற பொதுஜன பெரமுன கட்சியில் உள்ளவர்கள் அனைவரும் மஹிந்தவின் நலனையும் ஆதரவையும் பெற்ற அவர்களின் நலன் காக்கும் கூட்டமாகும். 2015 – 2019 காலத்தில் மஹிந்த குடும்ப ஊழல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவிடாமல், அப்போதைய அமைச்சரவையில் இருந்த 13 அமைச்சர்கள் எவ்வாறு மைத்ரியை தடுத்தார்களோ அதேபோன்று இந்த அமைச்சரவையிலும் இருப்பவர்கள் ஒருபோதும் மஹிந்த குடும்பத்தை தண்டிக்க விடமாட்டார்கள். இந்த சவாலை ரணிலால் உடைத்தெறிய முடிந்தால் நாட்டை சுபீட்சத்தை நோக்கி நகர்த்துவது இலேசாக அமையலாம்.


இன, மத அடிப்படையில் பின்புல அரசியல் நோக்கத்தை வைத்துக்கொண்டு நாட்டை கூறுபோடும் தந்திரோபாயங்களை கைவிட்டு இந்த நாட்டில் வாழும் எல்லா மக்களையும் அரவணைத்துச் செல்லும் நிலை உருவாக வேண்டும். கடந்த காலப்பகுதியில் இந்த நாடும் ஆட்சியும் தனிச் சிங்களவர்களுக்கே என்ற ஆட்சித் தத்துவம் பலமடைந்திருந்ததால் இனவாதத்தையும் மதவாதத்தையும் ஆயுதமாக வைத்துக்கொண்டும் அப்பாவி சிங்கள மக்களது கண்களில் மண்ணைத் தூவி குருடாக்கிவிட்டே ஆளும் வர்க்கம் இந்த நாட்டின் வளங்களை படிப்படியாக சூறையாடும் வேலையை செய்தது. அதற்காக பணம் கொடுத்து சிலரை வைத்துக்கொண்டிருந்தனர். அதில் முக்கியமானவர்கள் தேசப்பற்றாளர்கள் என்று கூறிக்கொண்ட பிக்குமார் கூட்டமாகும்.

தொடர்ந்து ரணிலும் இப்படிப்பட்ட போக்கிரித்தனமான அமைச்சர்கள், காடையர்களது ஆலோசனை வழிகாட்டல்களை பின்பற்றினால் ரணிலையும் இந்த குறுகிய காலத்திற்கான தற்காலிக அரசாங்கத்தையும் மக்கள் வீதிக்கு இறங்கி துரத்தும் காலம் வெகு தூரத்தில் இருக்காது. இந்த நிலையில் மஹிந்த குடும்பத்தின் எழுச்சி, வீழ்ச்சி இரண்டிலும் ரணில் தகுந்த பாடத்தை கற்றுக்கொண்டவராக அடுத்துவரும் இரண்டு வருட காலத்தை சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டால் ரணிலால் மீண்டும் இழந்துபோன செல்வாக்கையும் கௌரவத்தையும் ஈட்டிக்கொள்ள முடியும் என்பதில் சந்தேகம் இல்லை.

ரணிலுக்கு நாட்டை கொள்ளையடித்து சுகபோகம் அனுபவிப்பதற்கு பிள்ளை குட்டிகளை கொண்ட பரந்து விரிந்த குடும்பம் இல்லை. குடும்ப ஆட்சியை ஏற்படுத்த மஹிந்த குடும்பத்திற்கு இருந்தது போன்ற விசாலமான குடும்பமும் இல்லை. 2015ஆம் ஆண்டு இதே ரணிலால் சிபாரிசு செய்யப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்ட அர்ஜூன மஹேந்திரன் அவரது மருமகனின் பேர்பச்சுவல் ட்ரசரீஸ் என்ற நிதிக் கம்பனி ஊடாக இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி ஏல விற்பனை காரணமாக சுமார் 1300 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பாரிய ஊழலை செய்தார்.

இறுதியில் அந்த ஊழல் குற்றச்சாட்டு அப்போதைய பிரதமராக இருந்த ரணிலின் தலையில் விழுந்தது போன்று இந்த குறுகிய காலப்பகுதியிலும் கண்மூடித்தனமான ஆட்சி அதிகார பிரயோகம் நடக்கக்கூடாது. சிறந்த பொருளாதார வல்லுநர்கள், அரசியல் ஆலோசகர்கள் ஜனாதிபதியின் அருகில் இருக்கவேண்டும்.

கோட்டாபய ராஜபக்‌ஷ இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமித்த அஜித் நிவாட் கப்ரால் போன்ற நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கிய அறிவீனர்களில் இருந்தும் தூரமாகி, நாட்டின் நலனை கருத்தில்கொண்டு செயற்படக்கூடியவர்களை ஆலோசகர்களாகவும் வழிகாட்டிகளாகவும் கொண்டு திட்டங்களை முன்னெடுத்தால் எதிர்வரும் இரண்டு வருடங்களில் இந்த நாட்டை அரசியல், பொருளாதார சுபீட்சத்தை நோக்கி முன்கொண்டு போகலாம். அதுவே ரணிலின் இலட்சியமாக அமைய வேண்டும்.






# நுவரெலியா பரிசுத்த திரித்துவ தேவாலயத்தின்




## 170ஆவது ஆண்டு நிறைவு

**நுவரெலியா எஸ்.கே.குமார்**




நுவரெலியாவை ஆட்சிசெய்த பிரித்தானியர்களால் முதன்முதலாக நுவரெலியாவில் அமைக்கப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த நுவரெலியா பரிசுத்த திரித்துவ தேவாலயத்தின் 170ஆவது ஆண்டு நிறைவு எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆலய பங்குத்தந்தை வணக்கத்துக்குரிய அருட்தந்தை சார்ள்ஸ் டேவிட் தலைமையில் நடைபெறும். அன்று நடைபெறும் நன்றிக்கடன் ஆராதனைகள் தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் நடைபெறும்.

1847ஆம் ஆண்டு இங்கிலாந்து திருச்சபையின் 15ஆவது படைப்பிரிவை சேர்ந்த மேஜர் ஜேம் பிங்கார் மேற்பார்வையின் கீழ், இந்த ஆலயத்தின் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, 1852ஆம் ஆண்டு ஸாப்மேன் ஆசீர்வாதத்துடன் திறந்து வைக்கப்பட்டது.

அந்த காலத்தில் இது ஒரு வரலாற்று கட்டிடமாக திகழ்ந்தது. நுவரெலியாவில் பழமைவாய்ந்த உள்ளூர் 'ஹில் கிளப்'இன் முன்னாள் உறுப்பினர்கள் இந்த ஆலயத்திற்கு அருகிலுள்ள மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டிருப்பதால், தேவாலய முற்றம் மற்றும் தோட்டத்தின் பராமரிப்புப் பணிகளில் ஹில் கிளப் நிர்வாகம் ஆர்வம் காட்டியுள்ளது.

இலங்கை கடந்த 1948ஆம் ஆண்டு சுதந்திரம்பெற்ற பின், இலங்கையில் பெருந்தோட்டங்களை நிர்வகித்து வந்த பிரித்தானியர்கள் வெளியேறிய பின் இங்கு இருந்த கழகங்கள் மற்றும் தேவாலயங்களில் எதிர்பார்க்கக்கூடிய மாற்றங்கள் ஏற்பட்டன. அந்த வேளையில் இந்த ஆலயமும் பாரியளவில் மாற்றம் பெற்றது. இந்த ஆலயம் பெரும்பாலும் பிரிட்டிஷ்காரர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான கடுமையான யாப்பு விதிகளில் இருந்தன. அந்த நேரத்தில் இந்த தேவாலயத்தின் வார்டனாக நியமிக்கப்பட்டிருந்த லம்பேர்ட் பெரேராவுக்கு அத்தகைய ஒரு யாப்பு விதி வெறுக்கத்தக்கதாக இருந்தது.

இது வார்டன்கள் மற்றும் சபையின் முக்கியமான உறுப்பினர்கள் என்று அழைக்கப்படுபவர்களுக்கு விசேடமாக ஒதுக்கப்பட்ட இருக்கையில் வேறு எவரும் அமரமுடியாது. இது ஒரு சர்வாதிகார விதிமுறை. தேவாலயத்தில் ஒரு இருக்கையை முன்பதிவு செய்யும் திறன் விரும்பத்தகாதது. லம்பேர்ட் பெரேராவின் வாதம் என்னவென்றால், "பரலோகத்தில் யாரும் இருக்கையை முன்பதிவு செய்ய முடியாது. எனவே, தேவாலயத்தில் ஒரு இருக்கையை யாரும் முன்பதிவு செய்ய ஏன் அனுமதிக்க வேண்டும், விதியை மாற்ற வேண்டும்?" என வற்புறுத்தியதையடுத்து, யாப்பு விதிமுறை மாற்றியமைக்கப்பட்டது. எவரும் எந்த இருக்கையிலும் அமரலாம்.

1847ஆம் ஆண்டு ஆலய கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, 1852ஆம் ஆண்டு ஆண்டவனின் ஆசீர்வாதத்துடன் திறக்கப்பட்டு, 1896ஆம் ஆண்டில் இந்த ஆலயம் மீண்டும் புனரமைக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டது. இந்த ஆலயம் கடந்த 1852ஆம் ஆண்டுமுதல் கடந்த 1950ஆம் ஆண்டுவரை இங்கிலாந்து திருச்சபையால் நிர்வகித்த காலத்தில் ஆங்கிலேயர்கள் மாத்திரமே பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டனர். கடந்த 1950ஆம் ஆண்டு இலங்கை திருச்சபை பொறுப்பேற்ற பின் இவ்வாலயத்திற்கு தமிழர்களும் சிங்களவர்களும் வருகைதர தொடங்கினார்கள். தற்பொழுது பெருந்தோட்டத் தொழிலாளர்களும் பெருந்தொகையானோர் வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது. தற்பொழுது ஆலயத்தில் ஆராதனைகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் மொழிகளில் நடைபெறுகின்றன.

இதனைத்தொடர்ந்து, கடந்த 1954ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்த எலிசபெத் மகாராணியும் அவரின் கணவருமான டியுக் ஆகியோர் இந்த ஆலயத்திற்கு விஜயம்செய்தபோது எலிசபெத் மகாராணியால் வழங்கப்பட்ட ஞாபகார்த்த கண்ணாடி ஜன்னல் சின்னமும் இந்த ஆலயத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. அத்தோடு, ஆதியும் அந்தமும் என்ற அடையாளத்தோடு, மூன்று வர்ணங்கள் தீட்டப்பட்ட அடையாள கண்ணாடிகளும் இந்த ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

நுவரெலியாவிற்கு முதன்முதலில் விஜயம் செய்த சேர்.சாமுவேல் பேக்கர் என்பவரின் சடலத்தை கடந்த 1853ஆம் ஆண்டில் நல்லடக்கம் செய்த கல்லறையும் இந்த ஆலயத்திற்கு அருகிலுள்ள மயானத்தில் அமைக்கப்பட்டிருப்பதையும் இப்பொழுதும் பார்வையிடலாம். அத்தோடு முதலாம், இரண்டாம் உலக யுத்தத்தில் மரணமடைந்த இராணுவ வீரர்கள், பொதுமக்கள் மற்றும் இங்கு வார்டனாக இருந்த லம்பர்ட் வில்சன் பெரேரா மற்றும் அவரின் மனைவி டெலிசியா பெரேரா ஆகியோரின் சடலங்களும் இந்த ஆலயத்திற்கு அருகிலுள்ள மயானத்தில் புதைக்கப்பட்டு, கல்லறைகள் கட்டப்பட்டுள்ளதை இன்றும் பார்வையிடலாம்.

இந்த ஆலயத்தில் விசேட அம்சமாக, இரண்டு முறை எலிசபெத் மகாராணி விஜயம் செய்து, கண்ணாடியை உறுக்கி வர்ணம் தீட்டப்பட்ட இரண்டு ஞாபகார்த்த சின்னங்கள் இன்றும் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. அதேபோல, 150 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த ஹோகன் (பியானம்) என்ற இசைக்கருவி இன்றும் செயலில் இருப்பதை பார்வையிடலாம். இந்த ஆலயத்தை 1852ஆம் ஆண்டு முதல் பத்தலோ மிஸ், திருமதி பிரன்சிஸ்காப்பில்ல, சேர் என்ரு கெல்டி கொட், கெனம் ஆர்.எஸ்.டி.டி.சேரம் ஆகியோர் பராமரித்து வந்துள்ளார்கள். இவர்களைத் தொடர்ந்து, 1950ஆம் ஆண்டிற்கு பின் இலங்கையை சேர்ந்த இலங்கை திருச்சபை நிர்வாகத்தின் கீழ் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த 1950ஆம் ஆண்டிற்கு பின் இலங்கை திருச்சபையைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய அருட்தந்தைகளான மத்தாயி டி சில்வா, கிறேம் கெம்பல், கெனம் ஆர்.எஸ்.டி.டி.சேரம், கே.எஸ்.டி.மாணிக், சீ.ஈ.கொட்வின் வீரசூரிய, ஜே.வி.எஸ்.டேனியல், சீ.எம்.ஜே.டேவிட், சுரேஷ் டேவிட், சத்ராஜ், ஹசான் டி மெல் அவர்களைத்தொடர்ந்து தற்பொழுது வணக்கத்துக்குரிய அருட்தந்தையான சார்ள்ஸ் டேவிட் பராமரித்து வருகின்றார்.

நுவரெலியாவில் தற்பொழுது இயங்கிவரும் நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரியும் ஆரம்பத்தில் இந்த ஆலய திருச்சபையினால் நிர்வகிக்கப்பட்டது. கடந்த 1962ஆம் ஆண்டில் தான் இந்த பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்று, அரசாங்கப் பாடசாலையாக இயங்கத் தொடங்கியுள்ளது. இந்த பரிசுத்த திரித்துவ தேவாலயம் சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்த ஆலயமாக இன்றும் திகழ்கின்றது. உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெருந்திரளானோர் இந்த ஆலயத்தையும் இந்த ஆலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள கல்லறைகளையும் பார்வையிட வருகை தருவதும் குறிப்பிடத்தக்கது.

---

**கலந்துரையாடியவர் - இக்பால் அலி**

# முறைசாரா தொழில்துறையில் பணிபுரியும் பெண்களும் அடிப்படைப் பிரச்சினைகளும்






பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் பொதுச் செயலாளர் பி.லோகேஸ்வரி 'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய செவ்வி

பெண்கள் ஒத்துழைப்பு முன்னணி, ஆசிய மன்றத்தின் பெண்கள் குரல் வேலைத்திட்ட உதவியுடன் மலையக பகுதிகளிலிருந்து உள்ளூரில் புலம்பெயர்ந்து முறைசாரா துறைகளில் தொழில்புரியும் பெண் தொழிலாளர்களை வலுவூட்டல் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தினூடாக மலையகத்திலிருந்து புலம்பெயர்ந்து தொழில்புரியும் பெண்தொழிலாளர்களை தெரிவுசெய்து அவர்கள் பற்றிய ஆய்வை மேற்கொண்டது. அவ்வாய்வின் மூலம் அப்பெண்கள் எதிர்நோக்கும் தொழில்ரீதியான பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டன.

அவ்வாய்வின் அடிப்படையில் முறைசாரா பெண்தொழிலாளர்களுக்கான கொள்கைத் திட்டமிடலை உருவாக்கியுள்ளது. இக்கொள்கைத் திட்டமிடலை அரச அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள், புத்திஜீவிகள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் பகிர்ந்துகொள்வதோடு, நியாயப்பிரசார நடவடிக்கையில் பெண்கள் ஒத்துழைப்பு முன்னணி ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**முறைசாராத்துறையில் பணிபுரியும் பெண் தொழிலாளர்கள் பற்றி கூறுவீர்களா?**

முறைசாரா பொருளாதாரம் என்பது அரசின் கட்டுப்பாடு, பாதுகாப்பிற்குள் வராத பல்வகைப்படுத்தப்பட்ட பொருளாதார செயற்பாடுகள், நிறுவனங்கள், தொழில்முயற்சிகள் மற்றும் தொழிலாளர்களை குறிக்கும். முதலில் இக்கருத்தியல் சிறிய பதிவுசெய்யப்படாத சுயதொழில்களை குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்டது. எனினும், இன்றளவில் பாதுகாக்கப்படாத முயற்சிகளில் தொழிலுக்கான வேதனத்தை குறிக்கும் அளவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டில் இடம்பெயர்ந்து முறைசாரா தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களில் பெரும்பாலானோர் அடிமட்ட சாதாரண தொழில்களில், வீட்டு வேலைகள் மற்றும் ஏனைய சேவைகளிலும் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

**பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் பங்களிப்பு என்ன?**

பெருந்தோட்ட மற்றும் அண்மிய கிராமப்புறங்களில் இருந்து முறைசாரா துறையில் தொழில்புரியும் பெண்களை கவனத்தில்கொண்டுள்ளது. 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களை தெரிவுசெய்து அவர்களின் சம்மதத்துடன் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆய்வுசெய்வோம். இதன் வேலைத்திட்டத்தை கண்டி மாவட்டத்தின் 07 தேயிலைத் தோட்டங்களையும் அதனை அண்மித்துள்ள 03 கிராமங்களையும் சேர்த்து 200 பெண்கள் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டார்கள். முறைசாராத்துறை தொழில்களில் ஈடுபட்டுள்ள பெருந்தோட்ட கிராமப்புற பெண்தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதே எமது அடிப்படை நோக்கமாகும்.

பெருந்தோட்டங்களில் ஏறத்தாழ 50வீதத்திற்கு அதிகமானவர்கள் வெளியில் நகர்ப்புற மற்றும் கிராமங்களில் அடிமட்டத் தொழில்களில் நாட்கூலிகளாக பணிபுரிகின்றார்கள். குறிப்பாக கொழும்பு, கண்டி போன்ற பிரதான நகரங்களில் கடைகள், ஹோட்டல்கள், ஆடையகங்கள், பெரும் உணவு உறைவிட வழங்கு நிலையங்கள், உணவு விற்பனை சேவை நிலையங்கள், ஆடைத்தொழிற்சாலைகள், உபசரிப்புக்கூடங்கள், உடற்பிடிப்பு நிலையங்கள் மற்றும் வீட்டு வேலை தொழிலாளர்களாக, வீதி வியாபாரிகளாக மற்றும் ஆண்கள் கட்டுமானத்துறையிலும் பணிபுரிகின்றனர்.

முறைசாராதுறை பணியாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள் குறித்த காரணிகள் சில அடையாளம் காணப்பட்டுள்ளன. முதலாளி – தொழிலாளி உறவு பெரும்பாலும் எழுதப்படாத மற்றும் முறைசாராததாகும். தொழில்துறை உறவுகள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகள் பற்றி குறைவாகவே மதிக்கப்படுகின்றன.

பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் கடந்தாண்டு ஆய்வின்படி, தோட்டப் பகுதிகளில் உள்ள முறைசாராத்துறையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்து வேலைசெய்யும் பெரும்பாலான பெண் தொழிலாளர்கள், வீடுகள், விவசாயப் பண்ணைகள், கீழ்நிலைத்தொழில்களிலும் மற்றும் சிறு தேயிலைத்தோட்டங்களிலும் நாட்கூலிக்கு பணிபுரிய நேர்ந்துள்ளதாக கூறினார்கள். குறிப்பாக, கர்ப்பிணிப் பெண்களினால் 08 அல்லது 09 மணித்தியாலயங்கள் தொடர்ச்சியாக வேலை செய்யவோ அல்லது சிறு தேயிலைத்தோட்டங்களில் 15 - 20 கிலோ கொழுந்து நிரப்பப்பட்ட பைகளை சுமந்து செல்ல முடியாது. எனினும் அவர்கள் அத்தொழில்களை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

**இத்தொழில்துறையில் ஈடுபடும் தொழிலாளர்கள் பற்றி மதிப்பீடுகளை செய்துள்ளீர்களா?**

நிச்சயமாக. பங்குபற்றுனர்களில் 38.5 விகிதமான பெண்கள் முறைசாராத்துறை விவசாய அல்லது நாட் சம்பளத் தொழிலாளர்களாவர். அவர்கள் தனியார், சிறு தோட்டங்களில் தோட்ட சுத்திகரிப்பாளர்களாக, கொழுந்து பறிப்பவர்களாக, புல்வெட்டுதல் போன்ற அடிமட்ட வேலைகளில் மற்றும் காய்கறித் தோட்டங்களில், வீட்டு வேலை உதவியாளராக ஈடுபடுத்தப்படுகிறார்கள். 35 விகிதத்தினர் ஆடைத் தொழிற்சாலைகளிலும், கடை, உணவகங்களிலும் வேலைசெய்கிறார்கள். க.பொ.த. சாதாரண தரம் வரை படித்த இளம் பெண்களில் பலர் கண்டி, கொழும்பு போன்ற அல்லது அண்மிய நகரங்களில் ஆடைத்தொழிற்சாலைகளில் அல்லது கடைகளில் வேலை செய்வதை விரும்புகின்றார்கள். 16.5 விகிதமான பெண்கள் வீட்டு வேலைகளில் சமைத்தல் மற்றும் பிள்ளைகள், வயோதிபரை பராமரிப்பவர்களாக இருக்கின்றார்கள்.

விருப்பு வெறுப்போடு தொழில்புரியும் தொழிலாளர் குறித்த, குழு கலந்துரையாடல்கள் மற்றும் நேர்காணல்களின்படி, பெரும்பாலான முறைசாரா பெண் தொழிலாளர்கள் பணியிடங்களில் நெகிழ்ச்சி தன்மையற்ற சூழ்நிலையில் வேலை செய்கிறார்கள். 70வீதமான தொழிலாளர்கள் தங்கள் பணிச்சூழலுக்கு விரும்பாதவர்களாக உள்ளனர். முறைசாராத்துறை தொழிலாளர்கள் குறைந்த ஊதியத்தில் பணிபுரிந்தாலும், பொருளாதாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தாலும், அவர்களின் வேலை மற்றும் நலன் பாதிக்கப்படும்போது கூட அவர்கள் முடிவெடுப்பதில் பங்கேற்க வாய்ப்பில்லை.

**இப்படிப்பட்ட முறைசார்பற்ற ஊழியர்கள் வருமானம் பற்றாக்குறை மற்றும் வறுமை நிலைக்கு ஆளாக வேண்டிய நிலைமை ஏற்படலாம் அல்லவா?**

கலந்துரையாடல்களின் அடிப்படையில் அநேகமான பிரச்சினைகள் வறுமையுடன் தொடர்புடையவையே. சிறுவர்கள், பெண்கள் மத்தியில் காணப்படும் போஷாக்கின்மை முறைசார் கல்வி குறைபாடு, குடும்ப தகராறுகள், பெண்களின் புலம்பெயர்தல் மற்றும் இளைஞர் யுவதிகளின் மோசமான நடத்தைமாற்றம் போன்ற அனைத்தும் வருமானம் போதாமையுடன் தொடர்புடையனவாக காணப்படுகின்றன. பெரும்பாலான பெண்கள் முறைசாராத்துறையில் நாட்சம்பள அடிப்படையில் வேலைக்குச் சேர்ந்ததாக கூறினார்கள்.

குறிப்பாக, கர்ப்பிணிப் பெண்களால் கடுமையான வேலைகளில் தொடர்ச்சியாக 8-10 மணிநேரங்கள் ஈடுபடமுடியாது. அதேபோன்று தேயிலைத் தோட்டங்களில் 18-20 கிலோ கொழுந்தை சுமக்க முடியாது. எனினும், அவ்வேலைகளை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். வேலை நேரத்தின் பின்னர் ஆண் தொழிலாளர்கள் ஓய்வெடுக்கின்றார்கள். அதேவேளை, பெண்கள் வீடுகளிலும் இரவுகளில் வெகுநேரம் பணியாற்ற வேண்டியுள்ளதால் அவர்கள் முதுகுவலி போன்ற கடுமையான நோய்களுக்கு ஆளாகின்றார்கள். இவற்றுள் சில குடும்பங்களில் இளவயதினர் இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் தொழில்களற்றவர்களாய் இருக்கின்றார்கள். கலந்துரையாடல்களில் கலந்துகொண்ட பெரும்பாலான தாய்மார் கொவிட் 19 பின்னணியில் அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி பெரிதும் கவலையடைந்துள்ளமை தெரியவந்துள்ளது. சில இளம் பெண்கள் ஆடைத்தொழிற்சாலையில் தொழிலை பெற்றுக்கொண்ட போதிலும் கொவிட் தொற்றின் பின்புலத்தில் தொழிலின்மை, தொழிற்பாதுகாப்பின்மை மற்றும் பாலடிப்படையிலான நெருக்கடிகள் போன்ற சில பிரச்சினைகள் எழுந்துள்ளன.

**உங்கள் ஆய்வில் வேறு பிரச்சினைகள் இனங்காணப்பட்டனவா?**

தொழில் தருணர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையிலான பிரச்சினைகளுள் மொழியும் ஒன்றாக இனங்காணப்படுவதுடன், வேலைத்தள சிறுமுரண்பாடுகளும் காரணியாகும். பங்குபற்றுனர்களின் கருத்துப்படி, குறிப்பாக பெருந்தோட்ட முறைசாராத்துறை பெண் தொழிலாளர்கள் தமிழ் பேசுபவர்கள் எனவும் வேலைத்தளங்களில் சிங்களத்தில் பேசுவதில் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் குறிப்பிட்டார்கள்.

**இதுதொடர்பில் நீங்கள் முன்வைக்க விரும்பும் பரிந்துரைகள் எவை?**

முறைசாராத்துறை தொழிலாளர்களுக்கு தொழில் உரிமை, சட்டங்கள் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல், முறைசாராத்துறை பெண் தொழிலாளர்கள் தங்களின் தொழிலாளர் உரிமைகளை தொழில்துறைகளில் உறுதிப்படுத்துவதற்காக, தொழிலாளர் இயக்கங்களை வலுப்படுத்தவேண்டும், முறைசார்ந்ததுறை தொழிலாளர்களுக்கு வாழ்க்கை சம்பளத்தர அடிப்படையிலான வேதன முறையை அபிவிருத்தி செய்தல், அரசும், அரசசாரா நிறுவனங்களும், பெருந்தோட்ட பிரதேச முறைசாராத்துறை தொழிலாளர் அனுசரணையுடன் அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல், சட்டவரைபு மற்றும் செயற்றிட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

தொழிற் சட்டங்களானவை : செயற்பாட்டு பாதுகாப்பு, சுகாதாரம், தொழிற்சங்க உரிமைகள், பாதுகாப்பு சட்டங்கள், பெண்கள் சில தொழில்களில் ஈடுபடுத்தப்படுவதை தடுக்கும் ஏற்பாடுகள், பாலடிப்படை வன்முறைகளை தடுப்பதற்கான முறைகள் போன்றவை உள்வாங்கப்படவேண்டும்.

## அரசியல் தலைவர்களின் போக்கினால்

# கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போராடும் இலங்கை முஸ்லிம்கள்!

**நூருல் ஹுதா உமர்**

இலங்கை வரலாற்றில் புதிய அத்தியாயம் எழுதப்பட்டுள்ளது. கஷ்டங்களினாலும், நெருக்கடிகளினாலும் அவதியுற்று மக்கள் பொறுமையிழந்து வீதிக்கு இறங்கினால் முடிவு என்னாகும் என்பதை உலகுக்கே எடுத்துக்காட்டிய மிகப்பெரும் போராட்டமாக அமைந்தது "கோ ஹோம் கோட்டா" போராட்டம். கோட்டாபய எனும் பெயரை கேட்டால் பெரியவர்களே சற்றுப் பயப்படும் காலம் மறைந்துபோய் சிறியவர்களே "கோ ஹோம் கோட்டா" என்று கோஷமெழுப்பும் காலம் எம்மை மிக அண்மையில் கடந்துபோயுள்ளது. இதனால் நிரந்தர இடமின்றித் தவிக்கும் நிலைக்குச் சென்றுள்ளார் எமது தேசத்தின் 69 இலட்சம் மக்களின் மனதை வென்ற முன்னாள் ஜனாதிபதி நந்தசேன கோட்டாபய ராஜபக்ஷ. புலிகளை ஓடவிட்டு யுத்தம் செய்தவர், காலத்தின் கொடுமையால் தானே நாட்டை விட்டுத் தப்பியோடும் நிலைக்கு வந்தார். இதனால் அவரின் பதவி வெற்றிடத்திற்கு பலகோண போட்டி நிலவி, இந்த வார நடுவில் ஒரு முடிவும் காணப்பட்டுள்ளது. ஆனாலும் அந்த முடிவு எவ்வளவு தூரம் நிலைத்து நிற்கும் என்பது காலத்தின் கையிலேயே உள்ளது.

மாம்பழம் காத்திருந்தவனுக்கு பலாப்பழம் கிடைத்த கதையாக அமைந்ததுதான் இந்த ஜனாதிபதித் தெரிவு. 225 எம்.பிக்களை கொண்ட நாடாளுமன்றத்தில் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த பல மொழி பேசும் பல இனங்களையும்கொண்ட எம்.பிக்கள் இருக்கிறார்கள். அதில் முஸ்லிம் எம்.பிக்கள் இந்த வாய்ப்பை எப்படி பயன்படுத்தி முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைப் பெற்றுக்கொண்டார்கள் எனும் மிகப்பெரிய கேள்வி எம்மத்தியில் உள்ளது. வரலாறு நெடுகிலும் வாய்ப்பிருந்தும் கிடைக்கும் வாய்ப்புகளை தவற விட்டுவிட்டு கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்று கதையளக்கும் முஸ்லிம் தலைமைகள் இந்த வாய்ப்பையும் கோட்டைவிட்டுள்ளமை மிகப்பெரும் கவலையான விடயமாகும்.

இலங்கையில் ஏறத்தாழ இரண்டு கோடி மக்கள் வாழ்கின்றனர். அதில் 9.7 வீதம் முஸ்லிம்களாகும். (2012 ஆண்டின் கணக்கெடுப்பின்படி) இலங்கை முஸ்லிம்களுக்கு 1300 வருடத்துக்கு மேற்பட்ட வரலாறு உண்டு என நிறையச் சான்றுகள் உள்ளன. இப்படியான இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஏராளம்.

வரலாற்று நெடுகிலும் இலங்கை முஸ்லிம்கள் பல இன்னல்களைச் சந்தித்து வந்துள்ளனர். ஆங்கிலேயர்கள், இந்த உலகம் தொடர்ந்தும் தங்களையே சார்ந்திருக்க வேண்டும் என்பதற்காக தாங்கள் ஆண்ட பூமி எங்கும் பிரித்தாளும் தந்திரத்தைப் பரப்பிவிட்டுத்தான் அந்த நாடுகளைவிட்டு வெளியேறினர். அவர்கள் தூண்டிவிட்ட இனத்தை மற்றும் மதத்தை அடிப்படையாகக்கொண்ட நச்சு விதை நாளாந்தம் வளர்ந்து விஸ்வரூபம் எடுத்துக்கொண்டிருக்கின்றது. இலங்கையையும் அது விட்டுவைக்கவில்லை. அதன் தொடர்ச்சியாக நடந்த கலவரங்கள் இதற்கு உதாரணங்களாகும். சிங்கள இனவாதிகள் செய்த அநியாயங்கள் பற்றி பேசும்போது வரலாற்றில் புலிப் பயங்கரவாதிகள் செய்த அநியாயங்களையும் மறக்காமல் பதிவுசெய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் நல்லூர் கோவிலைச் சுற்றி வாழ்ந்த முஸ்லிம்களுக்கு நடந்த அநியாயத்தில் தொடங்கி புலிப் பயங்கரவாதிகள் செய்த அநியாயங்கள்வரை அத்தனையும் வரலாற்றில் மறக்கமுடியாத தடயங்களாகும். அதனைத் தாண்டி அண்மைக்காலமாக பொதுபலசேனா என்ற பௌத்த தீவிரவாத அமைப்பு, ஏனைய பௌத்த தீவிரவாத அமைப்புகளுடன் இணைந்துகொண்டு முஸ்லிம் விரோத பிரசாரத்திலும் நடவடிக்கையிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. இவர்களை ஆட்சியாளர்கள் செங்கம்பளம் விரித்து வரவேற்றார்களே தவிர, இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை. இப்படியான அரசுகளுடன் முஸ்லிம் தலைவர்கள் எவ்வித கூச்சமுமின்றி அமைச்சுகளையும், இதர சலுகைகளையும் பெற்றுக்கொண்டு தேனிலவு கொண்டாடியது எல்லோருக்கும் தெரியும்.

அரசின் அனுசரணையுடன் இயங்கியதாக நம்பப்படும் இந்த இனவாத அமைப்புகளினால் பள்ளிவாசல்கள் (மஸ்ஜித்) தாக்கப்பட்டுள்ளன, ஹலால் சான்றிதழ் கடும் சர்ச்சைக்குள்ளாக்கப் பட்டுள்ளது, அபாயா அநாகரிகமாக விமர்சிக்கப்படுகின்றது, காதி நீதிமன்றம் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது, இஸ்லாமிய வங்கி முறை பற்றி பேசப்படுகின்றது, முஸ்லிம்களின் தொழில் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றது, மொத்த முஸ்லிம் தனியார் சட்டமும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது, மொத்தத்தில் முஸ்லிம்களின் வாழ்வாதாரமே பயமூட்டப்படுகின்றது அதனையும் தாண்டி முஸ்லிம்களிடம் ஆயுதப்படை இருக்கின்றது, முஸ்லிம்களுக்கு மத்தியில் பயங்கரவாதம் வளர்கின்றது, முஸ்லிம் சனத்தொகை சடுதியாக அதிகரிக்கின்றது, மற்ற மதத்தினரை கட்டாய மதமாற்றம் செய்கின்றனர், முஸ்லிம்கள் பயங்கரவாதத்துக்குத் துணை போகின்றார்கள், முஸ்லிம்கள் இலங்கையில் எந்த நீண்ட வரலாறும் அற்றவர்கள் என பல பொய்யான பிரசாரங்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் மிகவும் திட்டமிட்டு ஊடகங்கள், மாநாடுகள், கருத்தரங்குகள், ஆர்ப்பாட்டங்கள், மூலை முடுக்கெங்கும் சுவரொட்டிகள் ஒட்டுவதன் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பில் மாறிமாறி வந்த அரசுக்கு இவ்வளவுகாலமும் முட்டுக்கொடுத்துக் கொண்டிருந்த முஸ்லிம் தலைமைகள் பேசி தீர்வைப் பெற்றுக்கொடுத்தார்களா அல்லது பிரச்சினைகளுக்கான விளக்கங்களை உரியோருக்கு வழங்கினார்களா என்ற வினாவை தொடுத்தால் பதில் இல்லை என்றோ அல்லது மிக மிகக் குறைவென்றோதான் வரும்.

பிராந்திய வல்லரசுப் போட்டியொன்று நடந்துகொண்டிருக்கின்றது. இலங்கையை தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது யார் என்பதுதான் அந்தப் போட்டி. அமெரிக்கா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளுடனான இலங்கையின் இணைப்பு இறுக்கமாகியுள்ளது. அமெரிக்கா இந்த உலகை தனக்கு சாதகமாக்க இரண்டு வழிமுறைகளைக் கையாள்கின்றது. ஒன்று சமாதானம், மற்றது சண்டை அதற்கு தனது சகல உத்திகளையும் பயன்படுத்துகின்றது. இலங்கையில் இரண்டு பொறிகளும் ஒரே நேரத்தில் இப்போது கையாளப்படுகின்றன என்பதற்கு அண்மையில் நாடாளுமன்றத்தில் நடந்துமுடிந்த ஜனாதிபதித் தெரிவுக்கான வாக்கெடுப்பு போதுமானது. மேற்கத்தைய நாடுகளின் சதிவலையில் இன்று ஒட்டுமொத்த இலங்கையர்களும் பலியாகியுள்ளோம். அதிலும் குறிப்பாக, இலங்கை முஸ்லிம்கள் பல வருடங்களாக பலியாக்கப்படுகின்றார்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அமெரிக்கா, தன் பொறிக்குள் இலங்கையை சிக்கவைப்பதற்காக இலங்கையின் சூழலை சீர்குலைக்க கொண்டுவந்துள்ள பொறிக்கும் முஸ்லிம் நாடுகளை தூரமாக்க நோர்வே செய்யும் சதிக்கும் பொதுபலசேன போன்ற கடும்வாத அமைப்புகள் துணைபோகின்றன என்பதை இலங்கை அரசியலை உன்னிப்பாக கவனிப்போர் ஏற்றுக்கொள்வர். தமிழ் விரோத கருத்தை ஆரம்பத்தில் வெளியிட்ட பொதுபலசேனா அமைப்பு இப்போது முஸ்லிம் விரோத செயற்பாட்டை நோக்கி திசை திரும்பியுள்ளது என்பதற்கு கடந்த காலம் சாட்சி. அண்மைய ஒரே நாடு ஒரே சட்டம் செயலணி முன்வைத்த அறிக்கைகளை உற்றுநோக்கினால் இவற்றை நாம் இலகுவாக அறிந்துகொள்ளலாம்.

இலங்கை அரசியலமைப்பின் 14ஆம் பிரிவு, பேச்சு, கூட்ட, சங்க, குடியேற்ற, இயக்க சுதந்திரம் பற்றி பேசுகின்றது. இலங்கை அரசியலமைப்பின் 9ஆம் பிரிவு, பௌத்த மதத்துக்கான முன்னுரிமை பற்றி பேசும் அதேநேரம், ஏனைய மத சுதந்திரத்துக்கான உத்தரவாதத்தையும் வழங்குகின்றது. மேலும் பொய்ப் பிரசாரம், மத நிந்தனை என்பனவற்றை சட்டம் குற்றம் என்கின்றது. இப்படி யாப்பு ரீதியாக உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள ஒரு சமூகத்தின் உரிமையை, ஒரு சிறு குழு கேள்விக்குட்படுத்துவதையும், சமூகங்களுக்கு இடையில் முரண்பாட்டை தோற்றுவித்து, சமூக அமைதியைக் குலைக்க முற்படுவதையும் ஒரு நீதியான அரசு ஒருபோதும் அனுமதிக்காது. ஆனால், கடந்த காலங்களில் இவை சர்வசாதாரணமாக நடந்து முடிந்தன. அரசின் முட்டுகளாக இருந்த முஸ்லிம் கட்சிகளும் இவற்றை ஊடகங்களின் முன்னிலையில் கண்டித்தனவே தவிர, உருப்படியாக எதையும் சாதிக்கவில்லை. இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பது விடயமாக புதிய ஜனாதிபதியிடம் பேசியதாக தகவலும் இல்லை.

உளவுத்துறை, முஸ்லிம்கள் இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் கிடையாது, அவர்களிடம் அத்தகு முன்னெடுப்புகள் எதுவும் இல்லை என்கின்றது. ஆனால், பொதுபலசேனா போன்ற பல பௌத்த இனவாத அமைப்பினர், முஸ்லிம்களிடம் ஆயுதக் குழுக்கள் உள்ளன என்று பொய்ப் பிரசாரம் செய்கின்றனர், முஸ்லிம் மத அனுஷ்டானங்கள், அடையாளங்களை அவமதித்து பகிரங்க மேடை போட்டுப் பேசினர். பள்ளிவாசல்களை மற்றும் வியாபாரத் தளங்களைத் தாக்கினர், இன்னும் ஒரு படி மேலே போய் கொரோனாவில் மரணித்த ஜனாஸாக்களையும் எரித்தனர், மனிதர்களையும் தாக்கினர். இதுவெல்லாம் தெட்டத்தெளிவான ஜனநாயக, மனித உரிமை மீறலாகும். இது சட்டம், ஒழுங்குப் பிரச்சினையாகும். இதைக் கட்டுப்படுத்துவது அரசின் கட்டாயக் கடமையாகும். எனவே, அரசாங்கத்துக்கு எம் பிரச்சினையை காத்திரமாய் ஒருமித்த குரலில் முன்வைக்க வேண்டும். இதை அரசு கேட்டேயாகவேண்டும் எனும் சூழலை ஜனநாயக வழிமுறைப் போராட்டத்தின் மூலம் உண்டுபண்ண வேண்டும். இதனை முஸ்லிம் சமூகம் இப்போதே செய்திருக்க வேண்டும் என்றாலும் இவற்றில் சிலவற்றை "கோ ஹோம் கோட்டா" போராட்டம் நிறைவேற்றியுள்ளது என்பது மகிழ்ச்சி.

குட்டக் குட்ட குனிந்துகொண்டிருக்க நாம் ஒன்றும் கொள்ளைப்புறத்தால் இந்த நாட்டில் குடியேறியவர்கள் கிடையாது. சிறுபான்மை என்றால் அடிமைச் சமூகம் என்று அர்த்தமும் கிடையாது. இந்த நாட்டில் நாமும் ஓர் அங்கம், எமக்கான தனியான தெளிவான வரலாறு உண்டு, நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடியுளோம், நாட்டுக்காக பல தியாகங்கள் செய்துள்ளோம். நாட்டில் நடந்த யுத்தத்தில் 3,500 மேற்பட்ட உயிர்ப்பலி, உடைமை இழப்பு, 1,33,000 மேற்பட்ட வட முஸ்லிம்கள் 23 வருடங்களாக துயரமான அகதி வாழ்க்கை, இப்படிப் பல. இந்நாட்டில் நாம் தலைநிமிர்ந்து வாழும் சகல தகுதியும் எமக்குண்டு. இதில் தலையிடுவோரை தட்டிக்கேட்கும் உரிமையும் எமக்குண்டு. அநியாயத்திற்கு எதிராகப் போராடித்தான் ஆகவேண்டும் என்று உரத்து குரல்கொடுக்க வேண்டிய நேரம் கனிந்துள்ளது.

நவீனகால அறிஞர் அஷ்ஷெய்க் அல்-கஸ்ஸாலியின் கருத்தொன்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமென நினைக்கிறேன்:

"இஸ்லாம் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளது. அதன் பக்கமே நியாயமிருக்கிறது. ஆனால், அதற்கு சார்பாக வாதிடும் வழக்கறிஞர்கள்தான் கையாலாகாதவர்களாக இருக்கின்றார்கள்" என்கிறார்.

இது இலங்கை முஸ்லிம்களுக்கும் அதன் கையாலாகாத தலைவர்களுக்கும் மிகவும் பொருந்தும் உதாரணமாகும். பாதிக்கப்படும் சமூகத்தின் பொறுமை ஓர் எல்லைவரைதான் நின்றுபிடிக்கும். ஆட்சியாளர்களின் சால்வைகளில் இவ்வளவுநாளும் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொங்கிக் கொண்டிருந்து சமூகத்தை விற்றுத் தின்னும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் மௌனம் கலையக் காலமெடுக்கும். அதற்கொரு தேர்தல் வரவேண்டும் அதுவரை சமூக அவலம் காத்திருக்காது. எனவே, முஸ்லிம் புத்திஜீவிகள், சிவில் சமூகம், ஊடகவியலாளர் சமூகம், சட்டத்தரணிகள் சங்கம், புலம்பெயர் சமூகம் என்பன ஒன்றிணைந்து அவசரமாக தன் கடமையைச் செய்யவேண்டும் என்பது இலங்கை முஸ்லிம்களின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டு மக்கள் ஆணையை பெற்றதுமுதல் இன்றுவரை அக்கட்சி அரசுக்கும், ஜனாதிபதிகளுக்கும் ஆதரவளிக்கும்போது முஸ்லிம் சமூகத்தின் எந்தவொரு உரிமையையும் முன்வைத்து ஆதரவளித்ததில்லை. அதேபோல் ஏனைய மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் என்பவை கூட முஸ்லிம்களின் உரிமைகளை முன்வைக்காமல் தமக்குரிய பதவிகளை மட்டுமே முன்வைத்து ஆதரவளித்து வந்துள்ளன. முக்கியமாக இனப்பிரச்சினைத் தீர்வில் வடக்கு – கிழக்கை இணைக்காத வகையில் முஸ்லிம்களுக்கான சம பங்கு, திகாமடுல்ல மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கல்முனை தேர்தல் மாவட்டம், அம்பாறை தேர்தல் மாவட்டம் என இரண்டு தேர்தல் மாவட்டங்களாகவும் மாற்றுதல், கல்முனையில் சாய்ந்தமருதுக்கென நகர சபை, பாண்டிருப்புக்கென பிரதேச சபை வழங்கல், அம்பாறை மாவட்ட கரும்புச்செய்கை காணிமுதல் முஸ்லிம்கள் பறிகொடுத்த 64,000 ஏக்கர் காணிவரை எமது காணிகளை மீளப்பெறல், கொழும்பிலும் கண்டியிலும் முஸ்லிம் பெண்களுக்கான மேலதிக அரச பாடசாலைகள், விகிதாசார தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யாமை, தடைசெய்யப்பட்ட முஸ்லிம் இயக்கங்களில் பயங்கரவாதத்தில் நேரடியாக சம்பந்தப்படாதவர்கள் மீதான தடைகளை நீக்குதல், மட்டக்களப்பு கெம்பஸை அரச பிடியிலிருந்து விடுவித்தல், வீட்டுத்திட்டங்களை மக்களுக்கு நியாயமாக கையளித்தல், பிரதேச செயலகங்கள் மற்றும் எல்லை பிரச்சினைகளைத் தீர்த்தல் போன்ற முஸ்லிம் சமூகத்தின் தேவைகளை முன்வைத்து இவற்றை பகிரங்கமாக எந்த ஜனாதிபதி வேட்பாளர் ஏற்கிறாரோ அவருக்கு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் முஸ்லிம் கட்சிகள் வாக்களிக்க முன்வர வேண்டும். அவ்வாறு செய்ய முன்வராத கட்சிகளுக்கெதிராக முஸ்லிம்கள் ஜனநாயக வழியில்நின்று மக்கள் போராட்டம் முன்னெடுக்க வேண்டும்

அதனடிப்படையில் இலங்கை நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த அனைத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது கட்சிகளின் விருப்பு வெறுப்புகளுக்கப்பால் சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தும் சக்தியும், ஆளுமையும், எண்ணமும்கொண்ட ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்க முன்வர வேண்டும் என சகல முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அல்-மீஸான் பௌண்டேஷன் உட்பட முக்கிய சிவில் அமைப்புகள் பலதும் பகிரங்க வேண்டுகோளொன்றை விடுத்திருந்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி போன்ற தமிழ் மக்களின் சக்திமிக்க அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தைகள் செய்துவரும் நிலையில், முஸ்லிம் கட்சிகள் வழமைபோன்று கண்களை மூடிக்கொண்டு வாசிக்கு வலைவீசாமல் நிதானித்து முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர ஆராய்ந்து முடிவெடுக்க சிறந்த வாய்ப்பு கிட்டியுள்ளதாக இந்த சூழ்நிலையை அடிக்கோடிட்டு காட்ட விரும்புகிறோம். முஸ்லிம் சமூகத்தின் காணி மற்றும் நிலப் பிரச்சினைகள், பிராந்திய பிரச்சினைகள், உரிமை சார்ந்த விடயங்கள் என இலங்கையின் சகல பாகங்களிலும் பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றன. அவற்றை பட்டியலிட்டு அந்த பிரச்சினைகளை எழுத்துமூலம் ஒப்பந்தம் செய்து வெற்றிபெறுவதற்கு வாய்ப்பிருக்கின்ற, முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் ஆற்றலும், எண்ணமும் உள்ள வேட்பாளர்களை அணுகி மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கடந்த காலங்களில் விட்ட தவறுகளை முன்னுதாரணமாகக்கொண்டு இந்த வாய்ப்பை பயன்படுத்த வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்திருந்தது. ஆனால், நடந்தவையோ பழைய பொருளுக்கு புதிய மேலுறை மாற்றியதுபோலவே. இதற்கு முந்திய காலங்களைப் போலல்லாது இவர்களுக்கான பதிலை பெரும்பாலும் முஸ்லிம்கள் இனிவரும் காலங்களில் வழங்குவார்கள் என்பது மட்டும் திண்ணம்.







# வணிக உலகம்
Business world

www.thamilan.lk

## பெண்பிள்ளைகளுக்கே தனித்துவமான வாழ்க்கைத் திறன் செயற்பாடுகளுடன் கூடிய Goal @ Home Activity Book நூல் வெளியீடு




கொவிட் பெருந்தொற்றின் தாக்கத்தினால் முடங்கிப்போயிருந்த பெண்பிள்ளைகளின் அன்றாட வாழ்வு மற்றும் கல்வியை மேம்படுத்தும் நோக்கத்துடன் சர்வ் (SERVE) நிறுவனம், பல்வேறு வாழ்க்கைத் திறன் செயற்பாடுகளை உள்ளடக்கிய Goal @ Home Activity Book எனும் செயற்பாட்டு நூலொன்றை அச்சு வடிவிலும் ஒன்லைன் வடிவிலும் வெளியிடுகின்றது. மேற்படி நூல் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது. 1999ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சர்வ் நிறுவனம், சிறுவர்கள், இளம் சந்ததியினர் மற்றும் பெண்களின் நலன்சார்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற இலாப நோக்கமற்றதொரு இலங்கை சமூகசேவை நிறுவனமாகும். குறிப்பாக, சிறுவர்கள், இளம் சந்ததியினர் மற்றும் பெண்களின் சமத்துவம் மற்றும் பெருமையை பாதுகாத்து மனிதநேயத்துடன்கூடிய சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு இலங்கை நிறுவனமாக பங்களிப்பு வழங்குவதே சர்வ் நிறுவனத்தின் நோக்கமாகும். நெதர்லாந்து விமென் வின் அமைப்பு மற்றும் ஸ்டேன்டர்ட் சார்டட் மன்றத்தின் அனுசரணையுடன் இந்நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

www.lamun.org இணையத்தளத்துடன் இணைந்து இந்த நூலின் செயற்பாடுகளை online முறையிலும் நிறைவுசெய்ய முடியும். மேலும், எந்தவொரு பகுதியிலுமுள்ள 13 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட பெண்பிள்ளைகளுக்கு இத்திட்டத்தில் இணைந்து இச்செயற்பாட்டு நூலை இலவசமாக கற்க முடியும். பெண்பிள்ளைகளுக்கு தனித் தனியாகவும் பல்வேறு சமூக, சங்கங்கள் மற்றும் அமைப்புகள் ஊடாக குழுவாகவும் இந் நிகழ்ச்சியில் பதிவுசெய்ய முடியும். இதன்போது இச்செயற்பாடுகள் நூலின் அச்சுப் பிரதியொன்று வழங்கப்படுவதோடு, அதனை வீட்டிலிருந்தவாறு தனியாகவும் கற்க முடியும். மேலும், அதற்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் உதவி, சர்வ் நிறுவனத்தின் அனுபவமிக்க பெண் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் வழங்கப்படும். மேலதிக விபரங்களைப் பெறுவதற்கு 0777167799 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு திருமதி மாலினி விஜேரத்னவை தொடர்புகொள்ளவும். servelk@gmail.com எனும் மின்னுஞ்சல் முகவரி ஊடாகவும் இல 24, உஸ்வத்த சுற்றுவட்ட வீதி, மொரட்டுவை என்ற முகவரிக்கு வருகை தருவதன் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற முடியும்.

## HNBஇன் 'உங்களுக்காக நாம்' வேலைத்திட்டத்தின்கீழ் வைத்தியசாலைகளுக்கு அத்தியாவசிய மருந்துகள்



இலங்கையின் முன்னணி தனியார்துறை வங்கியான HNB, இந்த நெருக்கடியான காலத்தில் லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை மற்றும் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை ஆகியவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் 'உங்களுக்காக நாம்' நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக புதிதாகப் பிறந்த குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அத்தியாவசிய மருந்துகளை அண்மையில் வழங்கியது.

நாட்டில் இன்று நிலவும் மருந்துப் பற்றாக்குறையை கருத்திற்கொண்டு, கொரோனா தொற்றுநோயின் பின்னர் தமது நாளாந்த சம்பளத்தை தன்னார்வமாக வழங்குவதற்காக வங்கியின் ஊழியர்களால் உருவாக்கப்பட்ட உங்களுக்காக நாம் நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்து HNB தொடர்ந்து மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை நன்கொடையாக வழங்கி வருகிறது. HNB உதவிப் பொது முகாமையாளர் - வியூகம் திருமதி பிரியங்க விஜேரத்ன, மருந்துப் பொருட்களை லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் சந்துசித சேனாபதியிடம் கையளித்ததுடன், HNB சட்டப் பிரிவின் பிரதானி திருமதி ஷிரோமி ஹலோலுவ மருந்துப் பொருட்களை கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் கையளித்தார்.

## DFCC வங்கி தனது நிலைபேற்றியல் மூலோபாயத்திற்கேற்ப எரிசக்தி சேமிப்பு முயற்சிகளுக்கு செயல் வடிவம் கொடுத்துள்ளது



அனைவருக்கும் ஏற்ற வங்கியான DFCC வங்கி, தனது நிலைபேற்றியல் மூலோபாயத்தின் மூலமாக அனைவருக்கும் ஒரு மீள் எழுகின்ற திறனைக்கொண்ட உலகத்தைத் தோற்றுவிக்க முயல்கிறது. 2020இல் வடிவமைக்கப்பட்ட, DFCC வங்கியின் நிலைபேற்றியல் மூலோபாயமானது, அடுத்த தசாப்தத்திற்கான வங்கியின் நிலைபேற்றியல் இலக்குகளை திட்ட வரைபடமாக்கியுள்ளதுடன், 2030ஆம் ஆண்டளவில் நிலைபேற்றியலுக்குப் பங்களிக்கும் முன்னணி வங்கியாகமாறுகின்ற தூரநோக்குடன் செயல்பட்டு வருகின்றது. நிலைபேற்றியல் மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, வங்கி அதன் பாரிய இலக்குகளை மையமாகக்கொண்டு செயற்பட்டு வருகிறது.

அதாவது, 2030ஆம் ஆண்டளவில் ஒரு காபன் நடுநிலை வங்கியாக மாறுதல், இலங்கையில் சூழல் பேணும் முயற்சிகளுக்கான கடன் வசதி வங்கி மற்றும் 2030ஆம் ஆண்டளவில் நிலைபேற்றியலுடனான தொழில் வாழ்க்கை முறையை எட்டுதல் என்பனவாகும்.

## இலங்கையில் டிஜிட்டல் கொடுப்பனவுக்கான வாய்ப்புகளை விஸ்தரிப்பு செய்வதற்காக Visa உடன் WEBXPAY கைகோர்ப்பு




இலங்கையின் முன்னணி online கொடுப்பனவு தீர்வு வழங்குநரான WEBXPAY, இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தை ஒப்பற்ற, வரையறைகளற்ற மற்றும் சிறிய, நடுத்தரளவு வியாபாரங்களுக்கு நிலைபேறான டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஏற்றுக் கொள்ளும் தீர்வுகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் Visa உடன் கைகோர்த்துள்ளது. இந்தக் கைகோர்ப்பினூடாக WEBXPAYஇற்கு நாடு முழுவதையும் சேர்ந்த சிறிய நடுத்தரளவு வியாபாரங்களுக்கு உலகளாவிய ரீதியில் காணப்படும் Visa அட்டைதாரர்களை அணுகச் செய்து, டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளும் ஆற்றலை வழங்கி வலுவூட்டும் இலக்கை வேகமாக அணுகக்கூடியதாக இருக்கும். இந்தச் செயற்பாட்டினூடாக சிறு வியாபாரங்களுக்கான அளவீட்டை அதிகரித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதுடன், அதன் விளைவாக அதன் மீட்சிக்கு கைகொடுக்கக்கூடியதாக இருக்கும்.

ஆசிய பசுபிக் ஏனைய Visa Acceptance Fast Track Programஇன் அங்கமாக அமைந்திருக்கும் WEBXPAY, 2025ஆம் ஆண்டளவில் 10,000 புதிய டிஜிட்டல் இலங்கையர்களை டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய கட்டமைப்பை ஏற்படுத்த எதிர்பார்ப்பதுடன், நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 2025ஆம் ஆண்டளவில் Gross Merchant Volume (GMV) பெறுமதியாக ரூ. 10 பில்லியனை பதிவுசெய்ய எதிர்பார்த்துள்ளது. soft POS ஊடாக தொடுகையற்ற கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளலை இது அதிகரிக்கும் என்பதுடன், soft POS தொழில்நுட்பத்தினூடாக tap to phone கொடுப்பனவுகளை செயற்படுத்தி, குறைந்த செலவிலமைந்த face to face கொடுக்கல் வாங்கல்கள் ஏற்றுக்கொள்ளலை ஏற்படுத்தும். கொவிட்-19 தொற்றுப் பரவலுக்கு பின்னரான பொருளாதாரத்தில், விற்பனையாளர்களுக்கு மீளக் கட்டியெழுப்பிக்கொள்வதற்கும், விற்பனைகளை அதிகரித்துக் கொள்வதற்கும் உதவியாக அமைந்திருப்பதுடன், வாடிக்கையாளர்களின் நன்மதிப்பை மேம்படுத்திக்கொள்ளவும் உதவியாக அமைந்திருக்கும். மேலும், சொப்பிங்கில் ஈடுபடும் சகல வாடிக்கையாளர்களுக்கும் checkout பகுதியில் சிக்கல்களில்லாத டிஜிட்டல் கொடுப்பனவு அனுபவத்தை பெற்றுக் கொடுக்கும்.

## உலகின் சிறந்த 1000 வங்கிகளில் ஒன்றாக மக்கள் வங்கி மீண்டும் தெரிவு



உலகின் சிறந்த 1000 வங்கிகளில் ஒன்றாக மக்கள் வங்கி மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. ஐக்கிய இராச்சியத்தின் ஃபினான்ஷியல் ரைம்ஸ் பிரசுரமான பாங்கர் சஞ்சிகையினால் முன்னெடுக்கப்பட்ட தரப்படுத்தலில் மக்கள் வங்கியும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மக்கள் வங்கியின் நிலையை உலகின் முன்னணி வங்கிகளுள் ஒன்றாக இந்த தரவரிசை உறுதிப்படுத்துகிறது. இந்த பாங்கர் சஞ்சிகையானது 1926ஆம் ஆண்டு நிறுவப்பட்டதுடன், 180இற்கும் மேற்பட்ட நாடுகளில் வாசிக்கப்படுகிறது. இதன் முதல் 1000 தரவரிசையானது முதன்மையாக ஒருங்கிணைந்த அடுக்கு I இனை அடிப்படையாகக்கொண்டது.

இந்த தரப்படுத்தல் தொடர்பில் மக்கள் வங்கியின் தவிசாளர் சுஜீவ ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கையில்,

கொவிட் -19 பெருந்தொற்றைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளின் பின் ஏற்படும் விளைவுகள் உட்பட பல விதங்களிலான அசாதாரண சூழ்நிலைகளுக்கு நாடு எதிர்கொள்ளும் நேரம் இது. இத்தகைய சவாலான நிலைமையின் மத்தியில் உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாக மக்கள் வங்கி மீண்டும் அங்கீகரிக்கப்பட்டமை ஒரு அசாதாரமாண சாதனையாகும். அவ்வாறான நிலைமையின் மத்தியிலும் அதன் நிலையான மற்றும் உறுதியான வழங்கல் செயற்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. மேலும் முன்னோக்கிப் பார்க்கையில், பல சவால்கள் இருந்தபோதிலும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கும் நாட்டின் தற்போதைய சூழல் அமைப்பை முன்னேற்றுவதற்கு உதவுவதற்கும் தேவையான அனைத்து நியாயமான நடவடிக்கைகளையும் எடுப்பதில் மக்கள் வங்கி கவனம் செலுத்துகிறது" எனத் தெரிவித்தார்.

மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான ரஞ்சித் கொடிதுவக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

"இலங்கையும் வங்கி அமைப்புகளும் எதிர்கொள்ளும் சவால்களானது இதற்கு முன்னர் காணப்பட்டவையல்ல. அவ்வாறானதோர் பின்னணியில் உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாக இடம்பிடித்திருப்பதானது சாதாரண சூழ்நிலைகளின் மத்தியிலும் மக்கள் வங்கியின் உள்ளார்ந்த வலிமை மற்றும் அதன் நெகிழ்ச்சித்தன்மைக்கு சான்றாகும். மேலும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்கள், பொருளாதார முக்கியத்துவம் வகிக்கும் சந்தை பிரிவுகளை ஆதரிக்க அதிகப்படியான வளங்களை நாம் ஒதுக்கியுள்ளோம். செயற்பாட்டுத்துறையில் எங்கள் வணிகத்தின் அனைத்து முக்கிய பகுதிகளின் தொழில்நுட்பத்திலும் தொடர்ந்து முதலீடு செய்து வருகின்றோம். மேலும் வங்கியின் தளத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் தொடர்ந்தும் வலுப்படுத்த உறுதிபூண்டுள்ளோம்" - எனத் தெரிவித்தார்.

## பெரேரா அன்ட் சன்ஸ் தனது 120ஆவது ஆண்டு நிறைவை பெருமையுடன் கொண்டாடுகிறது




இலங்கையின் முதன்மையான விரைவு பரிமாறல் சேவை உணவகமான பெரேரா அன்ட் சன்ஸ், அண்மையில் தனது 120ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிய நிலையில், அதன் நீண்ட பயணத்தில் ஒரு முக்கியமான சாதனை இலக்கினை எட்டியுள்ளது. அதன் தயாரிப்புகள், சேவைகள் மற்றும் ஒட்டுமொத்த சமூகப் பொறுப்பின் மூலம் உள்ளூர் சமூகத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் நிறுவனத்தின் நீண்டகால அர்ப்பணிப்பு மற்றும் வரலாற்றிற்கு சான்றாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது.

1902ஆம் ஆண்டில், பெரேரா அன்ட் சன்ஸ் ஒரு சிறிய பேக்கரியாக தென் பிராந்தியத்திலுள்ள கொடகொட என்ற கிராமத்தைச் சேர்ந்த கே.ஏ.சார்ள்ஸ் பெரேராவால் ஆரம்பிக்கப்பட்டது. அதன் வெற்றிகரமான 120 வருட காலப்பகுதியில், பெரேரா அன்ட் சன்ஸ், ஒரு தனித்தியங்கும் பேக்கரி கடையிலிருந்து வளர்ச்சி கண்டு நாடெங்கிலும் 7 மாகாணங்களில் செயல்பட்டு வருகின்ற 180இற்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களின் சங்கிலியாக இயங்கி வருகிறது. சில்லறைவிற்பனை நிலையமானது அதன் உணவுப் பட்டியலிலுள்ள ஒவ்வொரு சிறந்த ருசியுள்ள உணவையும் கவனமாகவும் தரத்தில் தொடர்ச்சியான அர்ப்பணிப்புடனும் தயாரிப்பதில் பெருமை கொள்கிறது.

பேக்கரி கலையில் முன்னோடியும், முன்னிலை வகித்து வருவதுமான பெரேரா அன்ட் சன்ஸானது, வீடு வீடாக தயாரிப்புகள் விற்பனை செய்யப்பட்ட காலத்திலிருந்து, இலங்கையில் மூலைமுடுக்கெங்கும் விற்பனையாகும் நாமமாக மாறியுள்ளது. தன்னியக்கம், புத்தாக்கம் மற்றும் கிளைச் செயற்பாடுகள் ஒத்திசைவு ஆகியவற்றுடன் அதன் சுவையான தயாரிப்புகளின் வரிசையுமே அதன் விரைவான முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

## ko s ntr SuperHeroes Academyக்கு டயலொக் அனுசரணை வழங்கி இளைஞர்களை வலுவூட்டுகின்றது



இலங்கையர்களின் மிகவும் பிரியமான மற்றும் நம்பிக்கைக்குரிய ஐஸ்கிரீம் வர்த்தக நாமமான Elephant House Ice Cream மற்றும் இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி ஆகியவை அண்மையில் பத்தரமுல்லை, Waters Edgeஇல் இலங்கையின் எதிர்கால சந்ததியினரின் திறமைகள் மற்றும் திறன்களுக்கான 'Elephant House SuperHeroes Academy Powered by Dialog' எனும் பயிற்சிப்பட்டறையினை அறிமுகப்படுத்தியது. இதற்கு டயலொக் அனுசரணை வழங்கியது.

டயலொக் அனுசரணை வழங்கும் Elephant House SuperHeroes நடுவர் குழுவில் அங்கம் வகிக்கும் சிந்தனையாளரும் தொழிலதிபருமான யசஸ் ஹேவகே, மொரட்டுவ பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்பப் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி லீலாங்க செனவிரத்ன மற்றும் அசோகா விஜேவர்தன ஆகியோர் இந்த செயலமர்வை வழிநடத்தினர்.

போட்டியாளர்களின் பெற்றோர் களுக்கு பிள்ளைகளின் திறமைகள் மற்றும் திறன்களை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த ஆலோசனைகளையும் வழங்கினார்கள். ''Super Talent', 'Super Innovator' மற்றும் 'Super Responsible' ஆகிய மூன்று பிரிவுகளையும் உள்ளடக்கிய பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கிய இந்த பயிலரங்கில் பிள்ளைகள் தங்கள் தனித்திறமைகளைப் பற்றி நன்கு புரிந்துகொள்வது மற்றும் அவர்களின் சிறந்த பலனைப் பெறுவது எப்படி என்பது தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது. டயலொக் அனுசரணை வழங்கும் Elephant House SuperHeroes போட்டியானது, புதுமையான திறன்கள், திறமைகள் மற்றும் நிலையான வாழ்க்கைக்கான முயற்சிகளை அங்கீகரிப்பதை நோக்கமாகக்கொண்ட நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் போட்டியாகும்.

டயலொக் அனுசரணை வழங்கும் Elephant House SuperHeroes போட்டியானது இலங்கையிலுள்ள பிள்ளைகளின் கல்வி மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குவதுடன், அவர்களின் கல்விக் கனவுகளை நனவாக்க உதவும் பல சலுகைகளையும் வழங்குகிறது. இறுதிப் போட்டியில் மூன்று பிரிவுகளில் இருந்தும் மூன்று வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

இலங்கை சிறார்களின் திறன்களை விருத்தி செய்வதற்கான வாய்ப்பை உருவாக்கும் டயலொக் அனுசரணை வழங்கும் Elephant House SuperHeroes போட்டியானது, ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் TV தெரணவில் மாலை 4.25 மணிக்கு ஒளிபரப்பப்படுகிறது.

## மாணவர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்க காலி தொழில்நுட்பக் கல்லூரியுடன் கைகோர்க்கும் எயார்டெல் லங்கா



இலங்கையின் இளைஞர்களை மையமாகக் கொண்ட தொலைத்தொடர்பு சேவை வழங்குநரான Airtel Lanka புதிய தலைமுறை தொழில்நுட்பவியலாளர்களின் தொழில்நுட்ப மற்றும் தனிப்பட்ட திறன்கள் பற்றிய அறிவை மேம்படுத்தி நிபுணத்துவமுடையவர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் அண்மையில் காலி தொழில்நுட்பக் கல்லூரியுடன் (COT, Galle)கைகோர்த்துள்ளது.

இவ்வாறு கூட்டிணைந்ததன் மூலம் Airtel Lanka ஆனது COT, காலியிலுள்ள கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட தொகுதிகளைச் சேர்ந்த 30 மாணவர்களுக்கு பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஒத்துழைப்புகளை வழங்கவுள்ளதுடன், அவர்களுக்கு புதிய கணினிகள் மற்றும் உபகரணங்களையும் வழங்கவுள்ளது.

சிறந்த மற்றும் திறமையான இறுதி ஆண்டு மாணவர்களுக்கு 6-12 மாதங்கள்வரை ஊதியத்துடன்கூடிய Internship திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

"உலகெங்கிலும் உள்ள பல நாடுகளைப் போலவே, இலங்கையும் மோசமான பொருளாதார நிச்சயமற்ற காலகட்டத்தை எதிர்கொண்டுள்ளது. உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை வெளிக் கொணருவதற்கும் அனைத்து கார்ப்பரேட் நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய தருணங்கள் இதுவாகும். இந்த நிலைமையிலிருந்து மீட்பதற்கு ஊக்குவிப்பதில் ICT மற்றும் தொலைத்தொடர்புதுறை முக்கிய பங்கு வகிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்" - என எயார்டெல் லங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஷிஷ் சந்திரா தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீ ஜெயவர்தனபுர பொது வைத்தியசாலையின் தாதியர்களுக்கான செயலமர்வை – h நடத்தியுள்ளது



இலங்கையில் முழுமையான அவுஸ்திரேலிய பட்டப்படிப்புகளை வழங்கும் நாட்டின் மிகவும் மதிப்புமிக்க உயர்கல்வி நிறுவனங்களில் ஒன்றான Edith Cowan University (ECU) - Sri Lanka, ஸ்ரீ ஜெயவர்தனபுர பொது வைத்தியசாலையின் தாதியர்களுக்கான செயலமர்வொன்றை அண்மையில் நடத்தியுள்ளது.

தற்போது எழுந்துள்ள நெருக்கடிகள் காரணமாக இலங்கையின் மருத்துவ கட்டமைப்பு நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், தாதியர் தொழிலில் தொழில்சார் வளர்ச்சியை மேம்படுத்த உதவும் நோக்கத்துடன் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது. 2022 ஜூன் 29ஆம் திகதி வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வைத்தியசாலையைச் சேர்ந்த 50இற்கும் மேற்பட்ட தாதியர்கள் பங்கேற்றனர். தாதியர் செயலமர்வு ECUஇன் பரந்த சமூக நிலைபேற்றியல் மற்றும் நிலைபேண்தகு திறன் மேம்பாட்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டதுடன், இக்கல்வி நிலையத்தின் சொந்த தாதியர் கற்கைநெறி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

இந்த முயற்சி குறித்து கருத்து தெரிவித்த ECU - Sri Lanka வின் தாதியர் கற்கைநெறி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளரான மயூமி பெரேரா,

"இக்காலகட்டத்தில் எங்கள் சுகாதாரத்துறை பலத்த சவால்களை எதிர்கொள்கிறது. எனவே, தாதியரின் வகிபாகம் மிகவும் சவாலானதாகவும் முக்கியமானதாகவும் மாறியுள்ளது. எனவே, தொழில்முறை மேம்பாடு தாதியர்களுக்கு முக்கிய கவனம் செலுத்தும் ஒரு பகுதியாக இருக்கவேண்டும். குறிப்பாக, எங்கள் தாதியர்கள் தீர்மானமெடுக்கும் மற்றும் நோயாளர் பராமரிப்பு செயல்பாட்டில் ஈடுபட வேண்டும். மருத்துவர்கள் மற்றும் பிற சுகாதார நிபுணர்களுடன் கைகோர்த்து செயல்படல் வேண்டும்.

இந்த அறிவூட்டல் தலையீடுகளின் நோக்கம், இலங்கையின் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் தாதியரின் வளர்ச்சியை உயர்த்துவதற்கு உதவுவதும், இத்துறையில் அறிவாற்றல் கொண்டவர்களாக வளர அவர்களை ஊக்குவித்து ஆதரவளிப்பதுமாகும். இலங்கையில் அவுஸ்திரேலிய கல்வித் தகைமைகளை வழங்கும் ஒரு முதன்மையான கல்வி நிறுவனம் என்றவகையில், நிலைபேண்தகு திறன்கள் மற்றும் தொழில்சார் மேம்பாடு மற்றும் புதிய வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றை உறுதிசெய்யும் தார்மீகக் கடமை எமக்கு இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். எனவே, இந்த செயலமர்வை நடத்த முடிந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைவதுடன், மேலும் பல முயற்சிகளை எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கு ஆவலாக உள்ளோம்" - என்று குறிப்பிட்டார்.

தாதியர்களுக்கான ECU - Sri Lanka செயலமர்வு ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒன்றிணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைபீடத்தின் தாதியர் திணைக்களப் பேராசிரியர் தமாரா அமரசேகர,

"Edith Cowan University இன் School of Nursing and Midwifery இற்கான சர்வதேச பணிப்பாளரான டாக்டர் டானியா பீமென்ட் மற்றும் ECU - Sri Lankaவின் தாதியர் கற்கைநெறி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளரான மயூமி பெரேரா உள்ளிட்ட துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த தொழில்முறை பேச்சாளர்கள் குழுவால் நடத்தப்பட்டது.

Edith Cowan University - Sri Lanka (ECU Sri Lanka) என்பது Edith Cowan University இன் நான்காவது பல்கலைக்கழக வளாகம் என்பதுடன், இது இலங்கையிலுள்ள பட்டப்படிப்புகள் உட்பட உலகத் தரம் வாய்ந்த அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத் தகைமைகளை வழங்கும் முழுமையான பல்கலைக்கழக வளாகமாகும். தற்போது, இலங்கையில் பின்வரும் பட்டப்படிப்புகளுக்கான கற்கைநெறிகளை இந்த வளாகம் வழங்குகிறது: Bachelor of Commerce, Bachelor of Computer Science, Bachelor of Science (Cybersecurity), Bachelor of Science (Biomedical Science), Bachelor of Design (Games and Interactive Design) (3 ஆம் வருடம் மாத்திரம்).Edith Cowan University அவுஸ்திரேலியாவில் 30,000 பட்டப்படிப்பு மற்றும் மேற்பட்டப்படிப்பு மாணவர்களைக்கொண்ட சிறந்த அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும். மேலும், 100 நாடுகளிலிருந்து ஆண்டுதோறும் 6,000இற்கும் மேற்பட்ட சர்வதேச மாணவர்களையும் இது வரவேற்கிறது.

பல்கலைக்கழகத்தில் கலை மற்றும் மனிதநேயம், வணிகம் மற்றும் சட்டம், கல்வி, பொறியியல், மருத்துவம் மற்றும் சுகாதார விஞ்ஞானம், தாதியர் மற்றும் மருத்துவச்சி, விஞ்ஞானம் மற்றும் Western Australian Academy of Performing Arts (WAAPA) உள்ளிட்ட 8 உயர் கல்லூரிகள் உள்ளன.



காரைக்கவி

# சீத்துவக்கேடு 197

அப்பு கொஞ்சநேரம் தலைவாசல் திண்ணையில கண் அயர்ந்தவர் எழும்பி, கைகால் கழுவி பிள்ளையார் கோவில் கோபுரத்தைப் பார்த்து, என்ரை வாரிவளவானே எல்லாரும் நல்லா இருக்க வேணும் எண்டு வாய் விட்டு கும்பிட்டுப் போட்டு வீட்டு விறாந்தையில இறப்பு வளையில தொங்கின வீபூதிக் குட்டானிலை இருந்த வீபூதியை அள்ளிச் சிவ சிவா எண்டு நெத்தியிலை பூசி கையை நெஞ்சிலை துடைச்சுக் கொண்டுவந்து பேந்தும் குந்திலை குந்தினார்.

நானும் போய் முகம் கழுவிக்கொண்டு அப்பு மாதிரி பிள்ளையாரைக் கும்பிட்டு வீபூதி பூசிக்கொண்டு வந்து அப்புவுக்குப் பக்கத்தில குந்தினன். முந்தி வீடுவழியை இருந்த வயதுபோன ஆக்கள் தங்கட பழக்கவழக்கங்களை எங்களுக்குப் பழக்கி விடுகிறதில வலு கண்டிப்பா இருந்தவை. நாங்கள் எங்கையும் எப்பன் பிசகினம் எண்டால் கண்டிப்பும் தண்டிப்பும் கட்டாயம் இருக்கும்.

இப்ப கன வீடுவழிய இருக்கிற வயதுபோனவையே எது நல்ல பழக்கம், எது கெட்ட பழக்கம் எண்டு தெரியாமைத் தடுமாறுகினம். தாங்களும் தடுமாறிப் பெடிபெட்டையளையும் தடுமாற வைக்கினம். தற்செயலா எங்கயும் பெரிசுகள் கொஞ்சம் பழக்க வழக்கங்களைச் சொல்லிக் குடுக்க வெளிக்கிட்டாலும் சின்ன பொன்னன் அதுகள் சொல்லுறதைக் கேக்காதுகள். காலம் அப்பிடி மாறிப்போச்சுது.

குந்திலை இருந்த அப்பு, அட மோனை எங்கையடா பறைஞ்ச கதையை விட்டனாங்கள். ஆ.... பறையளின்ரை வகையளை எல்லே பறைஞ்சனாங்கள் எண்டு போட்டு சரி சரி மிச்சப் பறை வகையளையும் பாப்பம் எண்டார்.

குரவைப் பறை (ஒருவகைக் குறிஞ்சிப் பறை, இறையனார் அகப்பொருள்) குறிஞ்சிப் பறை (குறிஞ்சிநிலத்துக்குரிய தொண்டகப் பறை) தடாு (தொண்டகப் பறை), குறும்பறை (குறும்பறை யசை, புறநானூறு... 67, 9) கொடுகொட்டி (ஒரு வகைப்பறை, கொடுகொட்டி யாடலும் - சிலப்பதிகாரம்... 6, 43, குடமுழவங் கொடு கொட்டி குழலு மோங்க தேவாரம்...225, 2)



கோட்பறை (செய்திகளை நகரத்தில் உள்ளவர்களுக்கு அடித்துத் தெரிவிக்கும் பறை), தமுக்கு (செய்தி தெரிவிக்க அடிக்கும் ஒருகட் பறை), நிசாளம் (ஒருகட் பறை, நிசாளந் துடுமை..சிலப். 3, 27, உரை) எண்டு போட்டு லோட்டாவிலை இருந்து ஒரு மிடறு தண்ணியைக் குடிச்சு தொண்டைய நனைச்சார்.

பேந்து அங்காலையும் இஞ்சாலையும் ஆச்சி எங்கை நிக்கிறா எண்டு பாத்துப் போட்டு ஆச்சி நிண்டால் ஒரு வாய் தேத்தண்ணி சுடச் சுடக் குடிக் கலாம் எண்டு சொல்லிக்கொண்டு இருக்க, ஆச்சி அங்காலை வேலியுக்குள்ளாலை எட்டி பக்கத்து வீட்டு வள்ளியிட்டை ஒரு மூடியில தேயிலைத் தூள் கடனா வாங்கிக்கொண்டு வந்தா.



முந்தி இப்பிடித்தான் வேலியுக்குள்ளால அக்கம் பக்கத்தில உள்ளவை சீனி, கோப்பித் தூள், மிளகாய்த் தூள், தேயிலை அது இதெண்டு கடன் வாங்குவினம். கடன் வாங்கிறதுக்கு அளக்கிறதுக்கு பழைய பால் பேணி இல்லாட்டில் கவ் அன் கேட் பால்மா தகரப் பேணி மூடியளைப் பாவிப்பினம்.

இப்பிடியான குடுக்கல் - வாங்கல்கள் அயலட்டையுக்கை ஒரு அன்னியோன்னியத்தை உருவாக்கிவிட்டிருந்தது. அதால ஐயோ எண்ட குரலுக்கு ஆக்கள் ஓடி வருவினம்.

ஆனா, இப்ப கன இடங்களிலை அயலட்டையில ஆர் இருக்கினம் எண்டதே ஆக்களுக்குத் தெரியாது. உதால ஒரு ஒட்டு - உறவு ஒண்டும் அவையுக்கை கிடையாது. அதால ஓர் அந்தரம் ஆபத்து எண்டால் உதவுறதுக்கு ஒருத்தரும் இருக்காயினம்.

ஆச்சியை தேயிலையோட கண்ட அப்பு சரி.. சரி ஆச்சி இப்ப தேத்தண்ணியோட வந்துடுவா நாங்கள் பறைவம் எண்டார்.

பேந்து திரும்பவும் பறை வகையளைச் சொல்லத் தொடங்கி சூசிகம் (ஒருவகைப் பறை), தக்கை (அகப்புற முழவு மூன்றனுள் ஒன்றாகிய ஒருவகைப் பறை... பிங்கல நிகண்டு, சிலப்பதிகாரம். 3, 26, உரை.), தடாரி (பம்பையென்னும் பறை...பிங்கல நிகண்டு), பறைத்தப்பட்டை, தண்ணம், தம்பட்டம், திடும், திண்டிமம், நாவாய்ப்பறை, திமிலை (சிலப்பதிகாரம். 3, 27, உரை) எண்டு பறையளின்ரை வகையளைச் சொல்லிக்கொண்டே போகலாம் எண்டார்.

பேந்து தலைப்பறை (யானை முதலியவற்றின் முன்னே அடிக்கும் பறை), படலை (வாயகன்ற பறை... சூடாமணி நிகண்டு), பண்டாரமேளம் (அரச விளம்பரங்களை அறிவிக்கும் பறை), பன்றிப்பறை (காட்டுப்பன்றிகளை வெருட்ட அடிக்கும் பறை... பிங்கல நிகண்டு), முரசம், வெருப்பறை (போர்ப் பறைகள்) எண்டு ஒருதொகை இருக்கெண்டு சொல்லிக்கொண்டு போக ஆச்சி தேத்தண்ணிச் சட்டியோடை வர நாங்கள் பறையிறதை நிப்பாட்டிப்போட்டு தேத்தண்ணியைக் குடிக்க ஆயத்தப்படுத்தினம்.

(இன்னும் பறைவம்)

# இவ்வார இராசி பலன்கள்



வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

### மேஷ ராசி அன்பர்களே!

பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே கருத்து ஒற்றுமை வலுப்படும். சகோதரர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள். அரசாங்கக் காரியங்கள் இழுபறியானாலும் முடிந்துவிடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு நண்பர்கள் ஆதரவாக இருப்பார்கள். பிள்ளைகளால் பெருமை உண்டு. வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிடவும் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். மறைமுகப் போட்டிகளைச் சமாளிக்கும் திறன் அதிகரிக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சற்று பொறுப்புகள் கூடுவதால் மனதில் சோர்வும் அமைதிக் குறைவும் உண்டாகும். ஆனாலும் கணவரின் அன்பு சோர்வை விரட்டி உற்சாகப்படுத்தும்.

### ரிஷப ராசி அன்பர்களே!

குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். பொருளாதார வசதிக்கு குறைவு எதுவும் இருக்காது. புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல்நலம் சீராகும். மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம். இளைய சகோதரர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிடவும் விற்பனையும் இலாபமும் சுமாராகத்தான் இருக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்தத் தேவையான வங்கிக் கடனுதவி கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். வீட்டில் சிறிய அளவில் சுபநிகழ்ச்சி நடைபெறக்கூடிய வாய்ப்பு உள்ளது.

### மிதுன ராசி அன்பர்களே!

பணம் வந்தாலும் செலவுகளும் அதிகரிக்கும். சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். வழக்குகளில் வழக்கறிஞரின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் விட்டுப்பிடிப்பது நல்லது. நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமை யாகப் பாடுபடவேண்டி இருக்கும். புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். சிலருக்கு புகுந்த வீட்டிலிருந்து எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது.

### கடக ராசி அன்பர்களே!

பொருளாதார வசதிக்கு குறைவில்லை. செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். நெருங்கிய உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்வதன் மூலம் தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்த்து விடலாம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். பிள்ளைகளுக்காக செலவுசெய்ய நேரிடும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. சக வியாபாரிகளின் பேச்சைக் கேட்டு புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். ஆனாலும் சலித்துக்கொள்ளாமல் சிறப்பாகச் செயல்பட்டு கணவர்வழி உறவினர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள்.

### சிம்ம ராசி அன்பர்களே!

வார முற்பகுதியில் நீங்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்துசேரும். பேச்சினால் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது மிகவும் கவனமாக இருப்பது அவசியம். செலவுகள் அதிகரித்தாலும்கூட அதற்கேற்ப பணவரவு இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே சிறுசிறு பிணக்குகள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். புதிதாக வியாபாரம் தொடங்க நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். அனுகூலமாக முடியும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் வாரமாக இருக்கும். பணப்புழக்கம் அதிகரிப்பதால் ஓரளவு சேமிக்கவும் செய்வீர்கள்.

### கன்னி ராசி அன்பர்களே!

இந்த வாரம் நீங்கள் எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அவசரப்பட்டு எவருக்கும் எந்த வாக்குறுதியும் தரவேண்டாம். பொருளாதார நிலை சுமாராகத்தான் இருக்கும். வெளியிடங்களுக்குச் செல்லும்போது எச்சரிக்கையுடன் இருக்கவும். சகோதரர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிலருக்குக் குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். மற்றபடி பண வசதியைப் பொறுத்தவரை பிரச்சினை எதுவும் இல்லை. வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றவும் சந்தர்ப்பம் கனிந்து வரும். சக வியாபாரிகள் உங்கள் கருத்துக்கு முக்கியத்துவம் தருவார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். பிள்ளைகள்வழியில் சிற்சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

### துலா ராசி அன்பர்களே!

சிந்தித்துச் செயல்படவேண்டிய வாரம். முக்கிய முடிவுகள் எதுவும் எடுப்பதைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மனச்சஞ்சலம் தரும். சிலருக்கு தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். உறவினர்கள் உதவியால் சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். பாடசாலை, கல்லூரிக் கால நண்பர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் இலாபம் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். பணியாளர்களுக்காக செலவுசெய்ய நேரிடும். வாடிக்கையாளர்களுடன் கனிவான அணுகுமுறை அவசியம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதில் அவ்வப்போது இலேசான சோர்வு ஏற்படக்கூடும். வாரப் பிற்பகுதியில் சோர்வு நீங்கி உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

### விருச்சிக ராசி அன்பர்களே!

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் உடனுக்குடன் சரியாகிவிடும். வெளிநாட்டிலிருந்து நீண்டநாட்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கான வாய்ப்புண்டு. அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அலைச்சலையும் செலவுகளையும் ஏற்படுத்தினாலும் அனுகூலமாக முடிந்துவிடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், தகுந்தவர்களிடம் ஆலோசனை கேட்டு செய்யவும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம். புகுந்தவீட்டு உறவினர்கள்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

### தனுசு ராசி அன்பர்களே!

பொருளாதார நிலை நல்லபடி இருக்கும். வீண் செலவுகளும் ஏற்படாது. கணவன் - மனைவிக் கிடையே சிறு சிறு பிரச்சினைகள் தோன்றக்கூடும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் அலைச்சலும் சோர்வும் ஏற்படும். உங்களைப் பற்றி தவறாகப் புரிந்துகொண்ட உறவினர்கள், தங்கள் தவறைப் புரிந்துகொண்டு வலிய வந்து உறவு பாராட்டுவார்கள். தந்தையுடன் இருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எப்போதும்போல் இருக்கும். விற்பனையை அதிகரிப்பதில் பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பு தருவார்கள். சக வியாபாரிகளுடன் இணக்கமான சூழ்நிலை உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உறவினர்கள் வருகையால் பொறுப்புகள் அதிகரிக்கும். கணவரிடம் எதிர்பார்த்த பணம் கிடைப்பதால் சிரமம் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது.

### மகர ராசி அன்பர்களே!

கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தந்தையின் உடல் ஆரோக்கியத் தில் கவனம் தேவை. பழைய கடன்கள் விடயத்தில் முன்னெச்சரிக்கை நட வடிக்கைகள் அவசியம். தந்தைவழி உறவினர்களின் தலையீடு காரணமாக குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்வது நல்லது. வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும். சிலர் வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றி விரிவுபடுத்துவீர்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம்.

### கும்ப ராசி அன்பர்களே!

ஓரளவு அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம். நீண்டநாட்களாக உங்களை வருத்திக்கொண்டிருந்த உடல் உபாதைகள் இனி குணமாகும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படும் என்பதால் பேசும்போது பொறுமை தேவை. சகோதரர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்வது நல்லது. மூன்றாவது நபர்கள் குடும்ப விஷயத்தில் தலையிடுவதை கண்டிப்பாகத் தவிர்ப்பது அவசியம். வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி இருக்கும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பிரச்சினை இல்லாத வாரம். சகோதர வகையில் எதிர்பார்த்த பண உதவி இழுபறிக்குப் பிறகு கிடைக்கும்.

### மீன ராசி அன்பர்களே!

உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் அதிகரித்தாலும் போதுமான பணவரவு இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் உதவியாக இருப்பார்கள். வெளியூர்ப் பயணம் தவிர்ப்பது நல்லது. அவசியம் ஏற்பட்டால் தக்க எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். சிலருக்கு வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகள் வியாபாரம் விஷயமாக உங்கள் ஆலோசனையைக் கேட்டு வருவார்கள். சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள். குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் பெண்களுக்கு பிரச்சினை எதுவும் இல்லாத வாரம். புகுந்தவீட்டு உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கி உறவு சுமுகமாகும்.

# அன்பைத் தேடி

தமிழன் சிறுகதை



கேசவன் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். அவனுக்குப் பின்னால் மூன்று பெண்பிள்ளைகள். தந்தை திடீரென ஏற்பட்ட பஸ் விபத்தொன்றினால் அகால மரணமடைந்தார். இதனால் தாய், பிள்ளைகளை வளர்க்க மிகவும் கஷ்டப்பட்டாள். ஒருநேரம் சாப்பிட்டால், மறுநேரம் சாப்பிட வழியில்லாமல் தவித்தனர்.

கேசவனின் தாய் பக்கத்து வீடுகளுக்குச் சென்று பாத்திரங்களைக் கழுவி, வீடு துப்புரவாக்கி, சமைத்துக் கிடைக்கும் ஊதியத்தில் குடும்பத்துக்காகச் செலவு செய்தாள்.

இவ்வாறிருக்கையில், ஒருநாள் தலைநகரிலுள்ள செல்வந்தக் குடும்பத்தினர் தமக்குப் பிள்ளைப்பாக்கியம் இல்லாததால் கேசவனை தந்துதவுமாறு கெஞ்சிக் கேட்டனர். ஒருதொகைப் பணத்தைக் கொடுத்தனர். மாசா மாசம் பணம் தருவதாகக் கூறினர். குடும்பச் சூழ்நிலை காரணமாக கேசவனை தலைநகருக்கு அனுப்புவதற்குத் தீர்மானித்தார் தாய்.

இத்தனை வருடங்களாக சகோதரிகளுடன் ஒன்றாக உண்டு, உறங்கி, விளையாடி மகிழ்ந்தவனுக்குப் பிரிவு எனும் புயல் வீசியதால் மிகுந்த துயருற்றான். சகோதரிகளும் கேசவனை அனுப்ப வேண்டாமென ஒப்பாரி வைத்தனர். வறுமையால் எல்லோரும் துன்பப்படுவதை விட, அவன் செல்வந்தன் வீட்டில் நிம்மதியாக வாழட்டும் எனத் தாய் நினைத்தாள்.

செல்வந்தக் குடும்பத்தினர் கேசவனை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றனர். நேரத்துக்குச் சாப்பாடு, விதவிதமான உடைகள், பாடசாலைக்கும் வாகனத்தில் ஏற்றி, இறக்கினர். மேலும் அவனுக்கு விருப்பமான அனைத்தையும் நிறைவு செய்தனர்.

ஆனாலும், கேசவனுக்குத் தன் சகோதரிகளுடன் வாழ்ந்த அனுபவமே இன்பமாக இருந்தது. கிராமத்து வாழ்க்கையிலுள்ள மனநிறைவும், சந்தோஷமும் இச்செல்வந்த வீட்டில் இல்லை. சதா வீட்டு நினைவுகளுடனே வாழ்ந்தான். அவன் கவனத்தைத் திசை திருப்புவதற்காக கடற்கரை, பூங்கா, கடைத்தெரு என அழைத்துச் சென்றனர். கடிவாளமில்லாத குதிரைபோல் நாட்கள் உருண்டோடின.

கேசவன் தன் தாய்க்குக் கடிதம் எழுதினான்.

அம்மா, இங்கு நான் எக்குறையுமில்லாமல் வாழ்கிறேன். ஆனால், தாய், சகோதர பாசத்திற்கு ஈடாகுமா? பணத்திற்காக பாசத்தை இழந்துவிட்டீர்களே! ஒரே ஒரு ஆண்மகனைத் தலைநகருக்கு அனுப்பிவிட்டு, பெண்பிள்ளைகளை உங்களோடு வைத்துள்ளீர்களே? இது எவ்விதத்தில் நியாயமாகும்? உடனடியாக என்னை அழைத்துச் செல்லுங்கள் - என எழுதியிருந்தான்.

**ஜெனீரா ஹைருல் அமான்**

கடிதத்தை வாசித்தவளுக்குத் தலையே சுற்றியது. கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்தோடியது. தவறு செய்துவிட்டேன். எனது மகனை அனுப்பியிருக்கக்கூடாது. பட்டினி கிடந்து செத்தாலும், என்னோடு வைத்திருந்திருக்க வேண்டும். அவளது மனசாட்சி அணுவணுவாக சித்திரவதை செய்தது.

கேசவனை அழைத்து வர தலைநகருக்குச் சென்றாள். அவனின் தாய் வருவதைக்கண்ட செல்வந்தக் குடும்பத்தினர், கேசவனைக் கீழே வரவிடாமல் மாடியிலேயே இருக்குமாறு கூறினர்.

வழமைக்கு மாறாகச் செய்ததில் கேசவனுக்குச் சந்தேகமேற்பட்டது. சிந்தித்தான். அப்போது... யாரோ பேசும் குரல் கேட்டது. நன்கு உற்றுக் கேட்டான்.

''எனது மகனை அழைத்துச் செல்லவே வந்துள்ளேன். இனியும் மகனைப் பிரிந்து வாழ முடியாது. அவன் நினைவிலேயே வாழ்கிறோம். கேசவனை என்னோடு அனுப்பி வையுங்கள்.'' அழுது மன்றாடினாள்.

''நீங்க இங்கே வராதீங்க. உங்களுக்கான பணத்தை ஒவ்வொரு மாதமும் அனுப்புகிறோம். அவனோடு மிக அன்பாகப் பழகிவிட்டோம். அவனப் பிரிந்து எங்களால் வாழ முடியாது. எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறோம். இப்போ அவன் எங்க பிள்ளை. அவனைத் தேடி இங்கே வராதீங்க'' - என்றனர்.

''கெஞ்சிக் கேட்கிறேன். கேசவன் நான் பெத்த புள்ள. எனது மகனை என்னோட அனுப்பலைன்னா. நீதிமன்றத்தில் சந்திக்க நேரிடும்'' - என்றாள் தாய்.

இருவரது உரையாடலையும் கேட்டுக்கொண்டிருந்த கேசவன் வெளியே வரமுடியாது தவித்தான்.

கேசவனின் தாய் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தாள். தனது மகனைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதே அவளது கோரிக்கை.

''சிறு குழந்தை என்றும் பாராமல் பணத்துக்காக மகனை விற்றவள் நீ. வளர்ந்த பின் சொந்தம் கொண்டாட வெட்கமில்லையா.'' வளர்ப்புத் தாய் வாதாடினாள்.

இறுதியில் பெற்றவளுக்கே பிள்ளை சொந்தமென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

வளர்ப்புத் தாய் சொல்லொணாத் துயருடன் கேசவனின் தாயிடம் ஒப்படைத்தாள்.

தனது மகன் கிடைத்த திருப்தியுடன் வீட்டை அடைந்தாள். சகோதரிகள் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தனர். பிரிந்தவர் சேர்ந்தால் கேட்கவும் முடியுமா..?

நாட்கள் நகர்ந்தன. வளர்ப்புத் தாயின் பாசம் நெஞ்சில் நிழலாடியது. ஒரு முறை யோசித்தான். ஏழைகள் உலகில் வாழவில்லையா? பத்து மாதம் சுமந்த பாலகனைப் பணத்துக்காக விற்ற அன்னையிடம் வாழ்வதை விட , பாசத்தோடு வளர்த்தாளாக்கிய வளர்ப்புத்தாய் மேல்.

அவளது அன்பைத் தேடிச் சென்றான். கேசவனைக் கண்டதும், அவளடைந்த பூரிப்புக்கு அளவே இல்லை.

## "பாலியல் சேட்டை"

( 1 - 8 )

தட்டுத்தடுமாறி
எழுந்துவிட்ட கோபாலு...
மெல்ல நடந்து போயி
செல்லத்தாயி மொகத்த
பாத்தா...

"ஐயோ....ஆண்டவனே...
இப்படி சீரழிச்சி விட்டுட்டானே...
அக்கரையில பஞ்சத்துல
செத்து சரி
பாடையில போயிருக்கலாம்..

நாசமத்த மண்ணில்
சீரழிஞ்சி நிக்கிறேனே
ஆண்மகனா நானிருந்து
ஒரு உருப்படியும் இல்லையே...

தெருநாய போல எம்ம
கடுச்சி கொதறிட்டானே...
தொட்டு தாலிக்கட்டி
தலை நெறய பூவ வெச்சி...
நெத்தியில குங்குமத்த,....
ஆசையா வெச்சிவிட்டு...

கைப்புடிச்ச பொண்டாட்டி
இப்ப கதி கலங்கி நிக்கிறாளே...
என்னப் பெத்த மாரியாத்தா
என்ன கொண்டு போக
கூடாதா..
கேடுகெட்ட என்னுசுரு
இப்படியே போகாதா..

அவ மொகத்த பார்க்கும்
நேரமெல்லாம்
இந்த பாவி செஞ்ச வேல
எல்லாம்
கண்ணு முன்ன நிக்குமேடி..."

என்று சொல்லி தலையிலும்
நெஞ்சிலயும் மாறி மாறி
அடிச்சிக்கிட்டு
பொலம்பி அழுகுமந்த
கோபாலு பக்கம் வாரா...
செல்லத்தாயி....

"இங்க பாருய்யா....
எம்மேல குத்தோருந்தா...
என்ன கூறு போட்டு
கொன்னுவிடு...

வெறிகொண்ட அவே வாயி
என் மார்காம்ப
கடிக்கயிலும்...

ஆடைகள அவனிழுத்து
என்ன அந்தரமா ஆக்கினப்போ
கங்காணி கூடருந்து
அந்த கேவலத்த பாக்கயிலும்...

எம்மேல அவன் விழுந்து
வெறி கொண்டு வேட்கையில
என்ன வேட்டையாடிவிட்ட
நேரத்திலும் எவ்வுசுரு
போனதய்யா..

இப்ப நான் நடமாடும்
பொணமானேன்..நீ
ஒத்த வார்த்தை சொல்லு
எவ்வுசுர விட்டுருரே"
என்று சொல்லி
கோபாலு காலடியில்
அவ விழுந்து கதறும் நேரம்...

அங்கிருந்த கல்லுக்கூட
கரைஞ்சாலும்
கரைஞ்சிருக்கும்...
வாய் திறந்தான் கோபாலு...

"என்ன பெத்த தாயி நிய்யி
ஒன்ன குத்தம் சொல்ல
மாட்டேனடி..
ஒம்மேல வெச்சதெல்லாம்
பாசம் மட்டும் தானேடி...
இனிமேலிந்த சீமை வேணாம்
எங்கேயாச்சும் பொறப்படுவோம்"
என்று சொல்லி ரெண்டு பேரும்
கலங்கயில...

தவமா தவமிருந்து அவங்க
பெத்தப்புள்ள பெத்தாயி..
சேதி என்னவென்று தெரியாமலே
மூக்கால சினுங்குகிறா....

(சொல்ல மறந்த கதை இன்னும்
சொல்லப்படும்)

தொடரும்

எம்.ராமதா
இறம்பொடை



# அசுரன்

தமிழன் தொடர்கதை



**அத்தியாயம்**

**பாலா சங்குப்பிள்ளை**

மணிகண்டனுக்கு அவ்வளவு சுமைகளையும் தூக்கிச்செல்வது சற்றுக் கஷ்டமாக இருந்தாலும் இடையிடையே சற்று நின்று ஓய்வெடுத்தவாறு பயணத்தைத் தொடங்கினான். சிறுவயதில் அவன் தந்தை செல்வம் அவனை வலது தோளில் உட்கார வைத்துக்கொண்டு தலையிலும் இடது கையிலும் அதிகம் பாரம் கூடிய மூடைகளுடன் பாட்டுப்பாடிக் கொண்டே நடப்பார். சரியாக மயானத்தை நெருங்கியதுமே

"இறந்தவனை சுமந்தவனும் இறந்துட்டான்... அதை எண்ணிப் பார்க்க முடியாம பறந்துட்டான்..."

என்று பாடுவார்.

அவன் தந்தைக்கு மணிகண்டன் ஒரே மகனாக இருந்தமையினால் பாசம் அதிகம். சம்பளம் போட்டு விட்டாலே நன்றாகக் குடித்துவிட்டு இப்படிப் பாட்டுப் பாடியவாறு நடக்கத் தொடங்கிவிடுவார். மணிகண்டனுக்கு 10 வயதாகும்போது அவன் கையைப் பிடித்தவாறு இதே மாதிரிதான் நடந்தார்.

"போனால் போகட்டும் போடா... இந்த பூமியில் நிலையாய் வாழ்ந்தவன் யாராடா..."

என்று பாடியவாறு நடந்த செல்வம், எதிரே இருந்த கல்லைப் பார்க்கவில்லை. கல்லின் மேல் இடிபட்டவர், நிலைதடுமாறி அப்படியே கீழே விழுந்தவர் நெற்றியில் இன்னொரு கல் பட ஐயோ என்ற சத்தம் மட்டும்தான் வந்தது. அதே இடத்தில் அவர் உயிர் பிரிந்தது. அப்பாவின் இறப்பு அவன் மனதில் அதிகமான பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. அதை அவனால் மறக்கவே முடியவில்லை.

மணிகண்டன் சட்டென நின்றான். அவனை யாரோ பின்தொடர்வதைப் போலிருந்தது. சட்டென திரும்பிப் பார்த்தான். அப்போது அவன் மயானத்தை அடைந்திருந்தான்.

"அடேய் மணி, உனக்கு எத்தனை முறை சொல்லுறது? இருட்டுனதுக்கு அப்புறம் சுடுகாடு பக்கம் போக வேணாம்னு. அங்கே முனி இருக்கு."

"அம்மா, முனின்னா யாரும்மா? கறுப்பா இருப்பாரே. கணக்கு சேர் அவராம்மா?"

"ஓய்... அப்படி சொல்லக்கூடாது. அது நம்ம குலதெய்வம். 6 மணிக்கு மேல அந்தப் பக்கம் யாராவது போனா அதுக்குப் புடிக்காது. அதுக்கு கரைச்சல் குடுத்தா கோபம் வந்திடும்."

அவனுக்கு எப்படியாவது முனியைப் பார்க்க வேண்டும் என்று ஆசை. அம்மாவுக்குத் தெரியாமல் 6 மணிக்குப் போய் சுடுகாட்டில் தேடிப்பார்ப்பான். கடைசிவரை அவனால் முனியைப் பார்க்கவே முடியவில்லை. ஆனால், முனி மேல் அவன் அன்பும் பாசமும் வைத்துவிட்டான். அது அவன் ஆழ்மனதில் நன்றாகப் பதிந்துவிட்டது.

அவன் மயானத்தை அடைந்ததும் சட்டென நின்றான். இன்றாவது முனியைப் பார்க்க முடியுமா? அவன் கண்களை மூடியவாறு முனியை நினைத்தான். அதனை நேரில் பார்க்காமையினால் அதற்கென்று ஒரு உருவத்தை மனதுக்குள் உருவகப்படுத்தியிருந்தான். அவன் சட்டென கண்களைத் திறந்தவன் எதிரே யாரோ நிற்பதைப்போல் இருக்கவே பதற்றமானான். பரட்டைத்தலை... ஆந்தை விழிகள்... வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் பற்கள்... சிக்குப்பிடித்த தாடி மீசை... கிழிந்து அழுக்காக தொங்கிய உடை...

"தொரே... இந்த நேரத்துல இப்படி தனியா வரலாமா? போங்க... போங்க... சீக்கிரமா போயிடுங்க..."

"ஏய் யார் நீ...? உன்னைப் பார்க்கத்தான் பயமாயிருக்கு..."

"என்னோடு பேரு காளி... ஸ்டோர்ல வேலை செஞ்சேன். மகனும் மருமகளும் என்னோட பணத்தையெல்லாம் பிடுங்கிட்டு துரத்திட்டாங்க. அதுலயிருந்து இங்கேதான் சுத்திக்கிட்டிருக்கேன்... நீ வீட்டுக்குப் போ. அங்கே உனக்கு நிறைய அதிர்ச்சிகள் காத்திருக்கு..."

சொல்லிவிட்டு அவன் மின்னலாக மறைந்துபோனான். மணிகண்டன் சற்று வேகமாக நடந்தான். கடந்த 3 வருடங்களாக அவன் தன் தாய் மற்றும் பண்பரசியுடன் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது. கடைசியாக பண்பரசியுடன் பேசும்போது அவள் அழுதுவிட்டாள்.

"நீங்க போய் ஒரு வருஷம் ஆகப்போகுது. உங்களை நேரில் பார்க்க ஆசையாக இருக்கு. எனக்கு இந்த ஆசிரியர் தொழில் ரொம்பப் பிடிச்சிப் போயிடுச்சி. அம்மா நல்லா இருக்காங்க. ரிவி வாங்கியிருக்கிறதால அம்மாவுக்கு நல்லா பொழுதுபோகுது. அப்புறம் ஒரு முக்கியமான விஷயம் இருக்கு... அதை நேர்ல சொல்லுறேன்... கவனமா இருங்க... உடம்பை பத்திரமா பார்த்துக்கங்க..."

மணிகண்டன் இரவு பகலாக உழைத்தான். அவன் முழு கவனமும் உழைப்பதிலேயே இருந்தது. எனவே, அவன் தொடர்பு கொள்வதைத் தவிர்த்தான். மேலும் தன் சொந்தத் தாயை விட முனியம்மாளை அவள் பார்த்துக்கொள்வாள்.

மணிகண்டன் சற்று வேகமாக நடந்தான். இந்த 4 வருடத்தில் அந்த தோட்டத்தில் நிறைய மாற்றம் நிகழ்ந்திருந்தது. கொங்க்ரீட் பாதை போடப்பட்டிருந்தது. லயன் காம்பராக்கள் நீக்கப்பட்டு தனித்தனி வீடுகள் கட்டப்பட்டிருந்தன. மலையக தோட்டத் தொழிலாளர்கள் மகிழ்ச்சியுடன் சந்தோஷத்துடன் இருக்கக்கூடிய காலம் ஏற்பட்டுவிட்டதை எண்ணி அவன் பெருமிதத்துடன் தன் வீட்டை நோக்கி நடந்தான். லயன்கள் ஒழிக்கப்பட்டு புதிய வீடுகள் கட்டப்பட்டிருந்தமையால் அவனுடைய வீடு எங்கே இருக்கின்றது என்பதை அந்த நேரத்தில் கண்டுபிடிப்பது சற்று சிரமமாக இருக்கும் என்று எண்ணினான். மேலும் அவன் வருவதை யாரிடமும் சொல்லவில்லை. திடீரென்று வந்து நிற்க வேண்டும். அவர்களை ஆச்சரியப்படுத்த வேண்டும். அவன் சற்றுநேரம் அந்த இடத்தில் நின்றவாறு நோட்டமிட்டான். அப்போது யாரோ ஒருவர் வீட்டினுள்ளேயிருந்து வெளியே வர அவரை நோக்கி நடந்தான். அவர் சொல்லப்போகும் தகவல் நிச்சயம் அவனை சந்தோஷப்படுத்தப் போவதில்லையென்பதை அவன் அறிந்திருக்கவில்லை.

**(தொடரும்)**

# இலங்கை - பாக். அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்;

## தொடரை சமநிலைப்படுத்துமா இலங்கை அணி




பாபர் அஸாம் தலைமையிலான சுற்றுலா பாகிஸ்தான் அணிக்கும், திமுத் கருணாரத்ன தலைமையிலான இலங்கை அணிக்கும் இடையிலான இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும் இறுதியுமான போட்டி இன்று காலை 10.00 மணிக்கு காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியானது ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. கடந்த புதன்கிழமை நிறைவுக்குவந்த முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

சர்வதேச கிரிக்கெட் பேரவையானது டெஸ்ட் போட்டிகளுக்கும் ஒரு சம்பியனை தீர்மானிக்க வேண்டும் என்கின்ற அடிப்படையில் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் என்ற பெயரில் ஒரு தொடர் கடந்த 2019ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. குறித்த ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரானது இரண்டு வருடங்களில் நடைபெறுகிறது.

இரண்டு வருடங்களில் நடைபெறுகின்ற டெஸ்ட் போட்டிகளின் அடிப்படையில் புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகி, அந்த இரு அணிகளுக்கிடையில் நடைபெறும் இறுதிப்போட்டியில் வெற்றி பெறும் அணி டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை சுவீகரிக்கும். முதல் டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து அணி சுவீகரித்தது.

இந்நிலையில், ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஓர் அங்கமாக நடைபெறுகின்ற இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியில் இலங்கை அணி முதல் போட்டியில் போராடி தோல்வியைத் தழுவியது. முதல் இன்னிங்ஸில் இலங்கை அணியின் பந்துவீச்சை சமாளிக்க திணறிய பாகிஸ்தான் அணியினர், இரண்டாவது இன்னிங்ஸில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். குறிப்பாக, ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அப்துல்லா சபீக் மிக அபாரமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார்.

இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கடந்த 1982ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டு டிசம்பர் வரையில் 20 தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் பாகிஸ்தான் அணி 9 தொடர்களை வென்றுள்ள நிலையில், இலங்கை அணி 6 தொடர்களை வென்றுள்ளது. 5 தொடர்கள் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவடைந்துள்ளன.

இலங்கை அணி கடந்த 2017ஆம் ஆண்டு பாகிஸ்தானுடன் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியதன் பின்னர் இதுவரையில் தொடரைக் கைப்பற்றவில்லை. முதல் போட்டியில் இலங்கை அணி தோல்வியை தழுவிய நிலையில், இரண்டாவது போட்டியில் வெற்றி பெற்றால் தொடர் தோல்வியிலிருந்து தப்பி தொடரை சமநிலைப்படுத்த முடியும்.

முதல் டெஸ்ட் போட்டி ஆரம்பமாவதற்கு முன்பு ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் இலங்கை அணி 54.17 வெற்றி சதவீதத்துடன் 3ஆவது இடத்திலும், பாகிஸ்தான் அணி 52.38 வெற்றி சதவீதத்துடன் 4ஆவது இடத்திலும் காணப்பட்டன. பின்னர் முதல் டெஸ்ட்டில் தோல்வியைத் தழுவிய இலங்கை அணி, 48.15 வெற்றி சதவீதத்துடன் 6ஆவது இடத்திற்கு சரிந்தது.

2021 – 2023 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை அணி இதுவரை 9 போட்டிகளில் விளையாடியுள்ளது. அவற்றில் 4 போட்டிகளில் வெற்றியீட்டி 4 போட்டிகளில் தோல்வியைத் தழுவியுள்ளது. இதில் ஒரு போட்டியை சமநிலை செய்துள்ளது. வெற்றியின் மூலம் 4ஆவது இடத்திலிருந்த பாகிஸ்தான் அணி, 58.33 என்ற வெற்றி சதவீதத்துடன் 3ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.


தற்போதுள்ள புள்ளிப்பட்டியலின் அடிப்படையில் 71.43 என்ற வெற்றி சதவீதத்துடன் தென்னாபிரிக்கா அணி முதலிடத்தில் நீடிக்கிறது. 70 என்ற வெற்றி சதவீதத்துடன் அவுஸ்திரேலிய அணி 2ஆம் இடத்தில் காணப்படுகிறது.

# கிரிக்கெட்டில் களமிறங்கிய முரளிதரனின் மகன்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரனின் மகன் நரேன் முரளிதரன் கல்லூரிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியில் களமிறங்கியுள்ளார். இவர் விரைவில் இலங்கை கிரிக்கெட் அணியில் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முத்தையாவின் மகனின் பந்துவீச்சு அவரது தந்தை போலவே உள்ளது என்றும் அவரும் விக்கெட் வீழ்த்தி சாதனை செய்வார் என்றும் கிரிக்கெட் வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இதுவரை மூன்று போட்டிகளில் விளையாடியுள்ள நரேன், 4 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூர்யவும் தனது மகனுக்கு கிரிக்கெட் நுணுக்கங்களைச் சொல்லிக்கொடுக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




# இலங்கையிலிருந்து ஐ.அ.இராச்சியத்துக்கு மாற்றப்பட்ட ஆசியக் கிண்ணத் தொடர்




இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் அடுத்த மாதம் இலங்கையில் நடைபெறவிருந்த ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு மாற்றப்பட்டது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட 6 அணிகள் பங்கேற்கும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் அடுத்த மாதம் 27ஆம் திகதிமுதல் செப்டம்பர் 11ஆம் திகதிவரை இலங்கையில் நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால், இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை காரணமாக ஆசியக்கிண்ணத் தொடரை நடத்துவதில் சிக்கல் எழுந்தது.

இலங்கை கிரிக்கெட் சபையும் எரிபொருள் தட்டுப்பாட்டை சுட்டிக்காட்டி தாங்கள் இந்தத் தொடரை நடத்த இயலாத சூழலில் இருப்பதாக ஆசிய கிரிக்கெட் சபையிடம் தெரிவித்தது.

இந்த அடிப்படையில் ஆசியக் கிண்ணத் தொடர் இலங்கையிலிருந்து ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு மாற்றப்படுவதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# கிரிக்கெட்டின் அடுத்த புதிய பரிணாமமான ' H X'






கிரிக்கெட் விளையாட்டு நாளுக்கு நாள் புதிய பரிணாமத்தில் வளர்ந்து கொண்டே செல்கிறது. ஆரம்பத்தில் 5 நாட்கள் விளையாடப்படும் கிரிக்கெட் போட்டிகளானது தற்போது வெறும் 4 மணித்தியாலங்களுக்குள் நிறைவுபெறும் அளவுக்கு அப்படியே சுருங்கிப் போயுள்ளது. கிரிக்கெட் உலகில் பலவிதமான போட்டிகள் நடைபெற்று வந்தாலும் சர்வதேச கிரிக்கெட் பேரவையானது குறிப்பிட்ட சில போட்டிகளுக்கே அனுமதி வழங்கியிருக்கிறது. சர்வதேச கிரிக்கெட் பேரவையின் விதிமுறைகளுக்கு வித்தியாசமாக ஏராளமான நாடுகளில் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறானதொரு நிலையில் கிரிக்கெட் விளையாட்டில் 'THE 6IXTY' என்ற ஃபார்மெட்டை அறிமுகம் செய்துள்ளது கிரிக்கெட் வெஸ்ட் இண்டீஸ் மற்றும் கரிபியன் பிரீமியர் லீக். இந்த ஃபார்மெட் கிரிக்கெட் விளையாட்டில் புதுப் பாய்ச்சலை கொண்டுவருமென எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 1877இல் கிரிக்கெட் உலகில் முதல் டெஸ்ட் போட்டி விளையாடப்பட்டதாக சொல்லப்படுகிறது.

அந்தப் போட்டி விளையாடப்பட்டு சுமார் 145 ஆண்டுகள் கடந்த நிலையில், த சிக்ஸ்டி என்ற ஃபார்மெட் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. டெஸ்ட் கிரிக்கெட் அப்படியே ஒருநாள், ரி20, ரி10 என கொமர்ஷியல் வடிவம் பெற்றது. இப்போது அது மற்றொரு வடிவத்தைப் பெற்றுள்ளது. இந்த புதிய ஃபார்மெட்டின் முதல் எடிஷன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் உள்ள சிறந்த கிரிக்கெட் வீரர்கள் இதில் பங்கேற்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் ஆட்டங்கள் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுவிதமான முயற்சிகளின் மூலம் ரி10 கிரிக்கெட்டை மாற்றும் வகையில் இது இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கிரிக்கெட் வெஸ்ட் இண்டீஸ் மற்றும் கரிபியன் பிரீமியர் லீக்கின் கூட்டு முயற்சியென தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இந்த ஃபார்மெட்டின் புதிய விதிகள்**

பேட்டிங் செய்யும் அணிகளுக்கு அதிகபட்சம் ஆறு விக்கெட்டுகள் வழங்கப்படும். ஆறாவது விக்கெட் வீழ்ந்தால் ஓல் அவுட்டானதாக எடுத்துக்கொள்ளப்படுமாம்.

பேட்டிங் செய்கிற ஒவ்வொரு அணிக்கும் தலா 2 பவர்பிளே ஓவர்கள் உண்டாம். முதல் 12 பந்துகளில் தொடர்ச்சியாக 2 சிக்ஸர்கள் விளாசினால் மூன்றாவது பவர்பிளேவினை பேட்டிங் செய்யும் அணிகள் அன்-லாக் செய்ய முடியுமாம். அதை 3 முதல் 9ஆவது ஓவருக்குள் பயன்படுத்தலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் பாதியில் 30 பந்துகளும் ஒரே எண்டிலிருந்து பந்து வீசப்படுமாம். அடுத்த 30 பந்துகளுக்கு மற்றொரு எண்ட் பயன்படுத்தப்படுமாம்.

ஒரு இன்னிங்ஸில் அதிகபட்சம் ஒரு பவுலர் 2 ஓவர்கள் மட்டுமே வீச முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. 30 பந்துகளில் 5 ஓவர்களாக வீசப்படுமாம்.

குறிப்பிட்ட நேரத்திற்குள் ஒரு அணிகள் 60 பந்துகளையும் வீச தவறினால் கடைசி 6 பந்துகளின்போது ஒரு ஃபீல்டர் வெளியேற்றப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு ரசிகர்கள் ஆட்டத்தின் ஒரு குறிப்பிட்ட நேரத்தை மிஸ்ட்ரி ஃப்ரீ ஹிட்டாக தெரிவு செய்வார்களாம். அந்தசமயத்தில் பேட்ஸ்மேன்கள் அவுட்டாக முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7